வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வீர மலர்



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 04 07.05.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 149 பக்கங்கள் : 20



07 இந்திய அயலுறவு அதிகாரிகளின் தொலை நோக்கின்மையின் எடுத்துக்காட்டு!



08 வீரவன்ச மறைக்கும் கதை



09 இனப்பிரச்னை தீர்வு: சம்பந்தன் அடிச்சுவட்டில் ரணில்!



10 இலங்கையில் இலஞ்ச ஊழல் முறைகேடுகளும் அவற்றிற்கெதிரான புதிய சட்டமும்!

# உயர்நீதிமன்றை நாடப்போகிறேன்!

## வெடுக்குநாறிமலையை பார்வையிட்ட சரத் வீரசேகர எம்.பி. அதிரடி அறிவிப்பு



வவுனியா, மே. 07

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் மலை விவகாரத்தில் உயர் நீதிமன்றத்தை நாடப் போவதாக மிரட்டல் தொனியில் கூறியுள்ளார் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

19

# கிழக்கு தமிழ் எம்.பிக்களை அழைக்காவிடில் ஜனாதிபதியுடன் பேச்சில் பங்கேற்பதில்லை

## கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே.07

"ஜனாதிபதியோடு இடம்பெறும் வடக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்புக்கு கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு அழைக்காவிட்டால் குறித்த கூட்டத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்கும்."

-இவ்வாறு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இதில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட். தமிழ்த் தேசியக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஜனநாயகப் போராளிகள் கட்சி என்பன பங்கேற்றன.

இதில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்டமைப்பாக இயங்குவதற்கு யாப்பு உருவாக்கப்பட்டு அடுத்த கூட்டங்களில் இறுதி செய்யப்படும்.

எதிர்வரும் 11, 12, 13 ஆம் திகதிகளில் ஜனாதிபதியோடு இடம்பெறும் வடக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்புக்கு கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு அழைக்காவிட்டால் குறித்த கூட்டத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்கும். (அ)

# அமைச்சரின் அலுவலகத்தில் அமெரிக்கத் தூதுவரின் படம்!

## பார்த்து கடுப்பாகினார் ரஷ்ய தூதுவர்

கொழும்பு, மே. 07

விவாசயத்துறை அமைச்சரின் அலுவலகத்தில் அமெரிக்கத் தூதுவரின் படத்தை பார்த்து ரஷ்ய தூதுவர் கடுப்பாகினார் என சிங்கள வார ஏடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த வார ஏட்டின் அரசியல் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ரஷ்ய தூதுவர் லெவன் டக்ராயன் கடந்த புதன் கிழமை விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமர வீரவை சந்திப்பதற்காக அமைச்சின் அலுவலகத்துக்குச் சென்றார்.

19

# கந்தரோடையில் இன்று கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பானம், மே. 07

கந்தரோடையின் வரலாற்றைச் சிங்கள பௌத்த வரலாறாகத் திரிபுபடுத்தும் நோக்குடன் திட்டமிட்ட பௌத்த விகாரை அமைப்பதற்கான முற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அதற்கு

19



லண்டனில் நடைபெற்ற பிரிட்டன் மன்னர் சார்ள்ஸின் முடி சூட்டு விழாவுக்கு சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு மன்னர் சார்ள்ஸை சந்தித்துக் கலந்துரையாடினார். முதற் பெண்மணி மைத்திரி விக்கிரமசிங்கவும் இதில் பங்கேற்றார். (அ)



# பிரித்தானிய மன்னராக சார்ள்ஸ் முடி சூடினார்!

லண்டன், மே. 07

பிரித்தானியாவின் புதிய மன்னராக மூன்றாம் சார்ள்ஸ் நேற்று முடி சூடினார்.

மூன்றாம் சார்ள்ஸின் முடி சூட்டு விழா நேற்று லண்டன் - வெஸ்ட் மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் இடம்பெற்றது.

முடிசூட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக உலக தலைவர்கள் பலர் வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்துக்கு வருகை தந்தனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க

19

# பொதுஜன பெரமுன நடத்திய மே தினக் கூட்டத்தில் மோதல்?

கொழும்பு, மே. 07

பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் பஸில் ராஜபக்ஷவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதை யடுத்து அங்கு மோதல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவரது படம் கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் படத்துடன் மேடையின் பிரதான பதாகையில்

19

# பதவிகளைத் தக்கவைக்கப் பயன்படுத்தும் ராஜதந்திரத்தை தீர்வுக்காகவும் பாவியுங்கள்

## தமிழ் அரசியல்வாதிகளிடம் டான் குழுமத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 07

"தங்களது பதவிகளைத் தக்க வைக்கப் பயன்படுத்தும் இராஜதந்திரங்களை தமிழரின் தீர்வு விடயத்திலும் தமிழ்க் கட்சிகள் பயன்படுத்த வேண்டும்."

- இவ்வாறு தமிழ் அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார் டான் தொலைக்காட்சி குழுமத் தலைவரும் எஸ். எஸ். குகநாதன்.

19

# கடன் மறுசீரமைப்பை வரவேற்கிறது ஜப்பான்

கொழும்பு, மே. 07

இலங்கைக்கான ஒருங்கிணைந்த கடன் மறுசீரமைப்பு திட்டத்தை ஜப்பானின் நிதியமைச்சர் வரவேற்றுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

19

## வடக்கு-கிழக்கு மாகாணங்கள் உட்பட

# நான்கு ஆளுநர்களை பதவி விலக பணிப்பு

கொழும்பு, மே. 07

நான்கு மாகாணங்களின் ஆளுநர்களை இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்தியுள்ளது என தெரியவருகின்றது.

கிழக்கு, வடக்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாண ஆளுநர்களுக்கே இவ்வாறு இராஜி னாமா

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**



# அத்தியாவசிய மருந்து வகைகளை நன்கொடையாக வழங்கியது ஈரான்

கொழும்பு, மே. 07

ஈரான் குடியரசு 1.8 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட புற்றுநோய் மருந்துகள் உட்பட அத்தியாவசிய மருந்துகளை இலங்கை அரசாங்கத்துக்கு சுகாதார அமைச்சின் ஊடாக நன்கொடையாக வழங்கியுள்ளது.

ஈரானிய தூதுவர் ஹாசிம் அஷிட் இந்த மருந்துப் பொருட்களை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்த நன்கொடையின் கீழ், நாட்டில் புற்றுநோய், இதய நோய், தோல் நோய், வைரஸ் தொற்று, உயர் இரத்த அழுத்தம், பார்கின்சன் போன்ற பல நோய்களுக்கான மருந்துகள் உட்பட பல அத்தியாவசிய மருந்துகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது இவ்வாறான அத்தியாவசிய மருந்துகளை பெற்றுக் கொள்வது பெரும் நிவாரணம் அளிப்பதாகவும், அதற்காக ஈரான் மக்களுக்கும் ஈரான் குடியரசிற்கும் இலங்கை பிரஜைகள் சார்பாக மிகவும் நன்றி தெரிவிப்பதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# அசோக் லேலன்ட் பேரூந்துகளில் பயணித்த மெல்பேர்ண் பயணிகள்

கொழும்பு, மே. 07

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரில் இருந்து கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை நோக்கிப் பயணித்த சிறிலங்கன் ஏர்லைன்ஸூக்கு சொந்தமான விமானம், மோசமான காலநிலை காரணமாக மத்தளை விமான நிலையத்துக்கு திருப்பி விடப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பயணிகளில் ஒருவர் சமூக ஊடகங்களில் காணொளி ஒன்றை வெளியிட்டு, அவர்களை மீண்டும் கட்டுநாயக்கவுக்கு அழைத்து வர திட்டமிடப்பட்டிருந்ததாகவும், ஆனால் விமான நேரம் முடிந்ததால் அதனைச் செய்ய முடியாது என்று பயணிகளிடம் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர் என்றும் குறிப்பிட்டுள் ளார்.

எனினும் சில மணித்தியாலங்களின் பின்னர் அசோக் லேலண்ட் பேரூந்துகள் மூலம் பயணிகள் குழுவொன்று கொழும்புக்கு அழைத்து வரப்பட்டதாக கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன. (அ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் 7 மாணவர்களுக்கு சைக்கிள்



யாழ்ப்பாணம், மே. 07

வடமராட்சி செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் 357,000 ரூபா பெறுமதியான சைக்கிள்கள் ஏழு மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் வாராந்தம் நடத்தப்படும் சிறப்பு சொற்பொழிவு நிகழ்வில் வைத்தே சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

கலைமதி வீதி, புத்தூரைச் சேர்ந்த தரம்-07 மாணவிக்கும், வட்டுவினி ஒழுங்கை, இணுவில் மேற்கை சேர்ந்த தரம்-10 மாணவிக்கும், பொன்னாலை தெற்கு, பொன்னாலையை சேர்ந்த யாழ் பல்கலைக்கழக மாணவிக்கும், ஊரெழு மேற்கு, சுன்னாகத்தை சேர்ந்த உயர்தர மாணவனுக்கும், புத்தூர் கிழக்கு, புத்தூரை சேர்ந்த தரம்-09 மாணவனுக்கும், புன்னாலைக்கட்டுவன், சித்திவிநாயகர் பாடசாலையில் கல்வி கற்கின்ற தரம் - 10, தரம்-8 ஆகிய இரு மாணவர்களுக்குமே இவ்வாறு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இச் செயற்றிட்ட உதவிகளை கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், இந்தியா கோயம்புத்தூர் சைவ சித்தாந்த பேராசிரியர் மீ சண்முகம் , ஆச்சிரம தொண்டர்கள், வழங்கினர்.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகிகள், தொண்டர்கள், அடியார்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ-2)

# தையிட்டி விகாரை தொடர்பில் அறிக்கை கோரினார் அமைச்சர்

## அதன் பின்னரே தீர்வு குறித்து முடிவு

யாழ்ப்பாணம், மே. 07

தையிட்டி விகாரை அமைக்கப்பட்டமை தொடர்பாக முழுமையான அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னரே இந்த பிரச்சனைக்கான தீர்வு வழங்கப்படும் என புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

சட்டவிரோதமாக தனியார் காணிக்குள் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்த போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பாக அமைச்சரிடம் எழுப்பட்ட கேள்விக்கே இவ்வாறு பதில் வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு மற்றும் கிழக்கில் இவ்வாறான பிரச்சனைகள் தொடர்ந்தும் ஏற்படுகின்றன. இதற்கான அடிப்படை காரணம் என்ன என்பது எமக்கு தெரியவில்லை.

அரசியல்வாதிகள் தமக்கான வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே இவ்வாறு செயற்படுகின்றனர்.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர் ஆலய விவகாரத்திலும் இவ்வாறே இடம்பெற்றது.

அவர்களாகவே சென்று ஆலயத்தை உடைத்து அதனை நாம் உடைத்ததாகக் குறிப்பிட்டனர்.

எம்மை இனவாதிகளெனக் கூறுபவர்கள் இறுதியில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உடைந்து விழுந்த கோவில்களை எமது முயற்சியில் மீளப் புனரமைத்தமை தொடர்பில் எவரும் பேசவில்லை.

எம்மால் முன்னெடுக்கப்படும் இவ்வாறான விடயங்கள் ஒருபோதும் ஊக்குவிக்கப்படுவதில்லை.

சட்டங்களினூடாக மதத்தைப் பின்பற்று வதற்கு மக்களுக்குள்ள சுதந்திரத்தை மட்டுப் படுத்த நாம் விரும்பவில்லை.

இவ்வாறான மத விவகாரங்கள் தொடர்பில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனில் அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற சட்டத்தை அறிமுகப்படுத்தலாம்.

ஆனால் அனைவரும் மூத்தோர் என்ற அடிப்படையில் எம்மால் ஒழுக்கமாக நடந்து கொள்ள முடியுமல்லவா?

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறான பிரச்சனைகள் இடம்பெறும் இடத்துக்குச் சென்றால்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பிரிவினரும் அங்கு செல்கின்றனர். அதனைத் தொடர்ந்து ஏனைய கட்சிகளும் அங்கு செல்கின்றன. வாக்குகளுக்காக அனைவரும் இவ்வாறு செயற்படுகின்றனர். மாறாக மக்கள் இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்துவதில்லை - என்றார். (அ)

# வான்பாயும் நீர்த்தேக்கங்கள்

கொழும்பு, மே. 07

மழையுடனான வானிலை காரணமாக சில நீர்த்தேக்கங்கள் வான்பாய்ந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழலில் தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகளும், வெஹெரகல நீர்த்தேக்கத்தின் 4 வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவு பணிப்பாளர் சுதர்ஷனி விதானபத்திரண தெரிவித்தார்.

நிலவும் மழையுடனான வானிலை மேலும் அதிகரிக்குமாயின் ஏனைய வான் கதவுகளையும் திறக்கவேண்டிய நிலை ஏற்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக மாணிக்க கங்கையைப் பயன்படுத்தும் தாழ்நில மக்கள் மிகக் கவனமாகச் செயற்படவேண்டும் என அவர் அறிவுறுத்தினார். (அ)

# நாய்களுக்கு மயக்க மருந்து தெளித்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்து திருடர்கள் கைவரிசை!

யாழ்ப்பாணம், மே. 07

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலைப் பகுதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை சுமார் 15 பவுன் தங்க நகை திருடப்பட்டுள்ளது.

அதிகாலைவேளை வீட்டில் இருந்தவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளை வீட்டின் ஜன்னல் கம்பியை வளைத்து கொள்ளையர்கள் உள்நுழைந்துள்ளனர்.

இவ்வாறு நுழைந்தவர்கள் வீட்டில் தாலிக்கொடி உட்பட சுமார் 15 பவுண் நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் இரண்டு நாய்கள் இருந்த நிலையில் அவற்றுக்கு மயக்க மருந்து விசிறப்பட்டு திருடர்கள் உள்நுழைந்ததாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்!

கொழும்பு, மே. 07

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில்ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழமுக்கம் மேலும் அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் மூன்று நாட்களில் மழைவீழ்ச்சி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டின் மேற்கு, சப்ரகமுவ, வடமேற்கு மற்றும் தெற்கு உட்பட பல பிரதேசங்களில் தற்போது மழையுடன் கூடிய காலநிலை நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகபட்சமாக நீர்கொழும்பில் 31.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வரும் அறிவிப்புகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு மீனவ மற்றும் கடற்படை சமூகத்தை வளிமண்டலவியல் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# ஆறுகளில் நீர்மட்டம் சடுதியாக உயர்ந்தது

கொழும்பு, மே. 07

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக அத்தனகலு ஓயா, களனி, நில்வலா, களு மற்றும் கிங் ஆகிய ஆறுகளில் தற்போது உயர் நீர்மட்டம் காணப்படுவதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

மழைவீழ்ச்சியின் அடிப்படையில், அடுத்த 24 மணித்தியாலங்களில் எந்தவொரு பெரிய ஆற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பிரதான நீர்ப்பாசன நீர்த்தேக்கங்களும் தற்போது 67 வீதம் நிரம்பியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நிலவும்மழையுடனான காலநிலை காரணமாக, இலங்கையின் பல பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பை, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நீடித்துள்ளது.

# விலகுகிறார் மஹேல

கொழும்பு, மே. 07



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் மஹேல ஜெயவர்தன தேசிய விளையாட்டுச் சபைத் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மஹேல, விளை யாட்டுச் சபையின் தலைவர் பொறுப்புக்கு நியமிக்கப்பட் டார்.

பதவி விலகுவதற்கான காரணங்கள் வெளியிடப்படாத நிலையில், விளையாட்டுச் சபையின் தலைவர் மஹேல உள்ளிட்ட உறுப்பினர்கள் பதவி விலகுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(அ)

# இலங்கை அரசு தற்போது பின்பற்றிவரும் அணிசேரா கொள்கையை மதிக்கிறோம்!

## ரஷ்யத் தூதுவர் பாராட்டு

கொழும்பு, மே 07

**இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இலங்கை அரசாங்கம் தற்போது பின்பற்றும் அணிசேரா கொள்கையை தாம் மதிப்பதாக இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவான் எஸ்.டகர்யான் தெரிவித்தார்.**

மேலும், உக்ரைன் நாட்டை மாத்திரமின்றி யுத்தத்துக்கு அனுசரணை வழங்கும் ஏனைய மேற்குலக நாடுகளையும் ரஷ்யா மீண்டும் தோல்வியடையச் செய்யும் எனவும் அவர் குறிப்பிட் டார்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது உயிர் நீத்த ரஷ்ய இராணுவத்தினரை நினைவு கூரும் வகையில் கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகத்தினால் தேசிய பொது நூலகத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி அருகே நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணவர்தனவும் கலந்து கொண்டார்.

இதன்போது உரையாற்று கையிலேயே ரஷ்ய தூதுவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஏற்படுத்தப்பட்ட அழிவுகளை எதிர்கொண்டு உயிர் நீத்த இராணுவ வீரர்களை நினைவு கூரும் நிகழ்வு உலகளாவிய ரீதியில் 11 நாடுகளில் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த 11 நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குகிறது. இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அதற்கு ரஷ்ய அரசாங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று இலங்கை அரசாங்கம் தற்போது பின்பற்றுகின்ற அணிசேரா கொள்கையை நாம் மதிக்கின்றோம். தற்போது ரஷ்யாவில் மீண்டும் யுத்த நிலைமை ஏற்பட்டுள்ளது. உக்ரைன் மாத்திரமின்றி மேற்குலக அனுசரணையாளர்களையும் மீண்டும் தோல்வியடைச் செய்ய தயாராகவுள்ளோம்.

எனவே, அவர்கள் மீண்டும் ரஷ்யாவுக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்தால் 1945 ஐ போன்று நாம் அவர்களை தோல்வியடைச் செய்வோம். நாம் இந்த யுத்தத்தை தோல்வியடைச் செய்வோம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை-என்றார். (அ)

# வேட்புமனு சமர்ப்பித்த அரச ஊழியர் செவ்வாய் முதல் மீண்டும் கடமைக்கு

கொழும்பு, மே. 07

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுவைச் சமர்ப்பித்த அரச ஊழியர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் சேவையில் இணைக்கப்படவுள்ளனர்.

அவர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்த தொகுதியில் இல்லாமல் வேறு தொகுதியில் பணியாற்ற முடியும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

இது தொடர்பான சுற்றறிக்கையை தேசிய தேர்தல் ஆணைக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்ப இராஜாங்க அமைச்சரின் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த அரச ஊழியர்களுக்கு அவர்களின் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்து சகல கொடுப்பனவுகளும் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர கூறினார். (அ)

# 9,000 இற்கும் அதிகமான மக்கள் சீரற்ற காலநிலையால் பாதிப்பு

கொழும்பு, மே. 07

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையினால் 11 மாவட்டங்களில் 9,000 இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், புத்தளம், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, பதுளையில் மழை மற்றும் பலத்த காற்றினால் 2,249 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் வெள்ளத்தினால் 2,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 71 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தற்காலிக தங்குமிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களில் நிலவும் மோசமான வானிலை காரணமாக மூன்று வீடுகள் இடிந்துள்ளதுடன் 82 வீடுகள் சேதமடைந்துள்ளன. (அ)

# இந்திர விழாவில் வானில் பறக்கவிடப்பட்ட புகைக் கூண்டு வீட்டின்மீது வீழ்ந்து விபத்து

யாழ்ப்பாணம், மே. 07

வல்வெட்டித்துறை முத்து மாரியம்மன் ஆலய இந்திர விழாவில் வானில் பறக்கவிடப் பட்ட புகைக் கூண்டு ஒன்று பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் வீடு ஒன்றின் மீது விழுந்துள்ளது.

வல்வெட்டித்துறை முத்து மாரியம்மன் ஆலயத்தின் வரு டாந்த திருவிழாவின் கொடி யிறக்கத் திருவிழாவின் இந்திர விழா உற்சவம் நேற்று முன்தினம் இரவு 07 மணியளவில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

இதில் முத்துமாரியம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களை முத்துப்பல்லாக்கில் பக்தர்கள் சுமந்தவண்ணம் வீதி உலா வந்தனர்.



இதன்போது வானில் பறக்க விடப்பட்ட புகைக் கூண்டு ஒன்று பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் வீடு ஒன்றின் மீது விழுந்ததால் வீட்டின் மேற் தட்டில் தீ விபத்து ஏற்பட்டது. (அ)





# யாழ். இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் சிறப்புற நடந்தது பரத நாட்டிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், மே. 07

நல்லைக் கலாமந்திர் நாட்டிய பள்ளி இயக்குநர் அனு சாந்தி சுகிர்தராஜின் மாணவி யாழினி வைபோகராஜாவின் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து ராதாகிருஷ்ணன் கலந்துகொண்டார்

மூத்த நடன ஆசிரியர்களான கொக்குவில் கலாபவன இயக்குநர் கலாகீர்த்தி சாந்தினி சிவனேசன், திலக நர்த்தனாலய அதிபர் கலாபூஷணம் யசோதரா விவேகானந்தன், உரும்பையூர் நல்லினி சிவராம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும்,

திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோன்சன் ராஜ்குமார், இசை ஆசிரியர் வாசஸ்பதி ரஜீந்திரன், யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் புவனா வேல்நிதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் அணி சேர் கலைஞர்களாக நட்டுவாங்கம் - கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார், பாட்டு- தவநாதன் றொபேட், மிருதங்கம் - ஞானவாரிதி சி. துரைராஜா, வயலின் - சுருதி வேந்தன் அம்பலவாணர் ஜெயராமன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் கல்வி பயின்ற யாழினி ஆர்வத்தின் காரணமாக நடனத்தை பயின்று அரங்கேற்றம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# 33,000 லீற்றர் டீசலுடன் ஹப்புதளையில் எரிபொருள் கொள்கலன் தடம் புரள்வு

கொழும்பு, மே. 07

ஹப்புத்தளை பத்கொட பகுதியில் நேற்று அதிகாலை எரிபொருள் கொள்கலன் ஒன்று விபத்துக்குள்ளாகியது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து, 33 ஆயிரம் லீற்றர் டீசலுடன் ஹப்புத்தளை நோக்கிப் பயணித்த குறித்த எரிபொருள் கொள்கலன், வீதியை விட்டுவிலகிச் சென்று அருகில் உள்ள வீடொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதன்போது, காயமடைந்த குறித்த கொள்கலன் உதவியாளர் பங்கட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் தியத்தலாவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த விபத்தினால், குறித்த வீட்டுக்குச் சேதம் ஏற்பட்டுள்ள நிலையில், வீட்டிலுள்ளவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்தினால், குறித்த டீசல் கொள்கலனில் கசிவு ஏற்பட்டதை அடுத்து, அதிலிருந்து டீசல் வெளியேறுவதாகவும், குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவானோர் அதனை நிரப்பிச் செல்வதை அவதானிக்க முடிவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)



# கல்வி மறுசீரமைப்பு மிக அவசியமானது!

## பொதுநலவாய அமைப்பிடம் ஒத்துழைப்பு கோரினார் ரணில்



**லண்டன், மே. 07**

**இலங்கையில் கல்வி மறுசீரமைப்பு மிகவும் அவசியம். எனவே அதற்கு பொதுநலவாய அமைப்புகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.**

லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது பாரியார் ஆகியோர் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டுள்ளனர்.

இளையோரின் பங்கேற்பு மற்றும் கல்வி மறுசீரமைப்பு ஆகியவற்றுக்கு பொதுநலவாய அமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அத்துடன் டிஜிற்றல் மயமாக்கல் ஊடாக தொடர் பாடல்களை வலுப்படுத்தி கொள்ளவேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, கானா நாட்டின் ஜனாதிபதியுடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, இந்த நிகழ்வுக்கு இணையாக நடைபெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டார். (அ)

# ராஜபக்ஷர்களை ஓரங்கட்ட ஜனாதிபதி ரணில் திட்டம்!

## கூறுகிறார் உதய கம்மன்பில




கொழும்பு, மே. 07

ஜனாதிபதித் தேர்தலில் தனது வெற்றிக்கு இடையூறாக இருக்கும் மக்கள் ஆதரவு குறைந்த ராஜபக்ஷர்களை ஓரங்கட்டுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கலாம் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களால் பெருமளவில் நிராகரிக்கப்படும் ராஜபக்ஷர்கள் தனது வெற்றிக்கு இடையூறாக இருக்கலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருதுகின்றார்.

நாட்டில் மிகவும் மக்கள் ஆதரவு குறைந்த ஒருவராக பஸில் ராஜபக்ஷ இருக்கின்றார். அவரே பொதுஜன பெரமுனவின் தலைவர் ஆவார். இதனால் தனக்கு சுமையாக இருப்பவர்களை எவ்வாறு இல்லாமல் செய்வது என்பதனை ஜனாதிபதி சிந்திக்கலாம்.

மேலும், தற்போதைய நிலைப்பாட்டின்படி சமகால அரசாங்கத்துடன் எந்த கொடுக்கல் வாங்கலும் கிடையாது - என்றார்.

# வனவிலங்குப் பாதுகாப்புடன் மக்களின் உரிமைகளும் காக்கப்படுதல் அவசியம்

## அமைச்சர் பவித்ரா வலியுறுத்து

கொழும்பு, மே. 07

வனவிலங்கு பாதுகாப்புடன் மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் வனவிலங்கு வளங்களை பயன்படுத்தி அதிகளவான அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ளமுடியுமென வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார்.

வனவிலங்கு உத்தியோகத்தர்களின் விபத்துக்கள் மற்றும் உயிரிழப்புகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கிரித்தலையில் வனவிலங்கு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமொன்றின் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அமைச்சராகப் பதவியேற்று மூன்று மாதங்களுக்குள் வன ஜீவராசிகள் திணைக்கள அதி காரிகளின் பல உள்ளகப் பிரச் னைகளுக்குத் தீர்வு காண தாம் உழைத்ததாகவும், அந்த அதிகா ரிகள் தமது கடமைகளை திருப்திகரமாகச் செய்யாவிட் டால் நிறுவனத்தை நடத்த முடியாது எனவும் அமைச்சர் குற்றம் சுமத்தினார்.

இந்த நிறுவனத்தைப் பராமரிப்பது அனைவரின் பொறுப்பு என்றும், இந்த நிறுவனத்தைப் பராமரிக்க திணைக்கள அதிகாரிகள் கொஞ்சம் பணம் வசூலித்து வெளியாட்களுக்கு வழங்கினால் தினசரி பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

உலகின் பெரும்பாலான நாடுகளில் உள்ள மக்கள் குளிர் காலநிலையால் கஷ்டப்பட்டு வாழ்கின்றனர். ஆனால் இலங்கை மக்கள் அவ்வாறான நிலைமைகள் இன்றி வாழும் பாக்கியம் பெற்றுள்ளனர் என்பதுடன், குளிர் காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இது மிகவும் மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# திருமலையில் யானை தாக்குதல் சிவில் பாதுகாப்பு அலுவலர் பலி!

திருமலை, மே. 07

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோமரங்கடவல பகுதியில் யானையின் தாக்குதலினால் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

யானையின் தாக்குதலினால் கோமரங்கடவல -கரக்கஹவெவ பகுதியில் வசித்து வரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆனந்த காமினி வத்தேவெவ (வயது-44) என்பவரே உயிரிழந்தார்.

கோமரங்கடவல ரிதீபுர பகுதியில் கடந்த ஒரு வார காலமாக யானையின் அட்டகாசம் அதிகரித்து வந்த நிலையில் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் இணைந்து கிராம மக்கள் யானையை விரட்டுவதற்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் யானை குறித்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கியதாகவும் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கோமரங்கடவல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சிறி சபாரத்தினம் நினைவு மன்னாரிலும் அனுஷ்டிப்பு



மன்னார், மே. 07

தமிழீழ விடுதலை இயக்கம் டெலோ கட்சியின் தலைவர் சிறிசபாரத்தினம் மற்றும் அவருடன் உயிர் நீத்த போராளிகள் பொதுமக்களின் 37 ஆவது நினைவு தினம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மன்னாரில் இடம்பெற்றது.

ரெலோவின் மன்னார் மாவட்ட தலைமை அலுவலகத்தில் அதன் மாவட்ட அமைப்பாளர் ஏ.ரி.மோகன்ராஜ் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது முன்னாள் தலைவர் சிறிசபாரத்தினம் மற்றும் உயிர் நீத்த போராளிகள், பொதுமக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் ரெலோ கட்சியின் பிரசார செயலாளர் கணேசலிங்கம் சொக்கன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் ரெட்ணசிங்கம் குமரேஸ், ரெலோ கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# கியூபாவை கிண்டலடித்த வஜிர!

கொழும்பு, மே. 07

கொழும்பில் கடந்த வருடம் காலிமுகத்திடல் போராட்டம் காரணமாக மே தினத்தைக் கூட சரியாக நடத்த முடியவில்லை. அன்று கியூபாவை பற்றிப் பெருமையாக பேசியவர்கள், இன்று கியூபாவில் எண்ணெய் இல்லாமல் மே தினத்தைக் கொண்டாட முடியாமல் இருக்கின்றது என்று ஒரு வார்த்தைகூட பேசவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான வஜிர அபேகுணவர்த்தன சிரித்துக் கொண்டே கூறினார். (அ)

# மழை தொடர்ந்து பெய்வதால் தொற்றுநோய்கள் அதிகரிப்பு

## சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை

கொழும்பு, மே. 07

மழை காலம் தொடர்வதால் காய்ச்சல், டெங்கு, வயிற்றுப் போக்கு மற்றும் எலிக்காய்ச்சல் என தொற்று நோய்கள் அதிகரித்து வருவதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இன்புளுவன்சா நிலைமையை கட்டுப்படுத்த வீட்டில் இருந்தாலும் முக்கவசம் அணிவது மிகவும் அவசியம் என சிறுவர் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

வயிற்றுப்போக்கு நோய்கள் வராமல் இருக்க உணவு உண்ணும்போது கவனமாக இருக்குமாறு அவர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.



இதேவேளை, எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருப்பதாக சுகாதாரத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை சுமார் 2,600 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவின் சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் துஷானி தாபரே தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு எலிக்காய்ச்சல் இருப்பதாக சந்தேகம் இருந்தால் அருகில் உள்ள சுகாதார மருத்துவ அலுவலகம் அல்லது பொது சுகாதார ஆய்வாளரை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
07.04.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 24

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

# சிங்கள ராஜதந்திரத்தின் தொடர் வெற்றி?

குருந்தூர் மலையில் சில நாட்கள் தமிழ் அரசியல்வாதிகள் முகாமிட்டனர். ஆனாலும் குருந்தூர் மலையில் விகாரை கட்டப்படுவதை தடுக்க முடியவில்லை. பின்னர் வெடுக்குநாறி மலை உச்சியில் குழுமினர்- உடைக்கப்பட்ட சிவலிங்கத்தை மீளவும் வைப்பதற்கு அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து, அந்த விடயம் முடிவுக்கு வந்தது. இப்போது தையிட்டியில் கட்டப்பட்ட விகாரையை எதிர்த்து, அங்கு குழுமி, இது யாருடைய காணி - இதில் எவ்வாறு விகாரை கட்டாலாமென்று கேள்வியெழுப்பிக் கொண்டிருக்கின்றனர். அதுவும் விகாரை கட்டப்படும் வரையில் அமைதியாக இருந்துவிட்டு, இப்போது சத்தமிடுகின்றனர்.

ஆனால் சிங்கள ஆளும் வர்க்கமோ, தமிழ் அரசியல்வாதிகளின் சத்தங்கள் எவற்றையும் பொருட்படுத்தாமல், அவர்களது வேலையை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது. ஆனால் மறுபுறும் தமிழ் அரசியல் வாதிகளோ, பருவகாலத்தில் படையெடுக்கும் பறவைகள் போன்று, புத்தர் சிலை, விகாரை இவற்றுக்கு அப்பால் எந்தவொரு பிரச்னையும் இல்லையென்பது போல், செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தமிழர்களை இப்போது சிங்கள ராஜதந்திரம் எந்த இடத்தில் நிறுத்தியிருக்கின்றது? ஒரு காலத்தில், சிங்களவர்களை மோடர்கள் என்று கூறிக்கொள்வதில் யாழ்ப்பாணத்தவர்கள் குதூகலமடைந்த காலமொன்று இருந்தது. ஆனால் வரலாற்றின் தராசில் தமிழர்களின் மேதமை பெறுமதியற்றதாகிக் கொண்டே செல்கின்றது.

ஒரு புறம் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வை காணப் போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். இது தொடர்பில் தமிழ் கட்சிகளை பேச்சுக்கு அழைக்கின்றார். ஆனால் மறுபுறமோ, தமிழ் கட்சிகளின் தலைவர்கள் விகாரைகளுக்கு முன்னால் அமர்ந்து, நீதி கோரிக் கொண்டிருக்கின்றனர். விகாரைகளை தாண்டி அவர்களால் சிந்திக்க முடியவில்லை.

யுத்தத்திற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் என்பது, அடிப்படையில், நீதியை கோரும் அரசியலாகவே தன்னை முன்வைத்தது. ஆனால் நீதியை கோரும் அரசியலை முன்னெடுக்கும் தமிழ் அரசியல்வாதிகளில் பலரும், புலம்பெயர் அமைப்புக்களில் பலவும் விடுதலைப் புலிகளின் விசுவாசிகளாகவே, தங்களை முன்னிறுத்தி வருகின்றனர். அதிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினரோ, ஒரு படி மேல் சென்று, விடுதலைப் புலிகளின் நீட்சியாகவே தங்களை முன்னிலைப்படுத்த முயற்சித்து வருகின்றனர். அதற்கான தகுதி தங்களுக்கு மட்டுமே இருப்பதாகவும் கூறிக்கொள்கின்றனர்.

ஆனால் இந்த இடத்தில் நீதி கோரும் தமிழ் தேசிய அரசியல் தர்க்கரீதியில் பலவீனமான ஒன்றாகவே இருக்கின்றது. யுத்தம் முடிந்து, 14 வருடங்கள் கடந்த பின்னரும் கூட, விடுதலைப் புலிகள் தொடர்பான சர்வதேச பார்வையில் ஒரு சிறிய மாற்றமும் ஏற்படவில்லை. இப்போதும் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் ஜரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாகவே நோக்குகின்றது. விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது சிறிய கருணையை கூட அவர்கள் காண்பிக்கத் தயாராக இல்லை. 32 நாடுகளில் விடுதலைப் புலிகள் இப்போதும் ஒரு பயங்கரவாத அமைப்பு.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் விசுவாசிகளாக காண்பித்துக் கொள்ளும் தமிழ் தேசிய அரசியல் கோரும் நீதியை, மேற்குலகம் எவ்வாறு புரிந்துகொள்ளும்? விடுதலைப் புலிகள் மீதான ஆதரவும், தமிழர்களின் நீதி கோரும் செயல்பாடும் ஓரிடத்தில் இருப்பது சிக்கலானது. 2009இற்கு பின்னரான, தமிழ் அரசியல் லொபியில் இது ஒரு சிக்கலான கூறாகும். இது தொடர்பில் தமிழ் புத்தஜீவிகள் என்போரிடமும் தெளிவான அரசியல் புரிதலில்லை. பெரும்பாலானவர்கள், அரசியலில், மதில் மேல் பூனையாக இருக்க முயற்சிப்பதால் விடயங்களை ஆழமாக நோக்கத் தவறிவிடுகின்றனர். மதில் மேல் பூனையாக இருப்பது சுகமானதொரு நிலைப்பாடாகும். எப்போது வேண்டுமானாலும் எந்தப் பக்கத்திற்கும் தாவிக் கொள்ளலாம். ஆனால் தமிழ் சமூகம் முன்னோக்கி பயணிப்பதற்கு, இவ்வாறானவர்களால் ஒரு போதுமே பங்களிக்க முடியாது. இதனை சிங்கள ஆளும் வர்க்கம் மிகவும் திறம்பட பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது. தமிழர்களை விகாரைகளை தாண்டி சிந்திக்க முடியாதளவுக்கு முடக்கியிருக்கின்றது.

# யாழ். தமிழ் மக்களை இனிமேலும் முன்னணியால் ஏமாற்றமுடியாது!

## கூறுகின்றார் ரெலோ பேச்சாளர்

*யாழ்ப்பாணம், மே. 07*

*யாழ்ப்பாணத் தமிழ் மக்களை இனியும் தமிழ்த் தேசிய முண்ணனியினரால் ஏமாற்றமுடியாது என ரெலொ பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்தார்*

*ரெலோ இயக்கத்தின் முன்னாள் தலைவர் சிறிசபாரத்தினத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*அண்மையில் மிகப் பெரிய ஒரு கதவடைப்புப் போராட்டத்தை வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் நடத்தினோம். பாரிய போராட்டமாக தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களின் ஆதரவோடு முதற் தடவையாக அதை நடத்திக் காட்டி இருந்தோம்.*



*எதற்காக அதனை செய்திருந்தோம் என்பதை அறியாத தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அந்த ஹர்த்தாலை எள்ளி நகையாடினார்கள். தமிழ் மக்களின் உணர்வை எள்ளி நகையாடினார்கள். அதன் விளைவு இன்று தெரிகிறது*

*தமிழ் மக்களின் உணர்வுகளை எள்ளி நகையாடியவர்கள் இன்று தையிட்டியில் விகாரை கட்டி முடிந்து கலசம் வைத்த பின் விகாரையை இடித்துவிடப் போகின்றோம் என தமிழ் மக்களை ஏமாற்றும் அரசியலில் ஈடுபட்டுள்ளனர்.*

*நாளை சாவகச்சேரியில், நெடுங்கேணியில் விகாரை வரும். எல்லா இடங்களிலும் வரும். இவ்வாறு தனித்தனியே போராடப்போகின்றோமா அல்லது மக்களை ஒரு தேசமாக ஒருங்கிணைத்து இவற்றைத் தடுத்து நிறுத்தப்போகின்றோமா என்பதுதான் எமது கேள்வி.*

*அதற்காகத்தான் நாங்கள் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளையும் புலம்பெயர் அமைப்புகளையும் ஒன்று சேர்ந்து ஹர்த்தாலை ஏற்பாடு செய்திருந்தோம்.*

*அதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் இன்று தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற அரசியல் போராட்டத்தை தையிட்டியில் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.*

*தமிழ் மக்கள் குறிப்பாக யாழ்ப்பாண தமிழ் மக்கள் இவ்வாறான ஏமாற்று அரசியல் செய்பவர்களை முற்று முழுதாக நிராகரிக்கவேண்டும்.*

*சரியான தலைமையைத் தெரிவு செய்யவேண்டும். தமிழ் மக்களின் எதிர்காலத்தை பாதுகாக்கக்கூடிய தலைவர்களை அடையாளம் காண வேண்டும்-என்றார். (அ)*

# நாட்டை விட்டு வெளியேறும் பல்கலை விரிவுரையாளர்கள்

## விரிவுரையாளர்கள் சம்மேளனம் தகவல்

*கொழும்பு, மே. 07*

*நாட்டிலுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களில் அதிகமானோர் நாட்டை விட்டு வெளியேற ஆரம்பித்துள்ளதாகப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் சியாம் பன்னேஹக்க தெரிவித்தார்.*

*இதன் காரணமாகப் பல்கலைக்கழக அமைப்பு பாரிய நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*கடந்த 5 வருடங்களை விடக் கடந்த சில மாதங்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சடுதியாக நாட்டை விட்டு வெளியேற ஆரம்பித்துள்ளனர்.*

*அரசாங்கம் உடனடியாக தலையிட்டு வெளிப்படையாகக் கலந்துரையாடி இப்பிரச்னைக்குத் தீர்வை வழங்கவேண்டும்.*

*பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது அதிகரித்துள்ளதாலும், அரச சேவைக்குப் புதிதாக ஆட்களை இணைத்துக் கொள்ளாத அரசாங்கத்தின் முடிவினாலும் பல்கலைக்கழக கல்வித்துறை பெரிதும் ஆட்டம் கண்டுள்ளது.*

*களனி பல்கலைக்கழகத்தில் சுமார் 150 வைத்தியர் வெற்றிடங்களும் பேராதனை பல்கலைக்கழகத்தில் சுமார் 100 வைத்தியர் வெற்றிடங்களும் உள்ளது.*


*மேலும், சில பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளை நடத்துவதற்கு போதிய விரிவுரையாளர்கள் இல்லை.*

*அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிவிதிப்பு முறையினால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சுமார் 36 சத வீதமானோர் வரி சுமைக்கு உள்ளாகியுள்ளனர்.*

*ஆனால் அவர்கள் சம்பளத்துக்கு ஏற்றவாறு செலவுகளை நிர்வகித்தாலும், இந்த நியாயமற்ற வரிக் கொள்கையால், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முன்பு செலுத்திய வரித் தொகையைவிட மூன்று மடங்கு அதிகம் சுமையை எதிர்கொள்கின்றனர்.*

*இதன்படி, சில விரிவுரையாளர்களின் சம்பளம் மறை நிலைக்குச் சென்றுள்ளது. நாட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை - என்றார். (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -77

# தெய்வங்களாக வாழும் மனிதர்கள் பற்றியது

**கணபதி சர்வானந்தா**

நீங்கள் கண்டு வியந்த மனிதர் யார்? ஏன்? என்று கேட்டால் பெரும்பாலும் உலகறிந்த பலருள் ஒருவரைத்தான் சுட்டிக்காட்ட மனம் ஏவும். நாம் எம்மிடையே வாழ்கின்ற , எம்மைச் சூழ இருக்கின்ற சாமானியர்களைப் பற்றி நாம் ஒருபோதும் சிந்திப்பதில்லை. அவர்களிடத்தே காணும் பெருந்தன்மைகள் பற்றிப் பேசுவதும் இல்லை. எம்மால் போற்றிப் புகழக் கூடிய, அதுவும் முன்னுதாரணமாகச் சொல்லக் கூடிய பலர் இன்றும் எம் அருகே இருக்கின்றார்கள். அவர்களை நாம் கண்டு கொள்ளாது கடந்து செல்கிறோமோ! என்பதே எனது ஆதங்கம்.

“படிக்க சிந்திக்க” என்ற முகநூல் பக்கத்தில் காணப்பட்ட இரு மனிதர்கள் பற்றிய பதிவுகள் அவை. எமக்குத் தெரிந்த விடயங்கள்தான் ஆனால் வெவ்வேறு கதைகளாக, வெவ்வேறு மனிதர்கள் வாழ்க்கைகளுக்கூடாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.அவை எமது வாழ்க்கையை மேம்படுத்தலாம் என்ற எண்ணத்தில்...

அவர் பெயர் குர்மீத் சிங் ,வயசு 60 க்கு மேல் இருக்கும் !அவர் பீகார் மாநிலம் பாட்னா நகரத்துல சொந்தமா ஒரு துணி கடை வைத்து வாழ்க்கையை ஓட்டுற ஒரு சாதாரண இந்தியக் குடிமகன்.கடந்த 26 வருடங்களாக தினமும் தன் கடை வேலைகளை முடிச்சிட்டு, இரவு ஒன்பது மணிக்கு பாட்னா மருத்துவமனையில இருக்கற “லாவாரிஸ்” வார்டுக்கு போயிடுவாரு . லாவாரிஸ் வார்ட்டு என்றால் என்ன ??? அவர் ஏன் தினமும் அங்க போகவேணும் ??? லாவாரிஸ் வார்டு -- குடும்ப உறுப்பினர்களால் கைவிடப்பட்ட அல்லது அனாதைகளாக்கப்பட்ட நோயாளிகள் இருக்கும் இடம்.

தினமும் இரவு , அந்த நோயாளிகளுக்கு இரவு உணவு வாங்கிக் குடுப்பதை வாடிக்கையா செய்திட்டிருக்காரு . சாப்பிட முடியாதவங்களுக்கு அவரே ஊட்டி விட்டு, அவங்க கிட்ட ஆறுதலா பேசி , அவங்க மனநிலையைச் சரிப் படுத்தி , அவங்களுக்குத் தேவையான மருந்து மாத்திரை வாங்கிக் குடுத்திட்டு வருகிறார்.. அவரோட ஆறுதலான பேச்சு மற்றும் அவர் காட்டுற அன்பும் தான் நோயாளிகள் வாழ்க்கையோட ஒரே நம்பிக்கை

அவங்கள பொறுத்தவரைக்கும் அவர் தான் சுவாமி, கடவுள் எல்லாம்...

அவர மாதிரிக் கடவுள்கள் நம்ம சுற்றி பல பேர் இருக்கிறாங்க . அவங்களைப் பார்த்து நாம வியப்படைவதையும் தாண்டி ,பின்பற்ற வேண்டியவை நிறைய இருக்கு .அப்படி செய்தா நமக்குள்ள இருக்குற கடவுள்களும் வெளிய வர ஆரம்பிப்பாங்க .மிக பெரிய சமுதாய மாற்றம் ஏற்படும் . தனி நபர் மாற்றமே சமுதாய மாற்றம் ! நன்றி –பரத்குமார்.

அது போன்று இன்னுமொரு பதிவு. சொல்லாமல் செய்வர் பெரியர் என அறிந்திருக்கிறோம். ஆனால் செய்ததை பிறர் அறிந்திருக்கவும் வேண்டும் என வலியுறுத்துவதைப்போன்ற கதை இது.

ஒரு ஊரில் வயதான தையல்காரர் ஒருவர் வாழ்ந்து வந்தார். தையல் வேலைப்பாட்டில் அவர் வித்தகராக இருந்ததால் அதிக வாடிக்கையாளர்கள் அவரை நாடி வந்தனர், அதனால் நல்ல காசும் சம்பாதித்து விட்டார்.

ஒரு நாள் ஒரு ஏழை யாசகர் அவரிடம் வந்து “ உங்கள் தொழில் திறமையால் நிறைய பணம் சம்பாதிக்கிறீர்கள். ஏன் நீங்கள் ஊரிலுள்ள ஏழைகளுக்கு உதவக்கூடாது?” என்று கேட்டார்.

ஊரிலுள்ள இறைச்சிக்கடைக்காரரைப் பாருங்கள்! பெரிய பணம் இல்லை, ஆனாலும் நாளாந்தம் ஏழைகளுக்கு இலவசமாக இறைச்சி வழங்குகிறார்.

ஊரிலுள்ள காய்கறிக்கடைக்காரரைப் பாருங்கள்! அவரிடம் பெரிய பணம் இல்லை, இருந்தாலும் ஏழைகளுக்கு முடியுமான அளவு கொடுத்துதவுகிறார்.

ஊரிலுள்ள பால்காரனைக்கூடப் பாருங்கள்! பெரிய பணம் இல்லை, இருந்தும் ஒரு தொகை பாலை இல்லாதவர்களுக்கு தர்மம் செய்கிறார்.

உங்களுக்கு என்ன குறை? எதுவும் கொடுப்பதாகத் தெரியவில்லையே! என்றார். எதுவும் பேசாமல் புன்னகைத்து விட்டு அமைதியாக அவர் வேலையைத் தொடர்ந்தார்.

அவர் மௌனத்தைக் கண்ட ஏழை யாசகன் கோபத்தோடு அந்த இடத்தை விட்டுச் சென்றுவிட்டான். ஊரின் மூலை முடுக்கெல்லாம் சென்று “குறித்த தையல்காரர் நல்ல பணக்காரர். ஆனால் கஞ்சன், எதுவும் கொடாதவன்” என்று கதையைப் பரப்பிவிட்டார். ஊர் மக்களும் அவரைத் தப்பாகப் பார்க்க ஆரம்பித்துவிட்டனர்.

காலங்கள் உருண்டோடின. வயதான தையல்காரர் நோய்வாய்ப்பட்டார். ஊரவர்கள் யாரும் நோய் பற்றி விசாரிக்கக்கூட வராத நிலையில் அவர் மரணித்துவிட்டார்.

அவர் மரணத்தோடு இறைச்சிக்கடைக்காரர், காய்கறிக் கடைக்காரர், மற்றும் பால்காரர் எல்லோரும் தானமாக வழங்குவதை நிறுத்திவிட்டனர்.

அது பற்றி அவர்களிடம் கேட்கப்பட்ட போது, “எங்களுக்கு தையல்காரர் நாளாந்தம் பணம் தருவார். ஏழை எளியவர்களுக்கு எங்களிடம் உள்ள அத்தியாவசியப் பொருள்களை கொடுக்கும் படி சொல்லுவார்“.” என்று அவர்கள் பதில் அளித்தனர்.

மேற்படி மனிதர்கள் பற்றிய பதிவுகளில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் பலவுண்டு. வாழ்க்கையில் தனது திருப்திக்காக மட்டும் வாழ்பவர்கள் இப்படித்தான் நடந்து கொள்வர். தமது நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் பிறர் அறிவதை அவர்கள் விரும்பமாட்டார்கள்.அவர்கள் தம் ஆன்மாவைத் திருப்திப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருப்பர். அற வழிதான் அவர்கள் சிந்தனையும் நோக்கமாகவும் இருக்கும். செய்யும் தொழிலே தெய்வம் என்று வாழ்பவர்களும் அவர்களாகத்தான் இருக்கும். அப்படி உள்ளவர்களிடத்தேதான் அதிக அறச் சிந்தனைகள் குடி கொண்டிருக்கும். தன்னுயிர் போலவே மன்னுயிரைப் போற்றுகின்ற பக்குவத்தையும் அவர்கள் கொண்டிருப்பர். அவர்கள் மனித வடிவில் தெய்வங்களாக எம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். •

# இந்தவார ராசிபலன் 07.05.2023 - 13.05.2023

**நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவிதியை**

**வைகாசி 07 ஞாயிற்றுக்கிழமை**
**சோபகிருது வருடம் - சித்திரை 24**




பயணங்களில் புதிய அனுபவம் கிடைக்கும். சொத்துகளில் வருமானம் வரத் தொடங்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் பிறருக்கு உதவி களைச் செய்வார்கள். வியாபாரிகளுக்கு லாபம் கிடைக்கும். விவசாயிகள் புதிய கால்நடைகளை வாங்குவார்கள். அரசியல்வாதிகள் வெற்றி வாகை சூடுவார் கள். கலைத்துறையினருக்கு வருவாய் உயரும். பெண்கள் உறவினர்களிடம் அன்பைப் பொழிவார்கள்.




கனிவான பேச்சுகளால் பிறரின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். தவறுகளைத் திருத்திக் கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பொருளாதார இன்னல்கள் குறையும். வியாபாரிகள் புதிய முயற்சியில் ஈடுபடுவார்கள். விவசாயிகள் விவசாயத்தைப் பெருக்குவார்கள். அரசியல்வாதிகளின் மனதில் மாற்றம் உருவாகும். கலைத்துறையினருக்கு வரவு சீராகவே இருக்கும். பெண்களின் உடல், மன வளம் மேம்படும். மாணவர்கள் காரியங்களைத் தாமதமாகச் செய்து முடிப்பார்கள்.




தொழிலை விரிவுபடுத்துவீர்கள். உடனிருப்போர் ஆதரவாக இருப்பார்கள். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். வாக்கு சாதுர்யத்தால் ஆதாயம் அடைவீர்கள். உத்தியோகஸ்தர்கள் புகழ் உயரக் காண்பார்கள். வியாபாரிகள் லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகள் மேலிடத்திடம் அனுசரித்து இருப்பார்கள். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங் கள் கிடைக்கும். பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுவார்கள். மாணவர்கள் புதிய பாடப்பிரிவில் சேருவார்கள்.




மகிழ்ச்சியான சிந்தனைகள் உண்டாகும். வசிக்கும் வீட்டை புதுப்பிப்பார்கள். சுப விஷயங்களில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரி களுக்கு புதிய அனுப வம் கிடைக்கும். விவசாயிகள் கால்நடைகளுக்கு சிறிது செலவழிக்க நேரிடும். அரசியல்வாதிகள் நினைத்த காரியங்கள் நிறைவேறும். கலைத் துறையினர் பக்குவமாக நடந்துகொள்வார்கள்.




காரியங்களில் வெற்றி கிடைக்கும். புதிய பொருள்களை வாங்குவீர்கள். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். உடன்பிறந்தோர் பேச்சுக்கு மதிப்பு அளிப்பார்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடம் நன்மதிப்பைப் பெறுவார்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பணிகளை மகிழ்ச்சியுடன் ஆற்று வார்கள். பெண்கள் உறவினர்களை அன்பாக நடத்துவார்கள். மாணவர்கள் கல்வியில் சாதனைகளைச் செய்வார்கள்.




பண வரவு சிறப்பாகவே இருக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறையும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். வயிற்று உபாதைகள் ஏற்பட்டு தீரும். உத்தியோகஸ்தர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு கொடுக்கல் – வாங்கலில் திருப்பம் ஏற்படும். விவசாயிகள் புதிய குத்தகைகளைப் பெறுவார்கள். அரசியல்வாதிகளுக்குப் பல பிரச்னைகள் தீரும். கலைத்துறையினர் புதிய யுக்திகளைக் கையாளுவார்கள். பெண்கள் கணவரின் அன்பையும் பாராட்டையும் பெறுவார்கள். மாணவர்கள் தங்கள் பாடங்களைக் கவனத்துடன் படிப்பார்கள்.




வருமானத்தில் ஏற்றத் தாழ்வுகள் நீங்கும். பயணம் புதிய நம்பிக்கையைக் கொடுக்கும். சொத்துகளில் நன்மைகள் உண்டாகும். சுபச் செய்திகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களை மேலதிகாரிகள் புரிந்துகொள்வார்கள். வியாபாரிகள் புதிய சந்தைகளை நாடுவீர்கள். விவசாயிகள் விவசாயத்தை அபிவிருத்தி செய்வீர்கள். அரசியல்வாதிகள் பிறரின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பார்கள்.கலைத்துறையினருக்கு பயணங்களால் மகிழ்ச்சி ஏற்படும்.




பெற்றோரின் அறிவுரைகளைக் கேட்பீர்கள். தாய்வழி உறவினர்களால் உதவிகள் கிடைக்கும். ஆடம்பரப் பொருள்களை வாங்குவீர்கள். சமுதாயத்தில் உயர்ந்தோரின் நட்பும் உதவியும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். விவசாயிகளுக்கு குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.அரசியல்வாதிகள் தடைபட்ட பணிகளைச் செய்து முடிப்பார்கள்.




முன் னெச்சரிக்கை உணர்வுடன் செயல்படுவீர்கள். எதிர்மறை எண்ணம் வராமல் கவனமாக இருக்கவும். சொத்து பிரச்னைகள் விலகிவிடும். வியாபாரிகளுக்கு பிறர் உதவிகள் கிடைக்கும். விவசாயிகள் கொள்முதலில் புதிய லாபத்தை எட்டுவார்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களின் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பார்கள்.கலைத்துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.




எதிர்காலச் சிந்தனைகள் அதிகரிக்கும். எதிர்ப்புகளை அறிந்து கொள்வீர்கள். வாகனங்களைப் பழுது பார்க்க நேரிடும்.உத்தியோகஸ்தர்களுக்கு சாதகமான சூழல் நிலவும்.வியாபாரிகள் புதிய நட்பால் உயர்வடைவார்கள். விவசாயிகள் கடுமையாக உழைப்பார்கள். அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்க்கையில் மாற்றம் உண்டாகும். பெண்கள் பெற்றோரின் ஆதரவால் திருப்தி அடைவார்கள். மாணவர்கள் முன்னேற்றம் காண்பர்.





அரசு விஷயங்களில் நன்மைகள் அதிகரிக்கும். சமூகப் பணியில் இருப்போர் விவேகத்துடன் நடந்துகொள்வீர்கள். சுப காரிய விஷயங்கள் சாதகமாகும். உத்தியோகஸ்தர்களின் வேலைத்திறமையை பாராட்டுவார்கள். வியாபாரிகளின் அந்தஸ்து உயரும். விவசாயிகள் பழைய குத்தகைப் பாக்கிகளைத் திருப்பிச் செலுத்து வார்கள். அரசியல்வாதிகள் கட்சி முன்னேற்றத்துக்காக உழைத்து நற்பெயரை எடுப்பார்கள்.கலைத்துறையினரின் கடந்த கால கசப்புகள் மறையும். பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுவார்கள்.




சாந்தமாகப் பணிபுரிவீர்கள். பொருளாதார நிலை சிறப்பாகத் தொடரும். புனித திருத்தலங்களுக்கு குடும்பத்துடன் செல்வீர்கள். பெரியோர்களின் ஆசி கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு கூட்டாளிகளை நன்கு அறியும் சந்தர்ப்பம் ஏற்படும். விவசாயிகள் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கு வார்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களிடம் விவாதங்களைச் செய்வார்கள். கலைத் துறையினரின் திறமைகள் வெளிப்படும். பெண்கள் கணவர் குடும்பத்தாரின் ஆதரவைப் பெறுவார்கள். மாணவர்கள் விவேகத்துடன் இருப்பார்கள்.

## யாழ் - சென்னை - யாழ் விமான கட்டணம்:

# இந்திய அயலுறவு அதிகாரிகளின் தொலை நோக்கின்மையின் எடுத்துக்காட்டு!



சென்னை மடல்
-பகவான் சிங்-

2019 அக்டோபர் 17 அன்று பலாலியில் கூடிய அந்தப் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் அமர்ந்து நான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உற்சாகமூட்டும் உரையைக் கேட்கும் போது, வானத்தில் மிதந்தேன். அப்போது, இந்திய அரசுக்குச் சொந்தமாக இருந்த எயர் இன்டியாவின் துணை நிறுவனமான ‘அலையன்ஸ் எயர்’ நிறுவனத்தின் யாழ்ப்பாணம் - சென்னை - யாழ்ப்பாணம் விமானச் சேவையின் மீட்சியைக் கொண்டாடும் ஒரு நிகழ்ச்சி அது.

அந்தத் தொடக்க விமானப் பயணத்தின் ஓர் அங்கமாக, இந்திய பத்திரிகையாளர்களில் ஒருவனாக அந்த உணர்ச்சி பூர்வமான தருணத்தில் பங்கெடுக்க நானும் சென்றிருந்தேன். சுமார் ஐம்பது நிமிட நேரம் கொண்ட அந்தப் பயணத்திற்குப் பிறகு, இலங்கை அதிபர், இந்திய தூதர் உட்படப் பலர் உரையாற்றினர்.

இராமேஸ்வரத்திலிருந்து ஒரு மணி நேரப் படகுச் சவாரி தூரத்தில் இருக்கும் இந்தச் சிறிய அழகிய தீவில் உள்ள தமிழர்களுக்கும் அவர்களின் தொப்புள் கொடி உறவுகளான இந்தியத் தமிழர்களுக்குமான தொடர்பை மேம்படுத்தும் ஓர் எஞ்சினாக இந்த விமான சேவை இருக்கும் என்று இந்திய தூதர் தமது உரையில் குறிப்பிட்டார். இந்த நல்லுறவால், போர்க்கால வடுக்களால் இன்னும் துன்புற்றிருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிக்கக்கூடிய இந்திய முதலீடுகள், இலங்கையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என்று, அன்று மைக்கில் பேசிய தலைவர்கள் பெருமையாகக் கொண்டாடியதில் நியாயமிருந்தது.

இலங்கையின் தமிழர்களில் 93 சத விகிதம் பேர் வடக்கு மாகாணத்தில்தான் வசித்து வந்தனர். இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்குமான உறவுகளை வலுப்படுத்துவதில் இந்த இரு தொப்புள் கொடி உறவுகளையும் வலுபடுத்தும் இந்த விமான சேவையின் பங்கு மகத்தானது. இருந்தும், ஈழப்போர் முடிவுக்கு (மே 2009) பிறகு பத்தாண்டுகள் கழித்துத்தான் - 2019இல் தான், இந்தியாவும் இலங்கையும் மீண்டும் இந்தச் சேவையைத் தொடங்கின. அடுத்த சில மாதங்களுக்குள் கோவிட் பெருந்தொற்றைக் காரணம் காட்டி இந்த விமான சேவை முடக்கப்பட்டது. கடந்த ஆண்டு டிசம்பரில் இது மீண்டும் துவக்கப்பட்டபோது, இரு நாடுகளிடையேயான பாரம்பரிய நட்பும் மக்கள் தொடர்பும் புதிய அத்தியாயத்தை நோக்கிப் பீடு நடை போடும் என்று நான் நம்பினேன். மேலும், இது பிராந்திய பாதுகாப்பை வலுப்படுத்தும் என்றும், கடனில் மூழ்கி, மோசமான பொருளாதார வீழ்ச்சியில் சிக்கியிருக்கும் இலங்கையைக் கபளீகரம் செய்யும் சீன வியூகங்களைத் தகர்த்தெறியும் என்றும் நான் நம்பினேன். இந்த வலுவடைந்த தொப்புள்கொடி உறவுகள், இந்து மாகடல் பிராந்தியத்தில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த இந்தியா எடுக்கும் முயற்சிகளுக்குத் துணை நிற்கும் என்றும் எண்ணினேன். கடந்த டிசம்பர் 12ஆம் திகதி நான் இத்தகைய மகத்தான பல கனவுகளில் மிதந்திருந்தேன். சரி, இப்போது நான் இப்படிப் புலம்பும்படி என்ன நடந்து விட்டது?

அண்மையில், நண்பர் ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்திருந்தார். உரையாடலின்போது நாங்கள் விவாதித்த பல விஷயங்களில் ஒன்று, யாழ்ப்பாணம் - சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவைக் கட்டணம் பற்றியது. கடந்த ஆண்டு டிசம்பரில் இந்த விமானச் சேவை மீண்டும் தொடங்கப்பட்ட போது 58,000 இலங்கை ரூபாய்கள் இதன் கட்டணமாக இருந்தது. பின்னர், அது, 52,000 ஆகக் குறைக்கப்பட்டு, அதன் பிறகு 50,000 ரூபாய்கள் வரை வந்தது. இப்போது, ஏப்ரல் 21 முதல், இந்தக் கட்டணம் 63,500 ரூபாய்களாக உயர்த்தப்பட்டுள்ளதுடன், செக் - இன் லக்கேஜ் வரம்பு 20 கிலோ என்றும் ஹண்ட் லக்கேஜ் வரம்பு 5 கிலோ என்றும் நிர்ணயிக்கப்பட்டுள் ளது. அதே நேரத்தில், கொழும்பு - சென்னை - கொழும்பு கட்டணம் 51,000 இலங்கை ரூபாய்கள்தான். அதைத் தவிர, அதில், செக் - இன் லக்கேஜ் வரம்பு 30 கிலோவாகவும் ஹண்ட் லக்கேஜ் வரம்பு 7 கிலோவாகவும் உள்ளது.

## ‘முட்டாள் பத்திரிகையாளனுக்கு என்ன தெரியும்’?




எனது யாழ்ப்பாண நண்பர், யாழ்ப்பாணத்திலிருந்து சென்னை வந்து, பின்னர் சென்னையிலிருந்து கொழும்பு சென்று, கொழும்பிலிருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணம் திரும்பிவர முடிவு செய்திருப்பதாகவும் கூறினார். “கட்ட ணத்திலும் மிச்சம், லக்கேஜூம் அதிகம் கொண்டு செல்லலாம்” என்றார். இந்திய அரசுக்குச் சொந்தமான விமான சேவையில் யாழ் மக்களிடம் காட்டப்படும் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மை குறித்த அவரது வேதனையும் ஏமாற்ற மும் நியாயமானதே.

தொலை நோக்குப் பார்வை இல்லாத விமான சேவை நிறுவனம் மற்றும் அதைச் சொந்தமாகக் கொண்டிருக்கும் அரசின் போக்கால் நான் வேதனை அடைகிறேன். பழைய கட்டணங்களால் இழப்பு ஏற்படுகிறது, கட்டண உயர் வால் மட்டுமே லாபமீட்டமுடியும் என்றாலும், இலங்கையின் மீதான இந்தியாவின் செல்வாக்குக்கு மிகவும் முக்கியமான யாழ் மக்களின் உறவை வலுப்படுத்துவதற்கு, இந்தச் சிறிய இழப்பை இந்திய அரசு ஏற்றால் என்ன? யாழ் - சென்னை-யாழ் விமான சேவை வெறும் வர்த்தக ரீதியாக மட்டும் பார்க்கப்படாமல், பிராந்தியத்தில் இந்தியாவின் நீண்டகால பாதுகாப்பு மற்றும் ராஜரீக அணுகுமுறையாகப் பார்க்கப்பட வேண்டியது அவசியமில்லையா?

ஈழப்போர் மற்றும் அதன் அவலங்கள் குறித்துச் செய்தி சேகரிக்க நான் மேற்கொண்ட எண்ணற்ற இலங்கைப் பயணங்களில் ஒன்றின்போது நிகழ்ந்த ஒரு சுவாரஸ்யமான நிகழ்வை இங்கு நான் நினைவுகூருகிறேன். தமிழீழ விடுதலைப் புலி களை அழித்துப் புகழின் உச்சி யில் அதிபர் மஹிந்த ராஜபக்ச இருந்த 2010 ஜனவரி யில், தனது அலரி மாளிகை இல்லத்தில் எனக்கு, மதிய உணவு டன் கூடிய ஒரு பிரத்தி யேக பேட்டிக்கு அவர் ஒப்புதல் அளித்தார். சோறும் மீனும் நிறைந்த அந்த தடல்புடலான மதிய உண வுக்குப் பிறகு தொடங்கிய பேட்டி யில் என் முதல் வரி, “அதிபர் அவர்களே, இந்தியாவில் நாங்கள், உங்கள்மீது அதிருப்தியிலும் அச்சத்திலும் இருக்கிறோம்” என்பது தான்.

“ஏன், ஏன்,ஏன்?” என்று அவர் அவசரமாகக் கேட்டார். “முந்தைய நாள் கொழும்பில் வந்திறங்கியதிலிருந்து, சாலைகள், நடைபாதைகள், கடைகள், உணவு விடுதிகள், பொது இடங்கள், நட்சத்திர விடுதிகள் எங்கு சென்றாலும் சீனர்களைக் கண்டேன். விமான நிலை யத்திலிருந்து நகரத்துக்குள் வரும் சூப்பர் ஹைவே, கம்யூனிகேஷன் டவர் என, பெரும்பான்மையான உள்கட்டமைப்புத் திட்டங்களும் அவர்களுடையவை யாகவே இருக்கின்றன. சீன விரிவாக்கவா தத் திட்டங்களை, அதிலும் குறிப்பாக, இப் பிராந்தியத்தில் நன்கறிந்த இந்தியா, உங்களின் இந்த பீஜிங் சாய்வு குறித்து அச்சம் அடைவது இயல்பே” என்று நான் பதிலளித்தேன்.

அவர் அமைதியான அளவான முறையில் பதிலைத் தரும் முன்னர், தனது வழக்கமான வெடிச்சிரிப்பு ஒன்றை உதிர்த்தார். “எந்தத் திட்டத்திலெல்லாம் நீங்கள் சீன முத்திரையைப் பார்த்தீர்களோ, அவற்றுக்கெல்லாம் நான் முதலில் இந்தியாவிற்குத்தான் அழைப்பு விடுத்தேன். நீங்கள் அதை நிராகரித்துவிட்டீர்கள். என் நாட்டை நான் மேம்படுத்த வேண்டுமல்லவா?” என்று கேட்டார்.

அன்று மாலை, அவர் இல்லத்திற்கு அருகில் உள்ள இந்திய தூதரகத்தின் மூத்த அதிகாரி ஒருவருடன் தேநீர் சந்திப்பின்போது மஹிந்தவுடனான இந்த உரையாடல் குறித்துக் கூறினேன்.

அதற்கு அந்த அதிகாரி அளித்த பதில், என்னை அதிர்ச்சியும் வேதனையும் அடையச் செய்தது, “ஆமாம் ஆமாம், அவர் எல்லாவற்றையும் இலவசமாக எதிர்பார்க்கிறார். அது எப்படி சாத்தியம்?” என்றார்.

எனது எதிர்வினையும் அவரை அதிர்ச்சியும் கோபமும் அடையச் செய்திருக்கக்கூடும். ஆதரவு நாடும் ஓர் அண்டை நாடு, அதிலும் அதைக் கொத்திப்போக, சீனா என்ற வல்லூறு காத்திருக்கும் வேளையில் இதுபோன்ற எந்த முதலீடும் இந்தியாவின் புவிசார் அரசியலுக்கு நன்மை பயக்கும் என்று நான் கூறினேன். ‘சர்வதேச ராஜரீக அணுகுமுறை பற்றியும், இந்தியாவின் புவிசார் அரசியல் நன்மை குறித்தும் இந்த முட்டாள் பத்திரிகையாளனுக்கு என்ன தெரியும்? இதுபோன்ற உணர்திறன் மிக்க முக்கியமான விஷயங்களில் சிறப்புப் பயிற்சி பெற்று, இந்திய வெளியுறவுச் சேவையில் ஈடுபட்டிருக்கும் என்னைவிடத் தனக்கு அதிகம் தெரியும் என்று இவன் நினைக்கிறானா?’ என்று அந்த அதிகாரி எண்ணியிருக்கக்கூடும்.

அப்படி அவர் எண்ணியிருந்தால், அவர்தான் முட்டாள். நீண்ட காலமாக இவரும் இவரின் அயலுறவுச் சேவை சகாக்களும் இப்படிப்பட்ட தொலை நோக்கில்லாத முட்டாள்தனத்தால் பீடிக்கப்பட்டுத்தான் இருந்தார்கள். வல்லரசுகள் மட்டுமல்லாமல், அண்டை நாடுகளுடனும் இந்தியா கொண்டிருந்த பலவீனமான உறவுகள் அதைத்தான் பிரதிபலிக்கின்றன.

இந்த யாழ் - சென்னை - யாழ் அலையன்ஸ் எயர் விமானச் சேவைக் கட்டண உயர்வு என்பது, இந்தியாவின் அகண்ட வெளியுறவு விவகாரங்களில் ஓர் அற்ப புள்ளியாகத் தோன்றலாம். ஆனால், அண்டை நாடுகளுடனான உறவில் இந்திய அயலுறவுச் சேவை அதிகாரிகளின் தொலைநோக்கற்ற அணுகுமுறைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் உள்ளவர் எவரேனும் இந்த ‘ஈழநாடு’ கட்டுரையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, டில்லியில் உள்ள சம்பந்தப்பட்ட மூத்த அரசியல் தலைவர்களுக்கு அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். மாண்புமிகு வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்ஷங்கருக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் அனுப்ப, மொழிபெயர்க்கும் சுமைகூட இல்லை. அவர்கள் தமிழை நன்கறிவார்கள்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# வீரவன்ச மறைக்கும் கதை



வீரகத்தி தனபாலசிங்கம்

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தான்தோன்றித்தனமாக பேசுபவர் என்றாலும் எளிதில் ஏமாறக்கூடியவர்கள் அபத்தங்களையும் கூட நம்பிவிடக்கூடிய அளவுக்கு வளமான சிங்கள சொல்வன்மையுடன் உணர்ச்சியைக் கிளறும் வகையில் ஆவேசமாக அரசியல் பேசுவதில் திறமைசாலி.

மகிந்த ராஜபக்ச 2005 நவம்பரில் முதன் முதலாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது அவரை ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி. ஆதரித்தது. அப்போது அதன் கொள்கை பரப்பு செயலாளராக இருந்தவர் வீரவன்ச. பிரசார மேடைகளில் சிறிலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான அன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பேச்சாளர்களை விடவும் மிகவும் வலுவான முறையில் சிங்கள மக்கள் மத்தியில் தனது அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தை கொண்டு சென்று சேர்த்தவர் வீரவன்ச என்று அவரின் பேச்சாற்றல் மீது மகிந்தவுக்கு ஒரு மதிப்பீடு இருந்ததாக கூறப்படுவதுண்டு.

வீரவன்ச ஜே.வி.பி.யை விட்டு வெளியேறி புதிய கட்சியை தொடங்கிய பின்னர் அவரின் அந்த ஆற்றலை தனக்கு அனுகூலமான முறையில் இனவாத அணிதிரட்டலுக்கு மகிந்த தாராளமாக பயன்படுத்தினார் எனலாம். 2015 ஜனாதிபதி தேர்தலில் மகிந்த தோல்வி கண்ட பிறகு சில வாரங்களுக்குள்ளாகவே மீண்டும் அவருக்கு ஆதரவான அணிதிரட்டலை செய்வதில் தீவிரமாக முன்னின்ற முக்கியமான அரசியல்வாதிகளில் ஒருவர் வீரவன்ச.







கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு ராஜபக்சாக்களை விட்டு வெளியேறிய வாசுதேவ நாணயக்கார, பேராசிரியர்கள் ஜீ.எல். பீரிஸ், திஸ்ஸ விதாரண மற்றும் டியூ குணசேகர போன்ற மூத்த அரசியல்வாதிகள் கூட பல சிறிய கட்சிகளுடன் சேர்ந்து தாங்கள் அமைத்த ‘உத்தர லங்கா சபாகய” என்ற கூட்டணியின் தலைவராக வீரவன்சவையே நியமித்ததை கண்டோம். செய்தியாளர் மகாநாடுகளில் அவர் பேசும்போது நீண்டகால அரசியல் அனுபவமுடைய இவர்கள் எல்லோரும் வியந்து பார்த்துக்கொண்டிருப்பதை தொலைக் காட்சிகளில் பார்க்கிறோம்.

எதிர்கால தேர்தல்களில் தென்னிலங்கை மக்கள் அவரை எந்தளவுக்கு ஆதரிப்பார்கள் என்ற கேள்வி ஒருபுறமிருக்க, தனது கடும் சிங்கள பௌத்த தேசியவாதப் போக்கு கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில் அவர் தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார். 13வது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் இலங்கையின் வரலாறு இதுவரை காணாத பெரிய இனக்கலவரம் வெடிக்கும் என்று அண்மையில் வீரவன்ச எச்சரிக்கை செய்தார். அவ்வாறு பேசுவதனால் தனக்கு அனுகூலமே தவிர ஆபத்து எதுவும் வந்துவிடப்போவதில்லை என்பது அவரின் நம்பிக்கை.

இலங்கை முகங்கொடுக்கின்ற எந்தவொரு பிரச்சினையிலும் ‘சர்வ தேச சதி முயற்சியை” அடையாளம் காணும் விசித்திரமான ஒரு மூளையைக் கொண்டவராகவும் விளங்கும் வீரவன்ச, தன்னை அமெரிக்க மற்றும் மேற்குலக ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான ஒரு ‘முன்னணி முற்போக்கு போராளியாக” காட்டிக்கொள்கிறார். சர்வதேச சதிமுயற்சி என்பது அவரது பிரதானமான சுலோகங்களில் ஒன்று.

கடந்த வருடத்தைய ‘அறகலய” மக்கள் போராட்டம் குறித்து தனது ‘புலனாய்வின்” அடிப்படையில் ‘ ஒன்பது: மறைந்துகிடக்கும் கதை” ( eta: nrq;fTD fjht --Nine; Hidden Story) என்று சிங்களத்தில் நூலொன்றை அவர் எழுதியிருக்கிறார். அதன் வெளியீட்டு வைபவம் கொழும்பு இலங்கை மன்றக்கல்லூரியில் கடந்த வாரம் (25.4) இடம்பெற்றது. மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம். ஒரு பட்டாளம் அரசியல்வாதிகள்.

‘கட்டற்ற கற்பனை” என்று அவதானிகள் பலரும் வர்ணிக்கும் அந்த நூலில் வீரவன்ச அறகலயவுக்கு பின்னால் இருந்தாக தான் கண்டுபிடித்த சர்வதேச சதியின் நிரலொழுங்கை விபரித்திருக்கிறார். அதில் மிக முக்கியமானவற்றை அவதானிப்போம்.

‘முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவியில் இருந்து விலகி நாட்டைவிட்டு வெளியேறத் தீர்மானித்தபோது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை முதலில் பதவி நீக்குமாறு அவரிடம் அமெரிக்க அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் கேட்டுக்கொண்டன. ஜனாதிபதியின் செயலாளராக இருந்த காமினி செனரத் இரு கடிதங்களை தயாரித்தார். ஒன்று ஜனாதிபதி பதவி விலகும் கடிதம். மற்றையது விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கும் கடிதம்.

இவ்விரு கடிதங்களும் மாலைதீவில் தங்கியிருந்த கோட்டாபயவுக்கு அனுப்பப்பட்டபோது அவர் தனது பதவி விலகல் கடிதத்தில் மாத்திரம் கையெழுத்திட்டார். பிரதமரை பதவி விலக்கும் முயற்சி தோல்வியடைந்தவுடன் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி ஷங் பாராளுமன்ற சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு சென்று சந்தித்து பதில் ஜனாதிபதியாக பதவியேற்குமாறு கேட்டுக்கொண்டார்.

‘ஜனாதிபதி பதவி விலகினால் அரசியலமைப்பின் பிரகாரம் பிரதமரே பதில் ஜனாதிபதியாக பதவியேற்க வேண்டும் என்று சபாநாயகர் சுட்டிக்காட்டிய போது அரசியலமைப்பு தொடர்பில் வரக்கூடிய பிரச்னை களை தாங்கள் பார்த்துக்கொள்வதாக அமெரிக்க தூதுவர் அவரிடம் கூறினார். பதில் ஜனாதிபதியாக பதவியேற்கவேண் டும் என்ற அதே யோசனையை தூதுவ ருக்கு முன்னதாக சபாநாயகரிடம் மதத் தலைவர் ஒருவரும் எதிர்க்கட்சி பாராளு மன்ற உறுப்பினர் ஒருவரும் முன்வைத்திருந் தனர்.

‘சதி முயற்சியில் சம்பந்தப்பட்டவர்களின் முதல் திட்டம் கோட்டாபயவையும் ஜனாதிபதி மாளிகைக்குள் இருந்த ஆயுதப்படைகளின் சிரேஷ்ட தலைவர்களையும் கொலை செய்வதே யாகும். அதை தொடர்ந்து நாட்டில் ஓரிரு வாரங் களுக்கு நீடிக்கக்கூடிய அராஜக நிலைக்குப் பிறகு சபாநாயகர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதே அவர்களின் திட்டம். கேணல் கடாபி கொலை செய்யப் பட்டதை அடுத்து லிபியாவில் அரங் கேற்றியதைப் போன்ற நாடகத்தை இலங்கையிலும் அரங்கேற்றுவதற்கு அவர்கள் நோக்கம் கொண்டிருந்தார்கள்.

முதலாவது திட்டத்தில் தோல்வி கண்ட அவர்கள் இப்போது ஜனாதிபதியாக விக்கிரமசிங்கவை வைத்துக்கொண்டு தங்களது இரண் டாவது திட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த வருடம் ஜூலை 9 ஆம் திகதி இலங்கையில் கொந்தளிப்பான நிலைவரத்துக்கு மத்தியில் பாதுகாப்பு படைக ளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா இந்தியாவில் இருந்தார். இது சந்தேகத்தைக் கிளப்பியது. அவரை தங்கள் பக்கம் வென்றெடுக்கும் முயற்சியாக அமெரிக்கா மனித உரிமைகள் பிரச்சினையை கிளப்பி அவர் மீது நெருக்குதலைப் பியோகித்தது.

‘சபாநாயகரை ஜனாதிபதியாக்கும் அமெரிக்காவின் திட்டம் வெற்றியளித்தி ருந்தால் அவரது நிருவாகத்தில் சரத் பொன் சேகாவும் சவேந்திர சில்வாவும் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கக்கூடும்.

‘அமெரிக்க தூதுவர் ஜனாதிபதி கோட்டா பயவையும் அறகலய போராட்ட இயக்கத்தையும் ஏக காலத்தில் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். விக்கிரமசிங்கவை பதவி விலக்குவதற்கு கோட்டாபய மறுத்த காரணத்தால் அவர் நாட்டை விட்டு வெளியேற விமானம் ஒன்றை கொடுத்து உதவ இந்தியா மறுத்தது. விக்கிரமசிங்க பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாக தெரிவான உடனடியாகவே கோட்டாபயவுக்கு எதிராக செயற்பட்டவர்கள் தனக்கு எதிராக திரும்புவதற்கு முன்னதாக போராட்ட இயக்கத்தை ஒடுக்க இராணுவத்தை அனுப்பி தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டார்.

‘தனது நிபந்தனைகளுக்கு கொழும்பு இணங்கும்வரை சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி திட்டத்தை அமெரிக்கா நிறுத்தி வைத்திருந்தது. அந்த திட்டம் தாமதமானதற்கு சீனா கடன் மறுசீரமைப்புக்கான கடிதத்தை வழங்குவதற்கு தயங்கியதே காரணம் என்று கூறப்படுவது பொய்” என்று வீரவன்ச எழுதியிருக்கிறார்.

69 இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக வந்த கோட்டாபய ராஜபக்ச அரசியலமைப்புக்கு விரோதமான முறையில் எவ்வாறு பதவியில் இருந்து அகற்றப்பட்டார் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த நூலை வெளியிடுவதாக கூறிய அவர் அமெரிக்க மேலாதிக்கத்துக்கு சீனாவிடமிருந்து அதிகரிக்கும் சவாலையடுத்து உலகளாவிய மட்டத்திலும் பிராந்திய மட்டத்திலும் ஏற்படுகின்ற மாற்றங்களின் பின்புலத்திலேயே இலங்கையில் அமெரிக் காவின் திட்டத்தை நோக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தனது ‘கண்டு பிடிப்புகளுக்கு” எந்த சான்றையும் வீரவன்ச முன்வைக்க வில்லை. ஆனால் உடனடியாகவே அமெரிக்க தூதுவர் மறுப்பை வெளி யிட்டதை காணக்கூடியதாக இருந்தது. வீரவன்சவின் பெயரை குறிப்பிடாமல் ருவிட்டரில் பதிவொன்றைச் செய்த அவர், ‘புனைகதை என்று பெயரிடப்பட வேண் டிய நூல் ஒன்றில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஆதார மற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததுடன் அப்பட்ட மான பொய்களையும் பரப்பியிருக்கிறார்” என்று தெரிவித்தார். இது குறித்து மறுநாள் பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட வீரவன்ச நூல் வெளியிடப்பட்ட 24 மணி நேரத்திற்குள் தூதுவர் அதை மொழிபெயர்ப்பு செய்வித்து முழுமையாக வாசித்துவிட்டார் என்பதை அறியும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது என்று கூறினார்.

சபாநாயகர் அபேவர்தனவும் அறகலய போராட் டக் காலத்தில் அமெரிக்க தூதுவரை தான் ஒருபோதும் சந்திக்கவில்லை என்று மறுத்திருக்கிறார். ஜூலி ஷங் கொழும்பில் பதவியேற்றுக்கொண்ட பின்னர் பாராளுமன்றத்துக்கு வந்து தன்னை முதல் தடவையாக சந்தித்ததாகவும் பிறகு அமெரிக்க சுதந்திர தின வைபவத்தில் இரண்டாவது தடவையாக சந்தித்ததாகவும் அவர் கூறியிருக்கிறார். அமெரிக்க தூதுவரை அதற்கு பிறகு சந்திக்கவேயில்லை என்று கூறும் சபாநாயகர் தன் மீது எந்த நெருக்குதலும் பிரயோகிக்கப்படவில்லை என்று மறுத்திருக்கிறார்.

அதேவேளை, ஜெனரல் சவேந்திர சில்வா தொடர்பில் வீரவன்ச முன்வைத்த குற்றச்சாட்டையும் பாதுகாப்பு அமைச்சு மறுநாளே மறுத்து அறிக்கை வெளியிட்டது. இந்துசமுத்திர தென்பிராந்திய நட்பு நாடுகளுக்கிடையிலான ‘கொழும்பு பாதுகாப்பு மகாநாடு” அமைப்பின் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மட்ட கூட்டம் 2022 ஜூலை 07 இந்தியாவில் நடைபெற்றது. அதில் இலங்கையின் பிரதிநிதியாக அன்றைய ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் சவேந்திர சில்வா கலந்துகொண்டார். அவரின் விஜயம் உத்தியோகபூர்வமானது. வீரவன்சவின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று அமைச்சு கூறியது.

சதி முயற்சியில் சம்பந்தப்பட்டதாக நூலில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் முக்கியமான தரப்புகளில் இந்தியாவை தவிர ஏனையவர்கள் தங்கள் மறுப்பை வெளியிட்டிருக்கும் நிலையில் நூலாசிரியரிடமிருந்து பதில் விளக்கம் எதிர்பார்க்கப்படுவது இயல்பு. இதுவரையில் அவரிடமிருந்து பெரிதாக எதையும் காணோம்.

வீரவன்ச மாத்திரமல்ல ராஜபக்சாக்களும் அவர்களின் அதிவிசுவாசிகளான வேறு அரசியல்வாதிகளும் கூட மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் சர்வதேச சதி இருந்தது என்று ஏற்கெனவே பல தடவைகள் கூறியிருக்கிறார்கள். அவர்கள் நூலொன்றை எழுதவில்லை என்பது மாத்திரமே வித்தியாசம்.

கொழும்பில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மேதினப் பேரணியில் உரையாற்றிய மகிந்த ராஜபக்ச தேசியவாத சிந்தனையின் அடிப்படையில் உள்நாட்டில் வகுக்கப்பட்ட அரசியல் பாதையை தாங்கள் முன்னெடுத்ததால் தங்களது கட்சிக்கு எதிராக மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளும் அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவனங்களும் அணிசேர்ந்து நின்றதாக குற்றஞ்சாட்டியதை காணக்கூடியதாக இருந்தது.

இந்த அரசியல்வாதிகள் எல்லோரும் எமது நாட்டின் வரலாற்றில முன்னென்றும் இல்லாத வகையில் மக்கள் கிளர்ந்தெழுந்ததற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் குறித்து இலங்கையர்களுக்கு எதுவும் தெரியாது என்பது போன்று அவர்களின் விவேகத்தை நிந்தனை செய்யும் வகையில் கருத்துக்களை ..... இல்லை ‘கண்டுபிடிப்புக்களை” வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றே கூற வேண்டியிருக்கிறது.

உலக நாடுகளில் தோன்றுகின்ற நெருக்கடிகளில் ஏகாதிபத்திய நாடுகள் தலையிடுவதில்லை என்றோ அல்லது அந்த நெருக்கடிகளை தங்களது மூலோபாய நலன்களுக்கு இசைவான முறையில் உள்நாட்டு சக்திகளை பயன்படுத்தி கையாளுவதில்லை என்றோ இங்கு கூற முற்படுவதாக கருத வேண்டியதில்லை.

ஆனால், நெருக்கடிக்கான அடிப்படை உள்நாட் டுக் காரணிகளை முற்று முழுவதுமாக மூடிமறைத்து மக்களை மீண்டும் தவறாக வழிநடத்துவதற்கு முயற்சிகள் - மக்கள் போராட்டங்கள் ஆட்சியாளர்களி னால் கொடுங்கரம் கொண்டு அடக்கப்பட்டுவரும்

(18ஆம் பக்கம் பார்க்க)

# வருட இறுதிக்குள் இனப்பிரச்னை தீர்வு: சம்பந்தன் அடிச்சுவட்டில் ரணில்!

ரணில் விக்கிரமசிங்கவின் நிகழ்கால ஆட்சியில் கடந்த வார ஸ்பெசல் தையிட்டி. தமிழ் மண்ணில் புதிய ஒரு விகாரைக்கு கலசம் வைக்கும் நிகழ்வையொட்டிய மக்கள் போராட்டம் இது.

ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு போராட்டமாக மக்களைத் திசை திருப்பி அல்லாட வைப்பதும் அரசியல் கட்சிகளுக்குள் பிளவை ஏற்படுத்தி அதில் லாபம் பெறுவதுமே ரணிலின் ஆதாய அரசியல்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளது போராட்டம் வருடக் கணக்கில் தொடர்கிறது. அதற்கு தீர்வு கண்டு முடித்து வைக்கும் நாட்டம் ரணில் தரப்புக்குக் கிடையாது. மாறாக ஒவ்வொரு வாரமும் ஏதாவதொரு புதிய விவகாரத்தை உருவாக்கி அதனையிட்டு தமிழரை வீதி வீதியாக போராட வைப்பதும், அதனை கைவிடச் செய்வதற்காக இன்னொரு போராட்டத்துக்கு விதை போடுவதும் இவருடன் கூடப்பிறந்த பழக்கதோசம்.

தொல்பொருள் திணைக்களத்தின் பிரதான பணி இதனையொட்டியதாகவே மாற்றப்பட்டுள்ளது. கஞ்சிக்குப் பயறு போடுவது போன்று எப்போதாவது ஒன்றில் நீதிமன்றத் தீர்ப்பு நீதியானதாக அமைந்துவிடும். அதனையும் தமது ஆட்சியின் அரசியல் தலையீடற்ற நீதி பரிபாலனத்தின் நேர்மையென ஆட்சி பீடம் காட்டிக்கொள்ளும்.

தீர்க்க வேண்டிய பிரச்சனைகளை தீர்க்காது, அதற்காக இன்னொரு பிரச்னையை உருவாக்குவதனூடாக அதனைத் தீர்த்துக்கட்டுவது ரணிலின் பாணி என்பதற்கு உதாரணமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்து சம்பவம் ஒன்றை நினைவூட்டலாம்.

அப்போது ரணில் கல்வி அமைச்சராக இருந்தார். குரு சங்கமய என்ற பெயரில் இயங்கிய அதிகூடிய ஆசிரியர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கம் பாரிய போராட்டம் ஒன்றை நடத்தியது. வாரக்கணக்கில் இது நீண்டு சென்றது. பேச்சுவார்த்தை எதுவும் இணக்கத்தைக் கொண்டுவரவில்லை.

திடீரென இச்சங்கத்தின் செயலாளர் எச்.என்.பெர்னான்டோவுக்கு கொழும்புக்கு வெளியே துாரப்பிரதேசத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. அரசியல் ரீதியான பழி வாங்கும் நடவடிக்கை இது. சம்பள உயர்வு, நியாயமான பதவி உயர்வுகளை கோரிய பதாதைகளுடன் இடம்பெற்று வந்த ஆசிரியர்களது போராட்டத்தின் இலக்கு மாறியது. சங்கச் செயலாளர் பெர்னான்டோவின் இடமாற்றத்தை உடன் ரத்துச் செய்ய வேண்டுமென புதிய பதாதைகளோடு போராட்டம் காணப்பட்டது.

நல்ல பிள்ளையாக தம்மைக் காட்டிக் கொள்ள விரும்பிய ரணில், போராட்டக்காரருடன் பேச்சு நடத்தி ஒரு சமரசத்துக்கு வந்தார். போராட்டத்தை நிறுத்தி அமைச்சரவையுடன் பேசி இடமாற்றத்தை ரத்துச் செய்யலாமென்று உறுதி கூறி, அவ்வாறே செய்து முடித்தார்.

போராட்டத்தின் அடிப்படைக் கோரிக்கை மறக்கப்பட்டுவிட்டது. சங்கச் செயலாளரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டதோடு போராட்டம் முடிவுற்றது. தங்கள் போராட்டம் வெற்றி பெற்றதாக ஆசிரியர் சங்கம் மகிழ்வடைய, தமது குயுக்தி வெற்றி கண்டதாக ரணில் குளிர்ச்சியடைந்தார். ஆசிரியர் சங்க செயலாளர் எச்.என்.பெர்னான்டோ 1971ல் கிளர்ச்சி நடத்திய ஜே.வி.பி.யின் தலைவர் றோகண விஜேவீரவின் மனைவியின் கூடப்பிறந்த சகோதரர் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

ஆண்டுகள் நாற்பது கடந்தும் ரணி



லின் அரசியல் தந்திரமும் சூத்திரமும் மாறவில்லை. எல்லோரையும் எப்போதும் ஏமாற்றத் தெரிந்த அரசியல்வாதி இவர். இப்போது நிறைவேற்று அதிகாரமும் சேர்ந்து விட்டதால் சொல்லத் தேவையில்லை.

தையிட்டியில் போராட்டம் நடந்து கொண்டிருக்கையில் இங்கிலாந்து மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்ள ரணில் இங்கிலாந்து பயணமானார். பிரதமரோ அல்லது சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சர் எவருமோ தையிட்டி போராட்டத்தை ஒரு விவகாரமாகவே பார்க்கவில்லை. திஸ்ஸ விகாரை என்ற பெயரிலான இந்த பௌத்த வழிபாட்டுத் தலத்துக்கு 2019ல் அடிக்கல் நாட்டப்பட்டது. நான்கு ஆண்டுகளில் விகாரை கட்டி முடிக்கப்பட்டு அதன் உச்சியில் கலசம் வைக்கப்படும்போது போராட்டம் நடைபெறுகிறது. போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர். பின்னர் தமிழரசுக் கட்சியினரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதனும் இணைந்து கொண்டனர்.

2019 என்பது நல்லாட்சிக் காலம். தமிழரசுக் கட்சியினர் ரணிலுடன் கூடிக் குலாவி தேநிலவு கழித்த காலம். ஜனாதிபதி மைத்திரிக்கு சவால் விட்டு ரணிலை மீண்டும் பிரதமராக்கிய தமிழரசுக் கட்சியினர், அடிக்கல் நாட்டும்போது அதனை எதிர்க்கவில்லை, தடுக்கவுமில்லை. இப்போது போராட்டத்துக்கு முகம் காட்டுகின்றனர்.

தமிழரசின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜாவும், புதிய தலைவராக விரும்பும் சுமந்திரனும் இரட்டையர்களாக போராட்டத்துக்கு தரிசனம் கொடுக்கின்றனர். தலைவர் பதவிக்கு கண் வைத்திருப்பவர்களென ஊடகங்கள் அடையாளம் காட்டும் சி.வி.கே.சிவஞானமும், கிளிநொச்சி சிறீதரனும் ஒரு வர் முகம் ஒருவர் பார்க்காது போராட்ட அரங்கில் அமர்ந்திருக்கிறார்கள்.

எதற்கெடுத்தாலும் மீண்டும் போராட்டம் வெடிக்குமென சவால் விடும் மாவையர் வாயே திறக்கவில்லை. எந்த விவகாரமானாலும் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வேனென்று அறைகூவும் சுமந்திரன் தையிட்டியில் அப்படிச் சொல்லவில்லை. என்ன காரணம்?

ராணுவத்தின் வழிபாட்டுக்காக விகாரை அமைக்கப்படுவதாக படைத் தரப்பில் கூறப்படுகிறது. ராணுவத்தில் பௌத்தர்கள் மட்டும்தானா உள்ளனர்? கத்தோலிக்கர்கள் இல்லையா? அவர்கள் வழிபாட்டுக்கு ஒரு தேவாலயம் தேவையில்லையா? போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிறு எண்ணிக்கையினர். உள்ளூராட்சிச் சபை தேர்தலுக்கு அபேட்சகர்களாக நியமனம் செய்தவர்கள் எங்கே போனார்கள்? இப்படித்தான் தமிழ் தேசிய அரசியல் போகுமென்றால், தமிழ் தேசியம் என்ற பெயரை தங்கள் கட்சிகளின் பெயர்களில் வைத்துக் கொள்ள இவர்களுக்கு அருகதை இல்லையென்றே சொல்ல வேண்டும்.



> **“ தந்தை செல்வாவின் 125வது பிறந்த தின விழா உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் அவரது தொகுதியான காங்கேசன்துறையில் திஸ்ஸ விகாரை அமைப்பது ரணில் அரசு அவருக்கு வழங்கும் அதியுயர் அவமரியாதை. இனப்பிரச்சனைக்கான தீர்வு பொங்கலுக்கு முன், தீபாவளிக்கு முன் என்று கூறி வந்த சம்பந்தனின் பாதையில், வருட இறுதிக்குள் தீர்வு என்று ரணில் கூறுவது.... கேட்டுக் கேட்டு புளித்துப்போன கீறல் விழுந்த ரெக்கோட்.**



தமிழர் தேசம் இவ்வாறு ஒவ்வொன்றாக பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்க, இனப்பிரச்சனை தீர்வுக்கான பேச்சுவார்த்தை என்ற சுலோகத்தை ரணில் மீண்டும் தூக்கியுள்ளார். இந்த வாரத்தில் மூன்று நாட்கள் வட பகுதி தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்த அவர் முன்வந்துள்ளார். தமிழர் பிரச்சனை என்பதை வடக்குத் தமிழருக்கான பிரச்சனை என்று ஆரம்பத்திலிருந்தே ரணில் கூறி வருவது வடக்கையும் கிழக்கையும் பிரித்தாளும் இன்னொரு தந்திரம்.

தமிழர் தரப்பு ஒருபோதுமே ஒன்றுபட்டு தீர்வு காண முன்வருவதில்லையென்ற இவரது குற்றச்சாட்டை தமிழர் தரப்பினர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கு முன்னர் அவர்கள் பல தடவை ஏமாற்றப்பட்ட அனுபவம் சிலவேளை அவர்கள் இணைந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு விருப்பம் காட்டாமைக்குக் காரணமாக இருக்கலாம். அதேசமயம், தமிழ் தேசிய கட்சிகள் தங்கள் எதிர்கால வாக்கு வங்கியை கருத்தில் கொண்டு இணைந்து செயற்பட தயங்குவதும் ஒரு காரணம். சிங்கள தலைமைகள் பிரதான நிகழ்ச்சி நிரலில் இணைய மறுப்பதைப் போன்றது இது.

தமிழ் அரசியல் வானில் சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் இணைய மறுத்த காலமொன்று இருந்தது. ஆனால், 1972ல் இது மாற்றம் பெற்றது. அன்று ஒற்றைக்கோட்டில் தமிழர் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டபோது விட்டுக்கொடுத்து இணைந்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜி.ஜி.பொன்னம்பலம் போன்றவர்கள் இனி பிறக்கப்போவதில்லை. எனவே தமிழ் கட்சிகளின் இணைப்பை ஒரு சாட்டாக வைத்து அரசியல் பிழைப்பு நடத்த ரணில் முயற்சிக்கக்கூடாது.


நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும், சகல நிறைவேற்று அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டவர் என்ற வகையிலும், தாம் விரும்பும் தீர்மானங்களை பெரும்பான்மையுடன் நிறைவேற்றும் நாடாளுமன்றத்தின் தலைவர் என்ற வகையிலும் இனப்பிரச்னைத் தீர்வுக்கான தம்மிடமுள்ள தீர்வுத் திட்டத்தை அவர் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும்.

அதனை விடுத்து, தந்தை செல்வாவின் 125வது பிறந்த தின விழா உலகளாவிய ரீதியில் பல இடங்களிலும் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்படும் வேளையில் அவரது சொந்தத் தொகுதியான காங்கேசன்துறையில் திஸ்ஸ விகாரை அமைப்பதானது ரணில் அரசு அவருக்குச் செய்யும் அதியுயர் அவமரியாதை.

தந்தை செல்வாவின் வழியில் வந்த தமிழரசின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் தமிழர் பிரச்சனைக்கான தீர்வு தைப்பொங்கலுக்கு முன்னர், தீபாவளிக்கு முன்னர், புதுவருடத்துக்கு முன்னர் என்று கூறிய அடிச்சுவட்டில் இப்போது ரணிலும் இந்த வருட டிசம்பர் மாதத்துக்குள் இனப்பிரச்னைக்கு தீர்வு வருமென தாம் நம்புவதாக அறிவித்திருப்பது நம்பிக்கை தருவதாக அமையவில்லை.

கடந்த வருடம் டிசம்பருக்கு முன்னர் தீர்வு, கடந்த பெப்ரவரி 4ம் திகதி சுதந்திர தின விழாவில் தீர்வு பற்றிய அறிவிப்பு என்று கூறிவந்த ரணில் இப்போது ஒரேயடியாக வருகின்ற டிசம்பருக்கு முன்னர் என்று கூறியிருப்பது..... கேட்டுக் கேட்டு புளித்துப்போன கீறல் விழுந்த ரெக்கோட்! ●

# இலங்கையில் இலஞ்ச ஊழல் முறைகேடுகளும் அவற்றிற்கெதிரான புதிய சட்டமும்!



கந்தையா அருந்தவபாலன்

இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டவரைபு இலஞ்ச ஊழல் முறைகேடுகள் அற்ற முன்னேற்றமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வல்லது என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவர் குறிப்பிடுவது போல சில முற்போக்கான உறுப்புரைகள் அச்சட்டவரைபில் காணப்படுகின்றன. குறிப்பாக இலஞ்சம், ஊழல், தவறான முறையிலான சொத்துக் குவிப்பு போன்றவற்றுக்கு எதிரான முறைப்பாடுகளை புலனாய்வு செய்யவும் ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்ளவும் வழக்கிடுதலுக்குமான அதிகாரத்தைக்கொண்ட சுதந்திர ஆணைக்குழு ஒன்றை நிறுவுதல், சர்வதேச நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து செயற்படுதல், இவற்றிற்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வையும் பங்குபற்றலையும் தூண்டுவதற்கான கல்விசார் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற பலவிடயங்கள் இவ்வரைபில் காணப்படுகின்றன. இவ்வாறானதொரு சட்டவரைபை அரசாங்கம் அவசரமாக கொண்டுவருவதன் அடிப்படைக் காரணம் ஆட்சியாளர்கள் மனந்திருந்தி விட்டார்கள் என்பதல்ல. மாறாக ஊழலை ஒழிப்பதற்கான இறுக்கமான நடைமுறையொன்றை ஏற்படுத்தப்பட வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் தான் வழங்கிய கடனுக்கு கடுமையான நிபந்தனையை விதித்தமையாகும். இதனால் இங்கு எழுகின்ற கேள்வி இச்சட்டம் ஊழல் முறைகேடுகளை உண்மையில் கட்டுபடுத்துவதற்கானதா? அல்லது சர்வதேச நாணய நிதியத்தைத் திருப்திப்படுத்துவதற்கானதா? என்பதாகும். மேலும் கட்டுப்படுத்துவதுதான் நோக்கமெனில் இலங்கையில் காணப்படும் இலஞ்ச ஊழல் முறைகேடுகளை இச்சட்டத்தினால் எவ்வளவுதூரம் கட்டுப்படுத்த முடியும்? இக்கேள்விகளுக்கு விடைகாண வேண்டுமெனில் நாம் இலங்கையில் காணப்படும் இலஞ்ச ஊழல்களின் தன்மை, யார்அவற்றின் சூத்திரதாரிகள், நிலவும் சட்டவாட்சியின் தன்மை போன்றவை தொடர்பாக நோக்குவது அவசியமாகும்.

இலங்கையின் பொதுத்துறையைப் பொறுத்தமட்டில் உச்சமட்ட நிறைவேற்றுத் தலைவரான ஜனாதிபதி தொடங்கி கீழ்மட்ட அலுவலகப் பணியாளர் வரை எல்லாத் துறைகளிலும் இலஞ்சமும் ஊழலும் புரையோடிப் போயுள்ளன. சட்டத்துக்கு மாறாகச் செய்வதற்கு மட்டுமன்றி சட்டரீதியான கடமையைச் செய்வதற்கும் இலஞ்சம் கொடுக்க வேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டு பல ஆண்டுகள் கடந்துவிட்டன. குறிப்பாக யுத்தகாலத்திலும் அதன்பின்னரும் இலஞ்சம் ஊழல் என்பன நாட்டில் மலிந்துவிட்டதுடன் மக்களைப் பொறுத்து அவை வாழ்வின் ஒரு பகுதி என ஏற்கும் ஒரு மனநிலைக்கு வந்துவிட்டனர். 'ரான்ஸ்பரன்சி இன்ரநாஷனல்' நிறுவனத்தினால் கணித்து வெளியிடப்படும் நாடுகளின் ஊழல் தொடர்பான சுட்டியின் அடிப்படையில் 2022இல் 180 நாடுகளில் இலங்கை 101 ஆவது இடத்தில் இருந்ததன் மூலம் ஊழல் கூடிய நாடுகளில் ஒன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 2019இல் வெடித்துப்பரவி நாட்டில்இன்றுவரை தொடரும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக இலங்கையின் ஊழல் காணப்படுவதாக சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதி நிறுவனங்களும் பல ஆய்வு நிறுவனங்களும் எடுத்துக் காட்டியுள்ளன. அத்துடன் நாட்டில் அதிகரித்துவரும் வருமான ஏற்றத்தாழ்வுக்கும் ஊழல் பிரதான காரணியாக உள்ளது.

ஊழல் முறைகேடுகள் நாட்டில் பரவலாக இடம்பெறுகின்ற போதிலும் அவற்றின் மூலகர்த்தாக்களாக இருப்பவர்கள் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசியல்வாதிகள்தான் என்பது வெளிப்படையான இரகசியம். நாட்டின் முக்கியமான தலைவர் ஒருவருக்கான அடைமொழியே 'திருவாளர் பத்துசதவீதம்' (Mr.Ten Percent) என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. இலங்கையில் அரசியல் என்பது இலாபம் தரும் முதலீடுகளில் ஒன்று. பதவி, அதிகாரம், சிறப்புச் சலுகைகள் என்பவற்றுக்கு அப்பால் தனக்கு மட்டுமல்லாது தனக்குப்பின் வரும் தன் சந்ததிகளுக்கும் சொத்துகளைக் குவிக்கக் கூடிய கௌரவத் தொழில் அது. அரசியல் தலைவர்கள் தேர்தலில் இறங்கும்போது அவர்களுடன் கூடவே ஊழலும் இறங்குகிறது. வாக்குகளைக் கவர்வதற்காக பணம், பொருள், அரச சொத்துகளின் முறையற்ற பயன்பாடு, அதிகார முறைகேடு எனப் பல்வேறு வடிவங்களில் தொடங்கும் ஊழல் முறைகேடுகள் ஆட்சிக்கு வந்தபின் தரகுக் கட்டணங்களாகவும், தனிநபர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் ஊடாகவும், சூட்சுமமான முறைகளில் அரச நிதிகளைச் சூறையாடுவதன் மூலமும் நாட்டில் பல்கிப் பெருகுகிறது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு பாரிய ஊழல்களில் ஒன்று'ஹெல்பிங் ஹம்பாந்தோட்ட' முறைகேடு. சுனாமியால் பாதிக்கப்



பட்ட மக்களுக்கு உதவுவதற்காக சர்வதேசத்தால் வழங்கப்பட்ட நிதியை தனது தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு மாற்றி மோசடி செய்த இம்முறைகேடு உச்ச நீதிமன்றம் வரை சென்றபோதும் குற்றவாளியான மகிந்த நிரபராதியாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார் என்பதை தனது ஓய்வின் பின் வெளிப்படுத்தினார் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா. இதைவிட ஹம்பாந்தோட்ட பொது வைத்தியசாலை நிர்மாணத்தில் அவுஸ்ரேலிய நிறுவனம் ஒன்றிடமிருந்து பல மில்லியன் தரகுப் பணம், அஜிட் நிவாட் கப்ரால் மத்தியவங்கி ஆளுநராக இருந்த போது 5.31 பில்லியன் டொலர் அரச பணம் முறைகேடாக வெளிநாட்டுக்கு அனுப்பியமை, துறை முக நகர ஒப்பந்தத்தில் பல கோடி டொலர்கள் தரகுப் பணம், தமிழர் ஒருவரை மணமுடித்த மகிந்தவின் சகோதரியின் முறைகேடுகள் என இந்தப் பட்டியல் மிக நீளமானது.

நல்லாட்சி என அவர்களே சூட்டிக் கொண்ட ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த பாரிய நிதிமுறைகேடு மத்திய வங்கியின் உண்டியல் விற்பனை மோசடி. இரட்டைக் குடியுரிமை கொண்டோர் தேர்தலில் போட்டியிட முடியாது எனச் சட்டம் கொண்டு வந்தவர்களே நாட்டின் நிதிக்கட்டமைப்புக்குப் பொறுப்பான மத்திய வங்கிக்கு இரட்டைக் குடியுரிமை கொண்ட அர்ஜுன மகேந்திரவை ஆளுநராகநியமித்து புரிந்த மிகப்பெரிய மொசடி இது. இம்மோசடியுடன் தொடர்புபட்ட நிறுவனம் அர்ஜுன மகேந்திரவின் மருமகனுடையது என்பதற்கப்பால் அந்நிறுவனத்தின் அதிகாரமிக்க பதவியொன்றில் இருந்தவர் அஜிட் நிவாட் கப்ராலின் சகோதரி என்பது பலருக்குத் தெரியாதவிடயம். கட்சி மாறினாலும் ஆட்சியாளர்கள் எல்லோரும் கூட்டுக் களவாணிகள் என்பதற்கு இது போல் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. அதனால்தான் ஆட்சியாளர் மாறினாலும் இத்தகைய முறைகேடுகள் அடக்கிவாசிக்கப்படுகின்றன. மைத்திரிபால சிரிசேன மகாவலி அமைச்சராக இருந்தபோது அணை ஒன்றை கட்டும் ஒப்பந்தத்துக்காக நிறுவனம் ஒன்றிடமிருந்து 1.8மில்லியன் டொலர்களைப் பெற்றார் என குற்றஞ்சாட்டப்பட்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**பதினாறு முறை இலங்கை அரசால் ஏமாற்றப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தை பதினேளாவது முறையும் ஏமாற்றுவதற்கான ஒரு முயற்சியாக இலஞ்ச ஒழிப்பு சட்ட வரைவு அமையக்கூடும். திருடானாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்ற பட்டுக்கோட்டையாரின் வரிகள் ஊழலுக்கும் பொருந்தும்.**

பதவியில் இருந்து துரத்தப்பட்ட கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதியின் குறுகிய ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த திட்டமிட்ட பெரிய நிதிமோசடி சீனிக்கான வரிக்குறைப்பு ஆகும். இறக்குமதி செய்யப்படும் சீனிக்கான வரி கிலோ ஒன்றுக்கு 50 ரூபாவிலிருந்து 25சதமாக குறைத்து நிறுவனமொன்றின் மூலம் கையாடியதன் மூலம் அரச வருமானத்திற்கு ஏற்பட்ட இழப்பு 59 பில்லியன் ரூபாக்களாகும். இவ்விழப்பும் மத்தியவங்கி மோசடி இழப்பும் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்த காரணிகளில் அடங்கும். ஜனாதிபதிகள், பிரதமர்கள் மட்டுமல்ல அமைச்சர்களும் இந்த வகையறாக்களே. ஆட்சியிலிருந்த, தற்போதும் இருக்கிற பல அமைச்சர்கள் மீது பல ஊழல்குற்றச்சாட்டுகள் மட்டுமன்றி வழக்குகளும் நிலுவையாக உள்ளன. இந்தச் சட்டமூலத்தைச் சமர்ப்பித்த விஜயதாச ராஜபக்க்ஷ கூட 'அவன்காட்' மோசடியுடன் தொடர்புபடுத்தப் பட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டும் உண்டு.

அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழியே என்பது போல தனக்கு மேலுள்ளவர்களைப் பின்பற்றி கீழுள்ளவர்களும் ஈடுபடுவது ஆச்சரியத்துக்குரிய ஒன்றல்லவே. ஆட்சி மாறும்போது அமைச்சுகளுக்கான செயலாளர்கள், நிறுவனத் தலைவர்கள், ஆளுநர்கள், பணிப்பாளர்கள் போன்ற உயர்மட்ட அரச அதிகாரிகளை மாற்றுவதற்கான காரணிகளில் முறைகேடுகளைச் செய்வதற்கான தேவையும் ஒன்றாகும். மிக எளிய முன்னுதாரணம் யாழ்ப்பாண அரச அதிபராக மகேசன் இருந்தபோது அங்கஜனும் அவரது அள்ளக்கைகளும் மக்களுக்கு விநியோகித்த அரச மானியங்களை இப்போது சிவபாத சுந்தரன் கீழ் டக்ளஸ் உம் அவரது அள்ளக்கைகளும் விநியோகிக்கிப்பது.

இலங்கையில் ஊழல் முறைகேடுகள் உயர்ந்த அளவில் இருப்பதற்கான காரணிகள் பலவற்றை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இவற்றுள் முக்கியமானது சட்டத்தை ஆக்குபவர்களும் அதனைக்காக்க வேண்டியவர்களுமே ஊழல் முறைகேடுகளில் அதிகம் ஈடுபடுபவர்களாக இருந்துவருவது. ஆட்சியாளர்கள், அதிகாரிகள் என்பவர்களுக்கு அப்பால் சட்டத்தின் காவலர்களான காவல்துறையே நாட்டில் இலஞ்சம் ஊழலில் முதலிடத்திலுள்ளதாக ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன. கைமாறும் மொத்த இலஞ்சத்தில் 30 வீதம் காவல் துறையிலேயே காணப்படுகிது. இதைத்தான் வேலியே பயிரை மேய்வது என்பது. அதுமட்டுமல்ல இதில் நீதித்துறையின் பங்கு சராசரி 4வீதம் ஆகும்.

ஆட்சியாளரின் ஊழல் முறைகேடு தொடர்பான நீதிமன்ற அணுகுமுறை எப்படியானது என்பதற்கு 'ஹெல்பிங் ஹம்பாத்தோட்ட' வழக்கொன்றே போதும். இவ்வாறான தவறான தீர்ப்புகள், ஜனாதிபதி மன்னிப்பளித்தல், வெளிநாடுகளுக்குத் தப்பியோடுதல், அரசியல் செல்வாக்கு போன்றவற்றால் குற்றவாளிகள் தண்டிக்கப்படாதிருப்பது ஊழல் செய்வதற்கு மேலும் மேலும் தூண்டுதலாக அமைகின்றன. இங்கு காவல் மற்றும் நீதித் துறைகள் ஊழல் பெருச்சாளிகளை ஓடவிட்டு எறும்புகளை மட்டும் பிடிக்கும் வல்லமை கொண்டவை.

இன்னொரு முக்கிய பலவீனம் தன்னாதிக்கமற்ற ஆணைக்குழுக்கள். முன்மொழியப்பட்ட சட்டத்தில் மட்டும் ஆணைக்குழு அமைக்கப்படவில்லை. 1994ஆம் ஆண்டுச் சட்டத்திற்கமைய இலங்கையில் இலஞ்ச ஊழல் ஒழிப்புக்கான ஆணைக்குழு ஒன்று இருந்து வருகிறது. இந்த ஆணைக்குழு இருக்கையிலேயேதான் ஏலவே சுட்டிக்காட்டிய அத்தனை முறைகேடுகளும் இந்நாட்டில்அரங்கேறின. இங்குள்ள ஆணைக்குழுக்களின் தன்னாதிக்கம் என்பது பெயரளவிலானதே. இதற்கானஅண்மிய உதாரணங்கள்தான் தேர்தல் மற்றும் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுக்களின் இன்றைய நிலை. இதைவிட மோசமானது உண்மைகளைக் கண்டறிவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு. இவற்றின்நிலை புதிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் ஆணைக் குழுவுக்கும் வரமாட்டாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. இவ்வாணைக்குழுக்களின் பிரதான பலவீனம் என்னவெனில் தவறுசெய்பவர்களாலேயே அதனைப் பாதுகாப்பதற்கான ஆணைக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவது. பொதுத்துறையில் ஊழலைத் தடுப்பதற்கு வெளிப்படைத்தன்மையும் சட்டவாட்சியும் மிக அவசியம். இந்நாட்டில் இவையிரண்டும் பெயரளவில் மட்டுமே இருக்கின்றன. இதற்கான அண்மிய உதாரணம்தான் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்த நிபந்தனைகள். அது பாராளுமன்றத்தால்அங்கீகரிக்கப் பட்டபோதும்கூட அதுபற்றி நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல பாராளுமன்ற உறுப்பினர்க்குக்கூட முழுமையாகத் தெரியாது.

ஊழல் முறைகேடுகளைத் தடுப்பதற்கு அது தொடர்பான புலனாய்வு ஊடகவியலாளர்களும் ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் சுயாதீன அமைப்புகளும் அவசியமானவை. ஒப்பீட்டு ரீதியில் எமது நாட்டில் துணிவும் ஆற்றலும் உள்ள புலனாய்வு ஊடகவியலாளர்கள் மிகக்குறைவு. அவ்வாறு உருவாகுபவர்களைக் கூட உயிருடன் இருக்க விடுவதில்லை என்பதற்கு லசந்த விக்கிரமசங்க, எகலியனகொட போன்றோர் எடுத்துக் காட்டு. அதேபோல ஊழலுக்கெதிராகக் குரல் கொடுக்கும் சுயாதீன அமைப்புகளும் பலவீனமாகஇருப்பதுடன் மக்களிடையே அதற்கெதிரான விழிப்புணர்வும் போர்க்குணமும் போதாமையாகவுள்ளன.

நாட்டில் இலஞ்ச ஊழல் முறைகேடுகள் தொடர்பாக காணப்படும் இத்தகைய களநிலைமைகளில் புதிதாகக் கொண்டுவரப்படும் இச்சட்டத்தினால் பெரிதாகச் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை நாம்கொள்ள முடியாதுள்ளது. பதினாறு முறை இலங்கை அரசால் ஏமாற்றப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தை பதினேளாவது முறையும் ஏமாற்றுவதற்கான ஒரு முயற்சியாகவும் இது அமையக்கூடும். திருடானாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்ற பட்டுக் கோட்டையாரின் வரிகள் ஊழலுக்கும் பொருந்தும்.

# பேசுபொருளாகியிருக்கும் தையிட்டி திஸ்ஸ விகாரை

## அரசியல்வாதிகளுக்கு காலம் கடந்த ஞானமா?

வலி.வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட தையிட்டிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 100 அடி உயரமான விகாரையை அகற்றக்கோரி தொடர்ச்சியாக மூன்று நாட்கள் போராட்டம் இடம்பெற்றிருந்த நிலையில் பொலிஸாரினால் போராட்டம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விகாரையின் வழிபாட்டுச் செயற்பாட்டுக்கு எந்தவித தடையும் ஏற்படுத்தப்படக்கூடாது என நீதிமன்றம் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

தற்போது பேசுபொருளாக உள்ள இந்த விகாரை 2018 ஆம் ஆண்டு அப்போதைய வடக்கு மாகாண ஆளுநரால் அடிக்கல் நட்டப்பட்டு மிகவும் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இராணுவ கட்டுப்பாட்டுக்குள் தனியாருக்குச் சொந்தமான காணிகளை பிடித்து விகாரை அமைக்கப் பட்டுள்ளது.

எனினும் விகாரை அமைக்கப்பட்டுள்ள இடத்துக்கு அண்மையில் பௌத்த துறவி ஒருவருக்கு 22 பரப்பு காணி உள்ளது

எனவும், எனினும் விகாரை அவருக்குரிய நிலத்தில் கட்டப்படாது பொதுமக்களின் காணியில் அமைக்கப்பட்டுள்ளமையானது தற்போது பேசுபொருளாகக் காணப்படுகின்றது.

இந்த விகாரை தொடர்பில் அந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் என்ன சொல்கிறார்கள்?

## இப்போது ஒன்றுகூடி என்ன பயன்?



**வ.பிரபாகரன்**
*தையிட்டி*

தையிட்டி விகாரை விடயம் தற்போது பூதாகரமான விடயமாக போய்க்கொண்டிருக்கின்றது. 2018 ஆம் ஆண்டு விகாரை கட்ட ஆரம்பிக்கப்பட்டபோது இடையிலே பல விடயங்கள் நடைபெற்றன.

இதில் பிரதேச சபை இருந்த காலத்தில் பிரதேச உறுப்பினர் ஒருவர் அந்த விகாரை விடயத்தை முன்மொழிந்து அதற்கான தடையை போடுமாறு சபையில் தவிசாளரிடம் கேட்டிருந்தார். பௌத்தவிவகார அமைச்சுக்கு கடிதம் அனுப்பி இருக்கின்றோம். அத்தோடு நகர அபிவிருத்திஅதிகார சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தவிசாளர் அப்போது தெரிவித்திருந்தார்.

எனினும் இந்த புத்த விகாரை நிர்மாணித்து முழுமையாக பூர்த்தி அடைந்துவிட்டது. இப்போது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கே சங்கமித்துள்ளார்கள். இப்போது அங்கே ஒன்றுகூடி என்ன செய்யப் போகின்றார்கள் என நாங்கள் பார்க்கவேண்டும்.

மிகப் பிரமாண்டமான செலவில் இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இந்த விகாரைக்கு 15 பரப்பு காணி இருக்கின்றது. ஆனால் விகாரை அந்த 15 பரப்புக்குள் கட்டப்படவில்லை என்பதும் ஒரு உண்மையான விடயம்.

யாழ்.மாவட்டத்தில் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் இந்த விடயத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. அனைத்தும் முடிந்த பிறகு வந்து ஒன்றுகூடி உள்ளார்கள். தங்களின் வாக்குவேட்டைக்காக இங்கே அனைத்தும் முடிந்த பிறகு வந்து போராட்டம் என்ற பெயரில் வாக்குவேட்டை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

அதாவது விகாரை கட்டப்படும்போது சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அதனை தடுத்து இருக்கலாம். ஏதோ ஒரு வகையில் கையாண்டு இந்த விகாரை அமைப்பதைத் தடுத்து நிறுத்தி இருக்கலாம். இந்த விகாரை அமைக்கப்பட்ட காணி யாருடையது என நமக்கு தெரியவில்லை.

ஆனால் அந்த விகாரை அமைக்கப்பட்டு நிறைவுறும் வரை எந்த பாராளுமன்ற உறுப்பினரும் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடவில்லை.

குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றில் இருந்து கதைத்துவிட்டு வருவதுதான் வேலை. மக்களின் அடிப்படை பிரச்னைகளை தீர்ப்பதாக இல்லை

மக்களின் பிரச்னைகளை நேரடியாக வந்து பார்ப்பதும் இல்லை. மக்களின் அடிப்படை பிரச்னைகள் நிறைய உள்ளன. அந்த பிரச்னைகளையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்தில் எடுக்கவேண்டும்- என்றார்.




## மக்களின் காணிகளில் சட்டவிரோத விகாரை



**ந.காண்டீபன்**
*சட்டத்தரணி*

பொதுமக்களின் காணிகளை சட்டவிரோதமாக அபகரித்து - ஆக்கிரமித்து கட்டி எழுப்பப்பட்டுள்ள இந்த விகாரையை உடனடியாக அகற்றவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து 3 நாள்கள் போராடினோம்.

இந்த விகாரை அமைத்துள்ள அனைத்து காணிகளும் தையிட்டியை பூர்வீகமாகக் கொண்ட மக்களுடையவை. அந்த காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

இந்த விகாரை அமர்ந்திருக்கின்ற காணி பொதுமகன் ஒருவருக்கு சொந்தமானது. ஆனால் உரிமையாளருடைய சம்மதமும் இல்லாமல் சட்ட விரோதமாக இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விகாரைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது 2018 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம்.

உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த விகாரை இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் தொழுகை தளமாக மட்டுமே இருந்து வருகின்றது.

இது ஒரு அடக்குமுறையின் உச்ச கட்டம். இந்த காணிகளை விடுவிக்குமாறு பலதரப்பட்ட கோரிக்கை விடப்பட்டபோதிலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இது சட்ட விரோதமான விகாரை என்பதனை தடுத்து நிறுத்துமாறு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் கூட கோரப்பட்டுள்ளபோதிலும் அதனை தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கை எதுவும் அப்போதைய ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்படவில்லை - என்றார்.

## பல அரசியல் கட்சிகளிடம் முன்பு கூறினேன்



**ஐ.யோகராஜா**
*தையிட்டி*

எனது வீட்டுக்கு முன்னால் உள்ள விகாரை பற்றி பல அரசியல் கட்சிகளிடம் முன்பு கூறினேன்.

அவர்கள் எட்டியும் பார்க்காது தற்போது 100 அடி விகாரை கட்டி முடிந்த பின்னர் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஏழு, எட்டு பேரின் காணிகளை அடாத்தாக பிடித்து விகாரை கட்டி உள்ளனர்.

பௌத்த பிக்குகளுக்கு சொந்தமான 22 பரப்பு காணி இருகின்றது. ஆனால் அதனை தவிர்த்து பொது மக்களின் காணிகளில் இந்த விகாரையை அமைத்துள்ளனர்.

குறிப்பாக தையிட்டி மக்கள் விவசாயிகள். விவசாயம் செய்வதற்கு போதிய அளவு இட வசதிகள் இல்லை. குறிப்பாக கடந்த காலங்களில் தினமும் மூன்று லொறிகளில் விவசாயப் பொருட்கள் இங்கிருந்து வெளியிடங்களுக்கு அனுப்பிய நிலை காணப்பட்டது.

ஆனால் தற்பொழுது எமது பகுதிகளை ராணுவம் கையகப்படுத்து வைத்திருப்பதன் காரணமாக நாம் கையேந்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எமது தனியார் காணிகளை அத்துமீறி கையகப்படுத்தி அந்த காணிகளில் இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளமை மிகவும் வருத்தத்துக்குரிய விடயமாகும்.

எனினும் இந்த விடயம் தொடர்பில் ஏற்கனவே நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியப் படுத்தியிருந்தோம். ஆனால் அதனை யாரும் தடுத்து நிறுத்த முன் வரவில்லை - என்றார்.

## உங்கள் அரசியலுக்காக எங்களை பொய்யராக்காதீர்

**பத்மநாதன்**
*தையிட்டி*

தையிட்டி விகாரைக்கு அருகில் உள்ள காணிகளை இராணுவத்தினரிடம் இருந்து விடுவித்து தரக் கோரி 2021ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிடம் ஒப்படைத்த கடிதம் போலியானது அல்ல எனக் கடிதம் எழுதி கையெழுத்து வைத்தவர்களில் ஒருவரான பத்மநாதன் தெரிவித்தார்.

தமது காணிகளை இராணுவத்தினரிடம் இருந்து பெற்று தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரி தையிட்டி விகாரையை சூழவுள்ள காணி உரிமையாளர்கள் 2021ஆம் ஆண்டே பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனிடம் கடிதம் மூலம் கோரி இருந்தனர்.

அந்த கடிதம் சமூக வலைத்தளங்களில் வெளியாகி இருந்ததுடன், கடிதம் கொடுத்தவர்களில் ஒருவரான பத்மநாதன் என்பவரும் ஊடகங்களுக்கு கடிதம் கொடுத்தமை தொடர்பில் கருத்து தெரிவித்து இருந்தார். இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் 2019 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமா ருக்கு எழுதப்பட்ட கடிதம் என ஒன்றை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து , அந்த கடிதம் எழுதப்பட்ட கால பகுதியில் கஜேந்திரகுமார் பாராளுமன்ற உறுப்பி னரே இல்லை. ஒருவரின் தொலைபேசி இலக்கம் 11 இலக்கங்களை கொண்டுள்ளது. இருவரின் கையெழுத்தும் ஒரே மாதிரி உள்ளது என்று கூறி இந்த கடிதம் போலியானது என குறிப்பிட்டு, அந்த கடிதத்துடன் , கஜேந்திரனுக்கு எழுதிய கடிதத்தையும் இணைத்து , அந்த கடிதம் போன்றே இந்த கடிதமும் போலி என நிறுவமுயசித்தனர்.

இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஆ. பத்தமநாதன் - நாங்கள் கடிதம் கொடுத்தது உண்மை. விரும்பினால் அந்த கடிதத்தின் கீழ் உள்ள ஏனையவர்களின் தொலை பேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு கடிதம் கொடுத்தன் உண்மை தன்மையை விளங்கி கொள்ளுங்கள்.

தங்களின் அரசியலுக்காக எம்மை பொய்க்காரர் ஆக்குவது எமக்கு மிகுந்த மன வேதனையை ஈடுபடுத்தியுள்ளது. - என்றார்.




## திகதியை மாற்றிய 'மாவீரன்'

ரஜினியின் 'ஜெயிலர்' படம் ஒகஸ்ட் 10ஆம் திகதி வெளியாகும் என்று நேற்று அறிவிக்கப்பட்ட நிலையில், சிவகார்த்திகேயனின் 'மாவீரன்' வெளியீட்டு திகதியை படக்குழு தற்போது மாற்றியுள்ளது.

சிவகார்த்திகேயன், அதிதி ஷங்கர் நடிக்கும் படம், 'மாவீரன்'. 'மண்டேலா' படத்தை இயக்கிய மடோன் அஸ்வின் இயக்குகிறார். இயக்குநர் மிஷ்கின் வில்லனாகவும், நடிகை சரிதா முக்கிய வேடத்திலும் நடிக்கின்றனர்

ரஜினியின் ஜெயிலர் படம் இதேநாளில் வெளியாக வுள்ளது. இதையடுத்து 'மாவீரன்' திரைப்படம் வரும் ஜூலை 14ஆம் திகதி வெளியாகவுள்ளது.



## ஒகஸ்டில் ஜெயிலர்

இயக்குநர் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் தயாராகி வரும் இந்த படத்தில் மோகன்லால், சிவராஜ் குமார், ஜாக்கி ஷெராப், சுனில், தமன்னா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகின்றனர்.

இந்த படம் வரும் ஒகஸ்ட் 10 அன்று திரையரங்கில் வெளியாகும் என்று திரைப்பட நிறுவனம் அறிவித்துள்ளது.

## 300 கோடி வசூல்

மணிரத்னம் இயக்கத்தில் அதிக செலவில் தயாரான 'பொன்னியின் செல்வன் 2' படம் கடந்த வாரம் வெளியானது.

4 நாட்களில் 200 கோடி இந்திய ரூபாயை வசூலித்த இந்தப் படம் தற்போது 300 கோடி ரூபாயை வசூலித்துள்ளது. இதை விட ஒளிபரப்பு உரிமங்கள் மூலமாக 100 கோடி ரூபாயை பெற்றுள்ளது. எனினும், இந்தப் படத்தின் முடிவு மாற்றம் வசூலை பாதித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.



## பிச்சைக்காரன் - 2



விஜய் ஆண்டனி தயாரித்து - இயக்கி - இசையமைத்து - நடிக்கும் திரைப்படம் "பிச்சைக்காரன் 2". சசி இயக்கத்தில் 2016ஆம் ஆண்டு வெளியான பிச்சைக்காரன் படத்தின் இரண்டாம் பாகம் இது. இந்தப் படத்தை இயக்க சசி மறுத்துவிட்டதால் விஜய் ஆண்டனி இயக்கினார். விஜய் ஆண்டனி படங்களிலேயே அதிக செலவில் தயாராகியுள்ளது.

இந்த நிலையில் படம் வருகிற 19ஆம் திகதி வெளிவருவதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.



## சிவகார்த்திகேயன் படத்தில் கமல்!

கமல்ஹாசன் தயாரிப்பில் சிவகார்த்திகேயன் நடிக்கும் 'எஸ். கே21' படத்துக்கான பணிகள் நேற்று பூசையுடன் தொடங்கியது.

மாவீரன் படத்தைத் தொடர்ந்து அவர் நடிப்பில் 'அயலான்' இந்த ஆண்டு இறுதியில் வெளியாகவுள்ளது. இந்தப் படங்களைத் தொடர்ந்து கமல்ஹாசன் தயாரிப்பில் சிவகார்த்தியேகன் நடிக்கும் படத்துக்கு இன்னும் பெயரிடப்படவில்லை.

'எஸ். கே. 21' என அழைக்கப்படும் இப்படத்தில் சாய் பல்லவியும் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கிறார். ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கும் இப்படத்தை ராஜ்குமார் பெரியசாமி இயக்குகிறார்.

## விஜயின் குஷி




லைகர் பட தோல்விக்கு பின்னர் இயக்குநர் சிவா நிர்வனா இயக்கத் தில் குஷி படத்தில் நடித்து வருகிறார் விஜய் தேவர கொண்டா. கதாநாயகியாக சமந்தா நடித்து வருகிறார்.

காதல் கலந்த உணர்ச்சி மிகு படமாக உருவாகிறது. சமீபத்தில் இப்படம் வரும் செப்ரெம்பர் 01 அன்று வெளியாகும் என அறிவித்தனர்.

இந்நிலையில், இந்த படத்தின் முதல் சிங்கிள் "என் ரோஜா நீயே" என்கிற பாடல் வருகிற மே 9ஆம் திகதியன்று வெளியாகும் என்று அறிவித்துள்ளனர். இந்த பாடல் 5 மொழிகளில் வெளியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மிரட்டும் மிருணாள்



2022ஆம் ஆண்டில் தெலுங்கில் தயாராகி தமிழ் உள்ளிட்ட மொழிகளிலும் வெளியாகி வரவேற்பைப் பெற்ற படம் "சீதா ராமம்". இந்தப் படத்தின் பிரபல மானவர் நடித்த மிருணாள் தாகூர்.

சமூக வலைத்தளங்களில் பிரபலமாக இருக்கும் மிருணாள் அண்மையில் அவருடைய இன்ஸ்டா தளத்தில் சில கவர்ச்சியான படங்களைப் பதிவிட்டிருந்தார். "என்னை சொர்க்கத்திலும் நீங்கள் பார்க்கலாம்," எனப் பதிவிட்டிருந்த ஒரேநாளில் 14 இலட்சம் விருப்புகளை பெற்றுள்ளது.




**திரைப்படம் - தீர்க்கதரிசி**
**தயாரிப்பு - ஸ்ரீ சரவணா பிலிம்ஸ்**
**இயக்கம் - பி.ஜி.மோகன் - எல்.ஆர். சுந்தரபாண்டி**
**இசை - பாலசுப்ரமணியன்**
**நடிப்பு - அஜ்மல், சத்யராஜ்**

காவல்துறையை மையமாக வைத்து பல படங்கள் வந்துள்ளன. ஆனால், காவல்துறை கட்டுப்பாட்டு மையத்தை மையமாக வைத்து இதுவரையில் அதிகமான படங்கள் வந்ததில்லை. இந்தப் படத்தை அப்படிப்பட்ட பின்னணியில் பரபரப்பான குற்றங்கள் - மர்மங்கள் நிறைந்த கதையை கொடுக்க முயற்சித்திருக்கின்றனர் இயக்குநர்கள்.

காவல் துறை கட்டுப்பாட்டு அறைக்கு ஒருவர் அடிக்கடி தொலைபேசி அழைப்பு எடுத்து, சென்னை மாநகரில் சில குற்றங்கள் நடக்கப் போகின்றன என்று தகவல் தெரிவிக்கிறார். இதன்படி சில குற்றங்கள் நடந்துவிடுகின்றன. ஒரு சில தடுக் கப்படுகின்றன. இதைப் பற்றி விசாரிக்க துணை ஆணையர் அஜ்மலுக்கு பொறுப்பு வழங்கப்படுகிறது. அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் அந்த நபர் யார், அவர் சொல்வது போல எப்படி நடக்கிறது என்பதைத் தனது குழுவினருடன் கண்டுபிடிக்க விசாரணையில் இறங்குகிறார். அதன் பின் என்ன நடக்கிறது என்பதுதான் மீதிக் கதை.

ஒரு பரபரப்புடனேயே ஆரம்பமாகிறது கதை. அந்தப் பரபரப்பு அடுத்தடுத்த சில குற்றங்கள் சொன்னபடியே நடப்பதால் மேலும் பரபரப்பாகிறது. நம்மாலும் எந்த ஊகத்துக்கும் வர முடியாத அளவுக்கு திரைக்கதை அமைத்திருக்கிறார்கள்.

ஆனால், இரண்டாவது பாதியில் பிரதான கதையை விட்டு கொஞ்சம் விலகி, பின்னர்தான் பிரதான கதைக்கு வருகிறார்கள். அது வேகத் தடையாக அமைந்துவிடுகிறது. சில தேவையற்ற காட்சிகள் படத்தில் உள்ளன. அவற்றையெல்லாம் நீக்கியிருந்தால் பரபரப்பான த்ரில் நிறைந்த படம் பார்த்த முழு உணர்வைக் கொடுத்திருக்கும். படத்தில் கதாநாயகியே இல்லாமல் இருப்பது ஆச்சரியம்.

தமிழில் திடீரென நடிக்க வந்து திடீரென காணாமல் போய்விடும் அஜ்மல் தான் படத்தின் கதாநாயகன். நயன்தாரா நடித்த 'நெற்றிக்கண்' படத்துக்குப் பிறகு இந்தப் படத்தில் நடித்திருக்கிறார். துணை ஆணையர் கதாபாத்திரத்தில் 'பிட்' ஆக நடித்திருக்கிறார். கிளைமாக்சில் அவர் யார் என்று தெரிந்த பின் நமக்கு அவரது தோற்றம் குறித்து சந்தேகம் வந்துவிடக் கூடாதென 'ஆடுகளம்' நரேன் பேசும் ஒரு வசனத்தை வைத்து சமாளித்திருக்கிறார்கள்.

சத்யராஜ் கதாபாத்திரம் இடைவேளைக்குப் பிறகாவது வரும் என்று எதிர்பார்த்தால் அதில் ஏமாற்றம். காவல் துறை கட்டுப்பாட்டு அறையின் பொறுப்பாளராக சிறீமன், அஜ்மல்




குழுவில் இருக்கும் அதிகாரிகளாக துஷ்யந்த், ஜெய்வந்த் நடித்திருக்கிறார்கள்.

பாலசுப்பிரமணியத்தின் பின்னணி இசை பரபரப்பைக் கூடுதலாக்குகிறது. லட்சுமண் ஒளிப்பதிவு சிறப்பான ஒளியமைப்புடன் உள்ளது. பி. ஜி. மோகன், எல். ஆர். சுந்தரபாண்டி இருவரும் இணைந்து இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார்கள்.

ஒரு பரபரப்பான குற்றம் - மர்மம் நிறைந்ததாக மட்டுமே படம் நகரும் என்று நினைத்திருந்தால் உச்சக்காட்சிக்கு முன்பாக வேறு ஒரு திருப்பு முனை கொடுத்திருக்கிறார்கள். திண்டிவனம், சாதி மாறிய திருமணம், ரயிலில் மோதவிட்டு கொல்லப்படும் காதலன் என ஒரு சர்ச்சைக்கு வித்திட்டுள்ளார்கள்.

# முறியும் உறவு?

உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர வீரர் மெஸ்ஸியை இரண்டு வார காலத்துக்கு பாரிஸ் சென். ஜெர்மைன் (பி. எஸ். ஜி. ) அணி இடைநிறுத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சவூதி அரேபியாவுக்கு தனிப்பட்ட முறையில் மெஸ்ஸி மேற்கொண்ட பயணத்தின் காரணமாக அவர் இந்த இடைநிறுத்த நடவடிக்கைக்கு ஆளாகி உள்ளார் என்று தெரிய தெரிகிறது. அவரது நீண்ட விளையாட்டு வாழ்க்கையில் முதல்முறையாக இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இடைநிறுத்தல் நடவடிக்கை உடனடியாக அமுலுக்கு வந்துள்ளதாகவும் பிரான்ஸ் நாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. இதன் காரணமாக வரும் 8 மற்றும் 13ஆம் திகதி அன்று பி. எஸ். ஜி. விளையாடவுள்ள இரண்டு போட்டிகளில் அவர் விளையாட மாட்டார் என்றும் சொல்லப்படுகிறது.

கடந்த 2021 முதல் பிரான்ஸ் நாட்டின் பி. எஸ். ஜி. உதைபந்தாட்ட அணிக்காக மெஸ்ஸி விளையாடி வருகிறார். 2021 முதல் 2023 வரையில் இரண்டு ஆண்டு காலத்துக்கு அவரை ஒப்பந்தம் செய்துள்ளது பி. எஸ். ஜி. மேலும், விருப்பத்தின் பேரில் இந்த ஒப்பந்தத்தை மேலும், ஓராண்டு காலம் நீட்டிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பிஎஸ்ஜி அணிக்காக 54 போட்டிகளில் விளையாடி உள்ள அவர் 21 கோல்களை பதிவு செய்துள்ளார். பி. எஸ். ஜி. அணியுடனான அவரின் இரண்டு ஆண்டு கால ஒப்பந்தம் வரும் ஜூனில் முடிவுக்கு வரவுள்ளது.

இதே நேரத்தில் அவர் மீண்டும் பார்ஸிலோனா கழக அணிக்காக விளையாட உள்ளார் என்று கடந்த பெப்ரவரி மாதம் செய்திகள் வெளிவந்தன. இதனை ஸ்பெயின் நாட்டு ஊடகங்கள் அப்போது உறுதி செய்திருந்தன.

தற்போதைய சூழலை வைத்துப் பார்க்கும் போது மெஸ்ஸி, தனது கழக அளவிலான பயணத்தை பி. எஸ். ஜி. அணியுடன் தொடர்வாரா அல்லது அதற்கு முற்றுப்புள்ளி வைப்பாரா என ரசிகர்கள் தீவிரமாக பேசி வருகின்றனர்.







# சீண்டும் பிரோட்...!

கடந்த ஆஷஷ் தொடரில் 4-0 என்று அவுஸ்திரேலியாவிடம் தோற்றது இங்கிலாந்து அணி. இப்போது புதிய பயிற்றுநர் மக்கலம், புதிய அணித் தலைவர் பென் ஸ்ரோக்ஸ் தலைமையில் டெஸ்ட் கிரிக்கெட்டை புரட்டிப் போட்டு எல்லா அணிகளையும் புரட்டி எடுத்து வருகின்றது.

இதையடுத்து தற்போதைய ஆஷஷ் தொடர் இங்கிலாந்தில் நடக்கவிருப்பதால் ஸ்ருவர்ட் பிரோட் அவுஸ்திரேலியா அணியை தற்போது சீண்டியுள்ளார். கடந்த ஆஷஷ் தொடரில் அவுஸ்திரேலியா சொல்லி சொல்லி ஜெயித்ததை ஸ்ருவர்ட் பிரோட், அந்த வெற்றியெல்லாம் கோவிட் தொற்று ஏற்படுத்திய கட்டுப்பாடுகளால் யாரும் தகுதியில் இல்லை - நல்ல மனநிலையில் இல்லை. ஆகவே,அது 'ஒன்றுமில்லாத ஒரு டெஸ்ட் தொடர்' என்று வர்ணித்துள்ளார்.

ஜூன் 16ஆம் திகதி எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் ஆஷஷ் முதல் டெஸ்ட் நடைபெறுகிறது. இந்த ஆஷஷ் 2023 டெஸ்ட் தொடர் குறித்து டெய்லி மெயில் பத்திரிகைக்கு பேட்டி அளித்த ஸ்ருவர்ட் பிரோட் கூறியதாவது:

"கடந்த ஆஷஷ் தொடர் போல் கடினமான ஒன்று வேறெதுவும் இருக்க முடியாது. அதனால் கடந்த ஆஷஷ் தொடரை நான் உண்மையான ஆஷஷ் தொடராகக் கருதமாட்டேன். ஆஷஷ் தொடரின் விளக்கம் என்னவெனில், அது ஓர் உயர்மட்ட விளையாட்டு, நிறைய உணர்ச்சிகளுடன் வீரர்கள் அனைவரும் தங்கள் ஆட்டத்தில் உச்சத்தில் இருப்பதாகும். கடந்த ஆஷஷ் தொடர் அப்படிப்பட்ட உயர்மட்ட தொடர் அல்ல. கோவிட்டால் பயிற்சிகள் பாதிக்கப்பட்டன. வெளியில் செல்ல முடியவில்லை. சோஷியலைசிங் இல்லாமல் போய் விட்டது. கடந்த ஆஷஷ் தொடரை 'வெற்றுத் தொடர்' என்று பெயரிட விரும்புகின்றேன்.

இப்போதெல்லாம் நாங்கள் ஆடும் முறை வேறு. எங்களுடைய இந்த புதிய முறை அதிரடி ஆட்டத்தை அவுஸ்திரேலியா எங்கள் பாணியிலேயே எதிர்கொண்டால் உற்சாகமான தொடராக இருக்கும். எங்கள் ஆட்டத்தின் மூலம் அவர்கள் ஆட்டத்தையும் மாற்ற முடிந்ததெனில் அவர்கள் தவறுகள் இழைப்பார் கள் அது எங்களுக்குச் சாதகமாக அமை யும். ஸ்ரீவ் ஸ்மித், லபுஷான், கவாஜா ஆகியோர் கால அவகாசம் எடுத்துக் கொண்டு நீண்ட நேரம் ஆடுபவர்கள். அவர்களிடத்தில் கொஞ்சம் சீண்டினால் அவர்கள் யோசிக்கத் தொடங்குவார்கள். 'நாமும் ஏன் வேகமாக ஆடக்கூடாது, நாம் ஏன் ஆட்டத்தை இன்னும் விரைவு கதிக்குக் கொண்டு செல்லக் கூடாது' என்று அவர்களை நினைக்கவைத்து விட்டால் எங்களுக்கே சாதகம் என்று அவுஸ்திரேலியாவை சீண்டியுள்ளார் பிரோட்.

# என் போன்று நடக்காதீர்கள்...!

தமிழரான ரவிச்சந்திரன் அஷ்வின் ஐ.பி.எல் தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக ஆடி வருகிறார்.

கிரிக்கெட் ஆடுவது மட்டுமின்றி கிரிக்கெட் சார்ந்து தனது யூ-ரியூப் சனலிலும் தொடர்ச்சியாக காணொலிகளை பதிவிட்டு வருகிறார். அஷ்வினின் இந்த யூ-ரியூப் சனலுக்குமே தனி ரசிகர் வட்டம் இருக்கிறது.

இந்நிலையில் சமீபத்தில் ரசிகர்களின் கேள்விக்கு பதில் சொல்லும் நிகழ்ச்சியை அஷ்வின் நடத்தியிருந்தார். அதில், ரசிகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு, "நான் செய்த தப்பை நீங்களும் செய்யாதீர்கள்" என இளைஞர்களுக்கு அறிவுரை கூறியிருக்கிறார். அஷ்வின் அப்படி என்னதான் தவறு செய்தார்?

"களத்தில் வெளிப்படும் சுப்பர் ஸ்ரார் அந்தஸ்தில் இருக்கும் வீரர்களின் செயல்பாடுகளும் நடத்தைகளும் அதை பார்க்கும் இளைஞர்களிடம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறதே. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்பதே அந்த ரசிகரின் கேள்வி.

இதற்கு பதிலளித்த அஷ்வின் ஒரு பழைய சம்பவத்தை நினைவுகூர்ந்து பேசினார், "ஐ.பி.எல்லில் ஒரு சமயத்தில் மக்ஸ்வெல் என்னுடைய பந்துகளை சரமாரியாக அதிரடியாகக் கொண்டிருந்தார். அபுதாபியிலும் கவுகாத்தியிலும் நடந்த போட்டிகளில் என்னுடைய பந்தில் சிக்ஸர்களாக பறக்கவிட்டிருந்தார். ஒரு போட்டியில் என்னுடைய 2 ஓவர்களில் 40 ஓட்டங்களையெல்லாம் அடித்திருக்கிறார். அவரை எப்படி வீழ்த்துவது எனும் கேள்விக்கு விடை தேடிக்கொண்டே இருந்தேன்.

அப்போதுதான் ஒரு போட்டியில் அவரின் விக்கெட்டை வீழ்த்திவிட்டு மக்ஸ்வெல்லை நோக்கி அப்படி வித்தியாசமான முறையில் கொண்டாடினேன். நான் அதற்கு முன் அப்படியெல்லாம் செய்ததே இல்லை. வயது கூடியிருக்கிறது. அனுபவம் கூடியிருக்கிறது.

இப்போதுதான் நான் அப்படி செய்திருக்கக்கூடாது என்பதை உணர்கிறேன். அந்த நாளுக்கு என்னால் திரும்பிச் செல்ல முடிந்தால் அந்த கொண்டாட்டத்தை தவிர்த்து விடுவேன். நாம் செய்யும் ஒரு செயலை நமக்கு நெருங்கிய சிறுவர்களோ இளைஞர்களோ நம் முன்னேயே செய்யும் போது நாம் சந்தோசப்படுவோமா என்கிற கேள்வியை கேட்டுக்கொண்டாலே போதும்.

என்னைப் பார்த்து ஓர் இளைஞர் நான் ஸ்ட்ரைக்கரை ரன் அவுட் ஆக்கினால் பெரும் மகிழ்ச்சியடைவேன். அதேநேரத்தில் மக்ஸ்வெல்லுக்கு எதிராக நான் கொண்டாடியதை போல கொண்டாட்டத்தில் யாரும் ஈடுபட்டால் வருந்தவே செய்வேன். நான் ஒரு முறை தவறு செய்துவிட்டேன். நீங்களும் அதே தவறை செய்துவிடாதீர்கள்." என்றார் அஷ்வின்.



2015 ஆம் ஆண்டின் ஐ.பி.எல் தொடரில்தான் அஷ்வின் சொன்ன அந்த சம்பவம் நடந்திருந்தது. ஒரு போட்டியில் மக்ஸ்வெல்லின் விக்கெட்டை எடுத்துவிட்டு ஆடுகளத்தை கையால் தொட்டு புழுதியை அற்பமாக ஊதிவிடுவது போல அஷ்வின் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தார். இதற்காகத்தான் இப்போது அஷ்வின் வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

# தேயிலை, அகதிகள், குரங்குகள்!

1990ன் பிற்பகுதியில் கனடாவின் ஒட்டாவாவில் நடைபெற்ற புதிய குடிவரவாளர் தொடர்பான மாநாடு



ஒன்றின் பிரதிநிதிகளில் ஒருவராக நான் பங்கு பற்றினேன். நிகழ்ச்சி நிரலில் எனது பெயருடன் சிறீலங்கா என்று பொறிக்கப் பட்டிருந்தது. மாநாட்டில் பங்குபற்றிய பலர் சிறீலங்கா எங்கிருக்கிறது என்று வினவினர்.

இந்தியாவின் கீழ்முனையைக் காட்டி நான் விளக்கியபோது 'சிலோன்' என்று பலரும் தெரிவித்தனர்.

சிலோன் தேயிலை அன்று வெளிநாடு களில் பிரபல்யம் பெற்றிருந்ததால், இலங்கை சர்வதேச அளவில் தெரியப் பட்டிருந்தது. இதனால் தேயிலையை அடையாளப்படுத்தியே சிலோனை பலரும் குறிப்பிடுவர்.

தேயிலை ஏற்றுமதியால் சிலோன் என்ற பெயர் பெற்றிருந்த முக்கியத்து வத்தை, அதன் பெயர் சிறீலங்கா ஆகிய பின்னர் தமிழ் அகதிகள் ஏற்றுமதியாக மாற்றிக் கொண்டது. ஈழத்தமிழருக்கு நேர்ந்த இன்னலுக்காக பல்நாட்டு பிரதி நிதிகளும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தனர். இது இருபது ஆண்டு களுக்கு முன்னைய கதை.

சிறீலங்கா என்று பெயர் மாற்றம் பெற்ற இலங்கை இன்று பிச்சைக்கார நாடாக உலகத்திடம் கடன் பெற்று மக்களுக்குத் தீனி போடும் நிலைக் குத் தள்ளப்பட்டுள் ளது. தேசத்தின் பாது காவலனாக சிங்கள பௌத்த மக்களால் தெரி வான கோட்டதா பய தனது உயி ரைக் காப்பாற்ற நாட்டைவிட்டுத் தப்பியோ டியததே பசி பொறுக்காத மக்களின் போராட்டத் தால்தான்.


ஆட்சி மாறியபோதும் மக்களுக்கு இன்னும் விமோசனம் கிடைக்கவில்லை. இதற்கு அரசுக்குத் தேவைப்படுவது பணம், கடனாக வந்தாலும் சரி, நன் கொடையாகக் கிடைத்தாலும் சரி, அரச சொத்துகளை விற்றுப் பெற்றாலும் சரி எப்படியாயினும் பணம் கிடைத்தால் போதும்.

இந்த வகையில் ரணிலுக்கு இப்போது கைகொடுக்க முன்வந்துள்ளன இலங் கைக் குரங்குகள். இராமர் அணைகட்ட உதவிய குரங்குகள், அனுமாரின் தலை முறையென காவியங்கள் எடுத்துரைக் கும் குரங்குகள் இன்று ரணிலுக்கும் உதவுகின்றன.

**தேயிலை, தமிழ் அகதிகள், குரங்குகள் என்பவற்றையடுத்து இனிமேல் ஏற்றுமதி செய்யக்கூடியவையாக வேறென்ன இருக்கிறது? நாய்கள், பாம்புகள், எலிகள், வௌவால்கள், முதலைகள்..... முடிவு சீனாவின் கைகளில்தான் தங்கியுள்ளது.**



கடலாலும் தரையா லும் இலங்கை யைத் தனதாக்கிக் கொண்டிருக் கும் சீனாவுக்கு இலங்கைக் குரங்குகள் தேவைப்படுகின்றன. முதற் தொகுதி யாக ஒரு லட்சம் குரங்குகள் சீனாவின் உணவுத் தேவைக்கு, ஆய்வுகூட பரி சோதனைக்கு, இனப்பெருக்கத்துக்குத்



**எஸ். திருச்செல்வம்**

தேவைப்படுகின்றனவாம். எதுவானால் என்ன ஒரு குரங்குக்கு 25,000 ரூபா கிடைக்குமென்றால் நாட்டின் ஒட்டு மொத்த குரங்குகளையும் ஏற்றிவிட ஆட்சிபீடம் தயாராகிவிடும்.

உள்நாட்டில் கட்சி தாவுபவர்களை வரவேற்கத் தயாராகவுள்ள ரணில், காடுகளில் கொப்புகள் தாவித்திரியும் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது முரண்பாடான விந்தை.

தேயிலை, தமிழ் அகதிகள், குரங்குகள் என்பவற்றையடுத்து இனிமேல் ஏற்றுமதி செய்யக்கூடியவையாக வேறென்ன இருக்கிறது? நாய்கள், பாம்புகள், எலி கள், வௌவால்கள், முதலைகள்..... முடிவு சீனாவின் கைகளில்தான் தங்கியுள்ளது.

(தமிழர் தகவல்- கனடா)



---



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

## வியுக்தியார் பதில்கள்

**ம. பிரதீபன் குருநகர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** தையிட்டியில் தமிழ் மக்களின் காணியில் அடாத்தாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றவும் - காணிகளை விடுவிக்கவும் கோரிய போராட்டம் தொடர்ந்து நடைபெற்றபோது ஒரு சிலர் மாத்திரமே கலந்துகொண்டதைக் காணமுடிந்தது. இது எதனைக் காட்டுகின்றது?.

**வியுக்தியார்:** இதில் காண்பதற்கு என்ன இருக்கின் றது. மக்கள் இதனை ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை என்பதைத் தவிர வேறு என்னதான் காண இருக்கின்றது. தனியார் காணியில் இப்படி விகாரை அமைக்க அத்தி வாரம் போடப்பட்டபோதே அதற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றிய அந்தப் பகுதிக்கு பொறுப்பான பிரதேச சபை, அதனை தீர்மானத்துடன் விட்டுவிட்டது. அது தனியார் காணி எனில் அந்தக் காணிக்காரர் நீதிமன் றத்தை அப்போதே நாடியிருந்தால், அதனை தடுத்திருக் கலாம். அப்போதெல்லாம் பேசாமல் இருந்துவிட்டு, இப்போது போய் கட்டிமுடிக்கப்பட்ட பின்னர், அது கும் நான்கு வருடங்களுக்கு பின்னர் விகாரையை அகற்று மாறு கேட்பது எவ்வளவு முட்டாள்தனமானது என் பதை மக்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்றே நினைக் கின்றேன். அந்தக் காணிக்காரர் வேண்டுமானால் தனக்கு நஷ்டஈடு தரவேண்டும் என்று இனியாவது கோரிக்கை விடுக்கலாம். அதற்கு ஆதரவாக போராட்டம் நடத்தி னால் இந்த வியுக்தியாரும் கலந்துகொள்ளத் தயார்.

---

**கே. தினேஸ், இராசாவின்தோட்டம் வீதி, யாழ்.**

**கேள்வி:** தையிட்டி விகாரைக்கு எதிராக நடத்தப் படும் போராட்டத்துக்கு ஆதரவாக கட்சி பேதங்கள் கடந்து யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட் டத்திலிருந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்திருந்தனர். அதுபற்றி என்ன நினைக்கின்றீர் கள். அதிலாவது அவர்கள் கட்சி வேறுபாடின்றி ஒற்றுமைப்பட்டார்கள் என்று சந்தோசப்பட்டீர்களா?

**வியுக்தியார்:** அட நீங்கள் வேறு. அவர்கள் மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு என்னத்தைத்தான் தமிழ் மக்களுக்கு பெற்றுத்தரப் போகின்றோம். அதைவிட அங்கிருந்து வெளிநடப்புச் செய்தால் அதனால் கிடைக்கின்ற பிரச்சாரம் தங்கள் தனிப்பட்ட அரசியலுக்காவது பயன்படுமே என்று நினைத்திருப்பார்களோ என்னவோ. அது சரி, அவர்கள் வெளிநடப்புச் செய்ததுதான் ஒற்றுமையாகவே தவிர, போராட்டத்தில் ஒற்றுமைப்படவில்லை. அங்கு சென்றிருந்த அங்கஜன் ராமநாதன், போராட்டக்காரர் களுக்கு கொடுத்த சிற்றுண்டிகளையே குப்பையில் போட்டார்களாம் முன்னணியினர். இந்த லட்சணத்தில் நீங்கள் ஒற்றுமை பற்றி சந்தோசப்படுப் போகின்றீர்களா?

---

**வை. தனராஜ், உவர்மலை, திருகோணமலை.**

**கேள்வி:** இனப்பிரச்னை தீர்வு விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் பாராளு மன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் அடுத்த வாரத்தில் 3 நாட்கள் தொடர் பேச்சு நடைபெறவுள்ள தாமே. இந்தத்தடவையாவது பேச்சுக்கள் வெற்றியளிக் கும் என்று நம்புகிறீர்களா? அது சரி, வடக்கு எம். பி.க்களை பேச்சுக்கு அழைத்துவிட்டு, அதற்கு முன்னத ாக 9ம் திகதி தமிழரசு கட்சியினரை தனியாக ஜனாதிபதி அழைத்திருப்பது எதற்காக?

**வியுக்தியார்:** முன்னரும் பல தடவைகள் இப்படி பேச்சுக்கள் நடந்து முடிந்திருக்கின்றன. அப்போதும் மூன்றுநாட்களுக்கு பேச்சுக்கு திட்டமிடப்பட்டாலும் முதல்நாளுடனேயே பேச்சு முடிவடைந்திருக்கின்றது. காரணம், பேச்சைத் தொடருவதற்காக அவர்கள் முன் வைக்கும் முன்நிபந்தனைகளை ஜனாதிபதி நிறைவேற் றாததாலேயே. பேச்சைத்தொடவேண்டுமானால் நல் லெண்ண அறிகுறியாக சிலவற்றைச் செய்யுங்கள் என்று அவர்கள் கேட்ட விடயங்களையே செய்யாத ஜனாதி பதி இப்போது பேச்சின்மூலம் எதனையாவது செய்வார் என்று நான் நம்பவில்லை. அதுசரி, பேச்சுக்கு முன்ன தாக அது என்ன தமிழரசுக்கட்சியுடன் தனியான சந்திப்பு என்று கேட்கின்றீர்கள், ஒரு ஜனாதிபதியை சந்திக்க வேண்டும் என்று ஒரு கட்சி கேட்டால் அவர் தனக்கு வசதியாக இருந்தால் சந்திப்புக்கு நேரம் கொடுப் பார்தானே. தமிழரசுக்கட்சியினர் ஏன் அப்படியொரு சந்திப்பை ஜனாதிபதியிடம் கேட்டார்கள் என்று அவர்களிடம்தான் கேட்கவேண்டும்.

---

**ஏ.கேதீஸ்வரன் பெரியகல்லாறு.**

**கேள்வி:** பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமர் பதவியைக் கைப்பற்றும் முயற்சியைத் தீவிரப்படுத்தியுள்ளார் என்றும் அண்மை யில் மகிந்த, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து இதற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளதே. அது உண்மையாக இருக்குமா?

**வியுக்தியார்:** அவர் பிரதமர் பதவியை குறிவைப் பதில் என்ன தவறு இருக்கின்றது. ஒருவர் அதுகும் ஜனாதிபதியாக பிரதமராக இருந்த மூத்த அரசியல் தலைவர் பிரதமர் பதவியை எதிர்பார்ப்பதில் தவறு இருப்பதாக தெரியவில்லை. ஆனால் அவரது கட்சி யிலிருந்த ஊழல்வாதிகளுக்கு அமைச்சரவையிலேயே இடம்கொடுக்க மறுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, இவரை பிரதமராக நியமிப்பார் என்று நம்புவ தற்கு நாம் என்ன முட்டாள்களா? ஆனால் அவர் முயற்சி செய்வதில் நாம் தவறைக்காண முடியாதுதானே.

# முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?

வ. ந.கிரிதரன்

"முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?
ஓரேன்! யானும் ஓர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவுவேன் கொல்,
அலமரல் அசை வளி அலைப்ப, என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே?" –
"குறுந்தொகை 28, ஔவையார் –

'டொராண்டோ மாநகரின் 'தோர்ன்கிளிவ் பார்க் டிரை'விலிருந்த தொடர்மாடிக்கட்டடங்களிலொன்றில்தான் கடந்த ஆறுவருடங்களாக அமுதா வசித்து வருகின்றாள். இலங்கையிலிருந்து முள்ளிவாய்க் காலில் யுத்தம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னால் கனடா வந்த தமிழர்களில் அவளும் ஒருத்தி. அவளது நல்ல காலம் அவளுக்கு அவளது இருப்பிடத்துக்கு அண்மையில் எக் ளிண்டன் வீதியும், டொன்மில்ஸ் வீதியும் சந்திக்கும் சந்திக்கண்மையிலிருந்த 'புளூ ஷிப்' நிறுவனங்களி லொன்றான 'கலக்டிகா'வில் வேலை கிடைத்திருந்தது. உலகின் பல பாகங்களில் கிளைகளைக்கொண்ட பெரியதொரு தொழிற்சாலை. கணினிக்குரிய பல 'பவர் சப்ளை', 'மெமரி கார்ட்' போன்ற பல பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனம். ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் மூன்று 'ஷிவ்ட்டு'களில் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அமுதா வேலை செய்வது மாலை நேர 'ஷிவ்ட்'. மூன்று மணிக்குத் தொடங்கும் வேலை இரவு பதினொரு மணிக்கு முடிவடையும். வேலை முடிந்ததும் டொன் மில்ஸ் வழியாகச் செல்லும் நம்பர் 25 பஸ்ஸில் தோர்ன்கிளிவ் பார்க் சென்று அவளது இருப்பிடத்துக்கு அண்மையிலிறங்கிச் செல்வது அவளது வழக்கம்.

கனடாவில் தோர்ன்கிளிவ் பார்க் பகுதியில் பாகிஸ்தானியர்கள் அதிக அளவில் வசித்துவந்தார்கள். அண்மைக் காலமாக ஆப்கானிஸ்தான் நாட்டவர்கள், ருமேனியா நாட்டவர்கள் பலரும் வந்து குடியேறத் தொடங்கி விட்டார்கள். அதிக அளவில் குடிவரவாளர் களால் நிறைந்திருந்த அப்பகுதியில் கனடாவில் அதிக அளவிலான பி.எச்.டி பட்டதாரிகள் இருப்பதாக ஒருமுறை டொரோண்டோ ஸ்டார் பத்திரிகையில் வெளியான கட்டுரையொனறில் குறிப்பிடப்பட்டிருந்தது. அமுதாவுக்கு அப்பகுதி மிகவும் பிடித்த பகுதி. டொரோண்டோ 'டவுன் டவுனு'க்கும் ஸ்கார்பரோவுக் குமிடையில் அமைந்திருந்ததால் நகரின் பரபரப்பு சிறிதே தணிந்திருந்தபோதும், 'டவுன் டவுனு'க்கு அண்மையிலிருந்தது. பார்க் , நூலகம், மால் என அனைத்தும் அருகருகே அமைந்திருந்தன. உண்மையில் 'டிரைவ்' சுற்றிவரத் தொடர்மாடிக்கட்டடங்களும், நடுவில் மால், நூலகம் ஆகியவையும் அமைந்திருந்தன. நூலகத்துக்கு அண்மையில் மேலதிகமாகச் சிறியதொரு 'பார்க்' அமைந்திருந்தது. மாலை நேரங்களில் பாகிஸ் தான் பெண்கள் குழந்தைகளுடன் அப் 'பார்க்கில்' குழு மியிருப்பார்கள். குழந்தைகளை விளையாடவிட்டு ஊர் வம்பளந்துகொண்டிருப்பார்கள். 'மால்' போய் வரும் சமயங்களில் சில வேளைகளில் அவள் அங்கிருக்கும் 'பெஞ்சி'ல் அமர்ந்து அவர்களை இரசிப்பாள். நெஞ்சில் ஒருவித அமைதி அச்சமயங்களிலெல்லாம் பரவுவது வழக்கம்.

அன்று வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த அமுதாவின் நினைவுகளில் கண்ணன் கூறியவையே ஒலித்துக்கொண்டிருந்தன. கண்ணன் அவளுடன் வேலை பார்க்கும் சக தொழிலாளி. அவனும் இலங்கையைச் சேர்ந்தவன். அவள் கனடா வருவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்பாகவே அவன் வந்திருந்தான்.

"அமுதா. நீங்கள் இன்னும் எத்தனைகாலம்தான் இப்படியே இருக்கப்போகின்றீர்கள்? நான் சொல்லுறேனென்று குறை நினைக்காதீங்கோ. நீங்கள் உங்கள் ஃபியூச்சரைப்பற்றியும் திங் பண்ண வேண்டும். உங்களுக்கு அப்படியென்ன வயசு. இன்னும் முப்பது கூட ஆகவில்லை. இருபத்தேழுதானே ஆகிறது.."


அமுதா பதிலுக்குக் கேட்டாள் " என்ன கண்ணன். இப்படிக்கூறுகிறீர்கள். உங்களுக்கு என்னுடைய கதை தெரியும்தானே.. தெரிந்தும் கொண்டா இப்படிச் சொல்லுறீர்கள்?"

"ஓம் அமுதா. தெரிஞ்சுகொண்டுதான் கூறுகிறன்"

அவள் அதற்கு மௌனமாகவிருந்தாள். அவள் மௌனத்தைத் தனக்குச் சாதகமாக்கி அவன் தொடர்ந் தான் " என்ன அமுதா பேசாமல் இருக்கிறியள்? நான் சொல்லுறது சரிதானே"

"என்ன சரி. நான் அது பற்றியே யோசிக்கவில்லை. நான் இன்னும் அருணனைத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறன். எனக்கென்னவோ அவர் நிச்சயம் திரும்பி வருவாரென்று நினைக்கிறன். நிறைய நம்பிக்கை இருக்கு"

அமுதாவுக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டிருந்தது. இறுதி யுத்தக்காலத்தில் அவள் வன்னியில் முல்லைத் தீவில் வசித்து வந்தாள். அப்பொழுதுதான் அவளுக்கு அவசர அவசரமாக அவளது தாய் அருணனை அவளுக்குத் திருமணம் செய்து விட்டு, ஒரு நாள் இலங்கை விமானப் படைத்தாக்குதலில் பலியானாள். அவளும், அவனும் விமானத்தாக்குதல்கள், அரச படைக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சண்டை களிலெல்லாம் தப்பி, பதுங்கு குழிகளில் பதுங்கி ஒரு மாதிரி யுத்தம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது இலங்கை இராணுவத்தின் தடுப்பு முகாமொன்றில் தஞ்சமடைந்தார்கள். அங்கு வைத்துத்தான் அருணனை இலங்கை அரசின் புலனாய்வு அதிகாரிகள் கூட்டிச்சென்றார்கள். அன்றிலிருந்து இன்று வரை எத்தனை வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. இன்னும் அவனைப்பற்றிய தகவல்கள் எவையுமில்லை.



" உங்களுக்கு இன்னுமா நம்பிக்கை? உங்களுக்குத் தெரியும்தானே புது சனாதிபதி கோத்தபாயா கூறியது. அவர் காணாமல்போன 20,000 பேருக்கும் மரணச் சேர்டிபிகட் தரவதாகக் கூறிய பிறகுமா நம்பிக்கை"

அமுதாவின் சிந்தையில் அருணனின் உருவம் தோன்றியது. எவ்வளவு நம்பிக்கையுடன் அவன் புலனாய்வு அதிகாரிகளுடன் சென்றான். அவர்களும் அப்படித்தானே கூறினார்கள். ஒன்றுக்கும் பயப்படத்தேவையில்லை. விசாரித்த பிறகு விட்டுவிடுவார்கள் என்று தானே கூறினார்கள். ஆனால் என்ன நடந்தது? இத்தனை வருடங் கள் கழிந்தும் அவனைப்பற்றிய தகவல்கள் எவையுமில்லை. ஆனால் அவளால் அவனை மறக்கவே முடியவில்லை. எவ்வளவு கனவுகளுடனிருந்தார்கள். அவளால் எப்படி அருணனை மறக்க முடியும். அவன் அவளது கணவன். யுத்தச் சூழலில் தப்பிப் பிழைத்திருந்தார்கள். யுத்தம் முடிவுக்கு வந்தபோது அவனால் தப்பிப்பிழைக்க முடியவில்லையே. எங்கே அவன் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றானோ? எவ்வளவு சித்திரவதைகளை அவன் அனுபவித்திருக்கின்றானோ?

அவளது மௌனத்தைக் கண்டு கண்ணன் கூறினான்: "அமுதா. நீங்கள் இப்படியே வாழ்க்கையை வீணாக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய விருப்பம். நானும் உங்களைப்போல்தான் இருந்தன். என்னுடைய கமலா கிளிநொச்சியில் சண்டை நடக்கேக்கை , விமானப் படைத்தாக்குதலுக்குப் பலியான பிறகு நானும் இப்படித்தான் பல வருடங்கள் இருந்தன். ஆனால் உங்க ளைக் கண்ட பிறகு கொஞ்சங் கொஞ்சமாக அந்த நினைப்பே மாறிட்டுது. நாங்கள் இருவருமே ஒரு விதத் தில் ஒரே நிலையிலை இருப்பவர்கள். போனவை போன வையாகவே இருக்கட்டுமென்று முடிவு செய்திட்டன். இப்படியே தொடர்ந்து இருக்கிறதாலை ஒருத்தருக்கும் இலாபமில்லை. நன்மையில்லை. நான் இன்னொரு முறை கல்யாணம் செய்யிறதாக இருந்தால் அது உங்களுடன்தான். அப்படி நடக்காவிட்டால் எனக்கு இனி மேல் கல்யாணப் பேச்சுக்கே இடமில்லை. நீங்க என் றைக்கு உங்கட மனம் மாறி, கல்யாணத்துக்கு ஓகே சொல்லுறீங்களோ, அது வரையிலை நானும் காத்திருப்பன்."

அன்றிரவு படுக்கையில் சாய்ந்தபொழுது அமுதா வின் உள்ளமெல்லாம் கண்ணனே நிறைந்திருந்தான். 'நாமிருவருமே ஒருவகையில் இருப்பது ஒரே நிலையிலைதான். ஆனால்..' என்றெண்ணினாள். 'ஆனால் அதற்காகக் அருணனிருந்த இடத்தில் இன்னொருவனா?' அந்த எண்ணம் தோன்றிய அடுத்த கணமே கண்ணனின் கனிவு நிறைந்த பார்வையும், குரலும் நினைவிலாடின. 'கண்ணன் எவ்வளவு நல்லவர்' என்று மனம் எண்ணிக் கொண்டது. 'வாழ்க்கை முழுக்க எனக்காகக் காத்து நிற்கப்போவதாகக் கூறுகின்றாரே.. வேறை யாரையும் கல்யாணம் செய்ய மாட்டாராமே.. ஏன் நான் அவரைக் கல்யாணம் செய்யக் கூடாது..'

அவளது எண்ணத்தில் அருணனுடன் வாழ்ந்த காலத்து நினைவுகள் படம் விரித்தாடின. மனம் ஒரு முடிவுக்கும் வர முடியாமல் தடுமாறியது. எவ்வளவு நம்பிக்கையுடன் அவர் புலனாய்வு அதிகாரிகளுடன் சென்றார். 'அமுதா ஒன்றுக்கும் கவலைப்படாதை. மடி யிலை கனமிருந்தால்தானே பயப்பட வேணும். தேவையில்லாமல் மனசை வருத்தப்பட வைக்காதை. நான் கெதியிலை வந்திருவன் தானே..'

ஆனால் இன்று எத்தனை வருடங்கள் கடந்து விட்டன. இன்னும் அவரைப்பற்றி ஒரு தகவலு மில்லையே...

நித்திரை வர மாட்டேனென்று முரண்டு பிடித்தது. பல்கணியிலிருந்த புறாச் சோடியிலொன்று அசைந்தது மெல்லிதாகக் கேட்டது. அன்று காலைதான் அவதானித்திருந்தாள் அங்கு அவை கூடொன்றைக் கட்டி இரண்டு முட்டைகள் இட்டிருந்ததை. தன்னைக் க்ண்டால் அவை பயந்துபோய் பறந்து விடுமேயென்று பல்கணிக்கதவருகில் கதவை மெதுவாகக்த்திறந்து எட்டிப்பார்த்தாள். அவள் இலேசாகக் கதவைத்திறந்ததுமே எச்சரிக்கையடைந்த புறாவொன்று சிறகடித்து பறந்து சென்று அருகிலிருந்த மேப்பிள் இலை மரமொன்றில் சென்றமர்ந்தபடியே தன் துணையை அவதானித்தபடியிருந் தது. அது ஆண் புறாவாக இருக்கவேண்டுமென்று எண்ணினாள். பெண் புறாவோ பார்வையில் எச்சரிக்கையுடன் இட்டிருந்த முட்டைகளின் மேல் அமர்ந்திருந்தது. 'கடவுளே. எந்தப் பிரச்னைகளுமில்லாமல் இந்தப்புறா முட்டைகள் பொரிக்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்டாள். மனம் வேண்டிக்கொண்டாள்.

ஒரு விதத்தில் அவளுக்கு அப்புறாக்கள் மேல் ஒரு விதப் பொறாமைகூட ஏற்பட்டது. எங்களைப்போல் எந்தவிதத் தேவையற்ற கவலைகளும் அவற்றுக்கில்லையே. அவளுக்கு யுத்தகாலத்தில் உயிரைக் காப்ப தற்காக ஓடிக்கொண்டிருந்தபோது விண்ணில் சிறகடித்துக்கொண்டிருந்த பறவைகளைக் கண்டபோதெல்லாம் ஏற்பட்ட உணர்வுகள் மீண்டும் இப்போதும் ஏற்பட்டன. அப்போது அவள் எண்ணிக்கொண் டாள் 'இந்தப் பறவைகள் எவ்வளவு சுதந்திரமாகப் பறந்துகொண்டிருக்கின்றன. அவற்றுக்குத் தெரியுமா இப்படி நாம் உயிருக்காக ஓடிக்கொண்டிருப்பது... '

அதே வகை எண்ணங்கள் மீண்டும் அவளது உள்ளத்தில் புறாக்களின் அசைவுகள் ஏற்படுத்தின. 'பார் இங்கே நான் முடிவு எடுக்க முடியாமல் கிடந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறன். ஆனால் அவையோ அவைபோன்ற கவலைகள் எவையுமற்று உணவு, உறவு, முட்டை, குஞ்சு என்று குறுகியதொரு வட்டத்தில் வளைய வரும் வாழ்க்கையில் சந்தோசமாக இருக்கின்றன. ஆணும் , பெண் ணும் ஒன்றுக்கொன்று எவ்வளவு உதவியாக இருக்கின்றன. எங்களை மாதிரி அவைக்கு பிரிவுகள், மோதல்கள் உண்டா? கொடுத்து வைத்த பிறவிகள்'

அவளது எண்ணங்கள் மீண்டும் மீண்டும் அருணனைப் பற்றியே சுழன்று வந்தன. ஒருவேளை அவனை எங்காவது இரகசியத் தடுப்புமுகாமொன்றில் இன்னும் வைத்திருப்பார்களோ? அப்படியுமொரு கதை நாட்டில் உலவியது அவளது நினைவுக்கு வந்தது. அன்று புலனாய்வு அதிகாரிகளுடன் சென்றவர் சென்றவர்தான்.அதன் பின் அவர் திரும்பவேயில்லை. கடல் கடந்தும் எங்குமே செல்லவில்லை. நிச்சயமாக நாட்டில்தான் எங்கோ இருக்க வேண்டும் என்றொரு எண்ணமும் அடிக்கடி எழுந்து மறைவதைப்போல் அந்த இரவில் படுக்கையில் எந்தவித முடிவுக்கும் வரமுடியாமல் அவள் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருக்கையிலும் எழுந்து மறைந்தது.

ஜன்னலினூடு தெரிந்த நகரத்தின் இரவு வானில் சுடர்கள் சில தொலைவிலிருந்து கெக்கலி கொட்டிச் சிரித்துக்கொண்டிருந்தன. அவை அமைதியற்றதொரு நிலையில் கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தும் நித்திரை வராது தவித்துக்கொண்டிருக்கும் அவளைப் பார்த்துக் கேலி செய்கின்றவனா?

அவளொருத்தி தவியாய்த்தவித்துக்கொண்டிருக்கும் அந்த இரவில் மாநகர் ஆழ்ந்த துயிலில் மூளத்தொடங்கி விட்டிருந்தது. அவளுக்கு அவளது நிலையறியாமல் , ஆறுதல் எதனையும் தராமல் துஞ்சும் ஊர் மேல் ஒருவித ஆத்திரம்கூடத் தோன்றியது. அன்று காற்றும் அதிக வேகத்துடன் வீசிக்கொண்டிருந்தது. காலநிலையிலும் அக்காற்றின் வேகத்தைப்பற்றிக் குறிப்பிட்டு அவதானமாக இருக்கும்படி வேண்டிக்கொண்டது நினைவுக்கு வந்தது.

ஏ! மாநகரே! உனக்கு இரக்கம் என்பதேயில்லையா?
என் நிலை உனக்கின்னும் புரியவில்லையா? அல்லது
எதனையும் நீ அறியவில்லையா?
துஞ்சும் மாநகரே ! என் துன்பமின்னுமுனக்குத்
தெரியவில்லையே!

சூன்யத்தைத் துளைத்து வருமொளிக்கதிர்களே!
தூக்கமற்று நானிங்கு உலைவது கண்டுமா
கெக்கலி கொட்டிச் சிரிக்கிறீர்கள்?
இருந்தாலும் உங்கள் நெடும் பயணம்
என்னைப் பிரமிக்க வைக்கின்றது கதிர்களே!

'வெற்றிடங்களைத்துளைத்து வரும் இக்கதிர்கள் எத்தனை ஒளியாண்டுகளைக் கடந்து தனிமையாகப் பயணித்திருக்கின்றன. ஏன் நானும் அவ்விதம் இக்கதிர்களைப்போல் தனிமையில் என் அருணனின் நினைவுகளுடனேயே பயணிக்கக்கூடாது?' என்றொரு கணம் எண்ணினாள். எங்கோ ஒரு இரகசியத் தடுப்பு முகாமினுள் வாடி வதங்கிக்கிடக்கும் தோற்றத்திலிருக்கும் அருண னின் உருவம் நெஞ்சில் தோன்றியது. என்ன என்ன துன்பங்களுக்கு ஆளாகினானோ? ஆளாகின்றானோ? அவனைப் புலனாய்வுப்பிரிவினர் விசாரணைககாக அழைத்துச் சென்று பதின்மூன்று வருடங்களைத் தாண்டி விட்டன.

கூடவே கண்ணனின் அமைதியான, ஆறுதலளிக்கும் முகமும் தோன்றியது. 'அவனும் பாவம். தன்னைப் போல் யுத்தச்சூழலுக்குள் தன் காதல் மனைவியை இழந் தவன்தான். ஒரு விதத்தில் இருவருமே ஒரே விதமான படகில் பயணிப்பவர்கள். அவனும் தன் மறைந்த மனைவி மேல் உயிரை வைத்திருப்பவன் தான் அருணனின் மேல் வைத்துள்ள அன்பைப்போல்' என்றெண்ணினாள். உண்மையில் அவளது வேலையில் அவளுக்கு ஆறிதலாக இருப்பவன் அவன். ஏன் அவன் கூறுவதைப்போல் அவனுடன் இணைந்து வாழக் கூடாது?

இதுவரை உழன்று கொண்டிருந்த மனத்தில் ஒருவித அமைதியும் , தெளிவும் பரவிட அவள் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிப்போனாள்.

●


# சூரியனின் மின்காந்தப் புயலும் இலங்கையின் வெப்பநிலை அதிகரிப்பும்

**கலாநிதி எஸ். அன்ரனி நோர்பேட்**
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

சூரியன் என்பது வாயுப் பொருட்களைக் கொண்டிருக்கும் ஒரு நெருப்புக் கோளம். இதன் விட்டம் 14 இலட்சம் கிலோ மீற்றர்களாகும். பூமியின் விட்டத்தினைப் போன்று 109 மடங்கு அதிகளவான விட்டத்தினைக் கொண்டது. சூரியனின் ஈர்ப்புச் சக்தி பூமியின் ஈர்ப்புச் சக்தியை விட 28 மடங்கு அதிகம். சூரியனின் மேற்பரப்பு பூமியைப் போன்று திண்மமாகக் காணப்படவில்லை. முதலுரு (Plasma) எனப்படும் மின்னேற்றம் கொண்ட வாயுவைக் கொண்டதாக அதிவேக வெப்பத்தினால் சூரியன் உருவாக்கப்பட்டது. சூரியனின் வெவ்வேறு பகுதிகளில் வேறுபாடான வேகத்துடன் இந்த முதலுரு சுழல்வதைக் காணலாம். சூரியனின் அமைவு அண்டத்தின் மையத்திலிருந்து சுமார் 32000 ஒளியாண்டின் தூரத்தில் அமைந்துள்ளது. சூரியனின் மேற்பரப்பில் ஓரிடம் ஏனைய பகுதிகளிலும் பார்க்க குறைந்த வெப்பத்தினைக் கொண்டிருக்கும் பொழுது வெகுதூரத்திலிருந்து அவ்விடத்தை அவதானிக்கும் பொழுது நமக்கு அந்த இடம் ஒரு கரும்புள்ளியாகத் தோன்றும். இதனையே சூரியப் புள்ளிகள் (Sunspots) எனக் குறிப்பிடுவர். இவை பொதுவாக 11 வருட இடைவெளிகளில் தோன்றும். சில வேளைகளில் இவை பூமியை விடப் பெரியளவான புள்ளிகளாகவும் காணப்படும்.

சூரியனைத் தொடர்ச்சியாக அவதானித்து அதிலேற்படும் மாற்றங்களைப் படமாக (image) எடுத்து வரும் நாசாவின் சூரிய இயக்கவிசையியல் அவதான நிலையத்தின் பகுப்பாய்வின் படி சூரியனின் தற்போதைய நிகழ்வுகள் 'சூரிய வட்டம் 25' (Solar cycle 25) எனக் குறிப்பிடப்படுகின்றது. கடந்த சில மாதங்களாக சூரியனின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளதுடன் சூரிய வட்டம் 25 இற்கான நிலைமாற்றத்தையும் எடுத்துக் காட்டியுள்ளது. 2025 யூலையில் சூரியனின் அதி உச்ச செயற்பாடு ஏறக்குறைய 115 சூரியப் புள்ளிகளுடன் இடம் பெறும் என எதிர்வு கூறப்படுகின்றது. மிக மோசமான வெடிப்பு அதிகளவில் ஏற்படுமென நோவா விண்வெளி வானிலை எதிர்வுகூறல் மையத்தின் சூரிய பௌதிகவியல் விஞ்ஞானி 'மிசெக்கர்' என்பவர் குறிப்பிட்டுள்ளார்.


சூரியன் ஒரு வாயுவான வெப்பக் கோளமாக இருந்தாலும் அதில் நான்கு படைகள் உள்ளன. அதிலொன்று ஒளிமயமான மைய வட்டுப் பகுதியான ஒளிக் கோளம். இதன் வெப்பநிலை அதன் கீழ் பகுதியில் 62000C ஆகவும் மேற்பகுதியில் 37000C ஆகவும் இருக்கின்றது.



ஒளிக்கோளத்தின் (Photosphere) பெரும் பகுதி கல வடிவான மணியுருக் கூறுகளினால் மூடப்பட்டிருக்கும். ஏறக்குறைய 400 கிலோ மீற்றருக்கும் 2100 கிலோ மீற்றருக்கும் இடையில் காணப்படும் படை நிற மண்டலம் (Chromosphere ) எனப்படும். கீழ் பகுதியில் வெப்பநிலை 37000 C ஆகவும் மேற்பகுதியில் 77000C ஆகவும் காணப்படும். நிறமண்டலத்திற்கும் ஒளி வட்டத்திற்கும் (Corona) இடையிலான நிலைமாறு வலயம் மிக ஒடுக்கமான பகுதியாகக் காணப்படுகின்றது. இவ்வலயத்தில் வாயுக்களின் வெப்ப நிலை சடுதியாக 77000C இல் இருந்து 500,0000C ஆக உயர்கின்றது.

பூகோள வானிலையைப் பல்வேறு அறிஞர்கள் ஆய்வு செய்து அதன் போக்குகளைப் பகுப்பாய்வு செய்து வருவது போன்று, கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக "விண்வெளி வானிலை" (Space Weather) பற்றி விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். சூரிய வட்டங்கள் சிலவற்றில் அதிகளவு சூரியப் புள்ளிகளும் செயற்பாடுகளும் காணப்படும். வேறு சில வட்டங்கள் குறைந்தளவான சூரியப் புள்ளிகளையும் செயற்பாடுகளையும் கொண்டிருக்கும். இவ்வட்டங்களின் காலரீதியான வலிமையை முன்மதிப்பீடு செய்வதற்கான ஆற்றலை மேம்படுத்துவதற்காகவே விஞ்ஞானிகள் மிகக் கடுமையாக முயற்சித்து வருகின்றனர். இவற்றின் மூலம் சூரிய நிலைமைகளை எதிர்வு கூறமுடியும். இதுவே விண்வெளி வானிலை எனப்படும். இதன் மூலம் எமது புவியிலுள்ள வானொலி அலைகளையும் நாசா செய்திகளையும், விண்வெளியில் நடக்கும் வீரர்களையும் பாதுகாக்க முடியும்.

விண்வெளி வானிலை என்பது மூன்று அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. அவை: (i) சூரியக் காற்று (ii) சூரிய தீச்சுவாலை (iii) ஒளிவட்ட திணிவின் வெளியேற்றம் என்பன. சூரியக் காற்று (Solar wind) என்பது வலிமைமிக்க மின்னேற்றப்பட்ட துணிக்கைகளைக் கொண்ட ஓட்டங்களாக இருக்கும். சூரியத் தொகுதியினூடாக செக்கனுக்கு 900 கிலோ மீற்றர் அளவில் உயர்ந்தளவான வேகத்தில்



செல்லும். இக்காற்று சூரியனின் வெளிமண்டலமான ஒளிவட்டத்தில் (Corona) உருவாகி நாற்புறமும் வீசும் தன்மை கொண்ட வழக்கமான ஒரு நிகழ்வாகும். சூரிய தீச்சுவாலை அல்லது பிழம்பு (Solar flare) என்பது சூரியனில் வெடிப்புக்கள் ஏற்படும் போது மின்காந்த அலைகள் (Electromagnetic waves) போன்று வெளிக்கிளம்பும். எந்த இடத்தில் வெடிப்பு ஏற்படுகின்றதோ அந்த இடத்திலிருந்து வெளிச் செல்லும். ஆனால் நாற்புறமும் செல்லாது. அந்தத் திசை பூமியை நோக்கி இருந்தால் மட்டுமே பூமியை நோக்கி வரும். இல்லையெனில் பூமிக்குப் பாதிப்பு வராது.

**ஒளிவட்ட திணிவின் வெளியேற்றம்**

(Coronal Mass ejection) என்பது வெடிப்பு ஏற்படும் பொழுது அயன் துணிக்கைகள் வெளியே வரும். இவ் வெளியேற்றங்கள் சூரியனின் தீச் சுவாலையுடனும், ஏனைய சூரிய நடவடிக்கைகளுடனும் இணைந்து காணப்படும். காந்தப் புலத்தின் குறிப்பிடத்தக்க வெளியேற்றமாக இது விளங்குவதுடன் சூரியனின் ஒளிவட்டத்திலுள்ள முதலுருத் திணிவுடன் இணைந்திருக்கும். இத்திணிவின் வெளியேற்றம் பூமியை வந்தடையும் போது புவிக் காந்தப் புயலை (Geomagnetic storm) உருவாக்கும். இதற்கு உதாரணமாக, 2012 யூலையில் ஏற்பட்ட சூரியப் புயலைக் குறிப்பிடலாம். புவியைச் சுற்றியுள்ள எல்லாச் செய்மதிகளையும், சக்தியின் நெய்யரிக் கட்டமைப்பையும், சகல தொடர்பாடல் வடிவங்களையும் குறிப்பாக இணைய வசதிகளையும் அழித்துவிடக் கூடியது.

சூரியனில் காணப்படும் மூன்று இயக்கங்களில் சூரியக் காற்று என்பது அயன் துணிக்கைகளை நான்கு திசைகளுக்கும் கொண்டு செல்லும். சூரியனில் ஏற்படும் தீச்சுவாலை என்பது மின் வெட்டொளியாக ஏற்படும். சூரிய வெடிப்பு என்பது சூரியனின் மேற்பகுதியில், தண்ணீரின் மேல் ஏற்படும் குமிழ் வெடிப்புப் போன்று ஏற்பட்டு முகில் கூட்டமாக வெளியே பரவும். சூரியனைப் பொறுத்தவரை இச் செயற்பாடுகள் யாவும் இயல்பானதாகவே காணப்படும். அவை தொடர்ந்து இடம்பெற மாட்டாது. ஆனால் கடந்த காலங்களில் இடம்பெற்ற சூரிய வெடிப்புக்களினால் பாரிய சேதங்களும் அழிவுகளும் ஏற்பட்டிருந்தன. வரலாற்று ரீதியாக பூமியைத் தாக்கிய சூரியனின் தீச்சுவாலை முதன்முதலாக 1859 இல் நிகழ்ந்தது. பூகோள தொலைத்தொடர்புகளில் பெருங் குழப்பங்களை ஏற்படுத்தியதுடன் தொலைத்தொடர்புப் பணியகங்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சில இடங்களில் தீ பரவலும் இடம்பெற்றது.

1970 ஆகஸ்ட் 4 இல் ஏற் பட்ட சூரிய வெப்பப் பிதுக்கங்களினால் அமெரிக்காவின் இலினோய்ஸ் உட்பட சில மாநிலங்களில் நீண்ட தூர தொலைத்தொடர்புகள் துண் டிக்கப்பட்டன. அத்திலாந்திக்குக் குறுக்கான குழாய் இணைப்புக்கள் சேதமடைந்தன. 1989 மார்ச் 13 இல் ஏற்பட்ட சக்தி வாய்ந்த தீச் சுவாலையினால் கனடாவின் மின்சாரம் முற்றாகத் தடைப்பட்டது. நியூஜேர்சியிலுள்ள சில மின்மாற்றிகள் உருகிவிட்டன. 2000 ஆம் ஆண்டு யூலை 14 இல் பிரான்சில் சூரிய வெடிப்பினால் செய்மதிகளின் தொடர் புகளில் தடங்கல் ஏற்பட்டதுடன் ரேடியோ அலைகள் முற்றாக ஸ்தம்பித்தன.

2003 ஒக்டோபர் 23 இல் சூரியனின் வெப்ப வெடிப்பு மூலம் ஏற்பட்ட தீச்சுவாலையின் பரவலினால் செய்மதித் தொடர்புகள், வழிகண்டறிதல் சமிக்ஞைகள் ஏறக்குறைய பத்து நிமிடங்களுக்கு இடைநிறுத்தப்பட்டது. GOES – 13 செய்மதியின் கருவிகளும் சேதமடைந்தன. 2022 பெப்ரவரியில் ஏற்பட்ட சூரியனின் வெப்பத்தினால் தூண்டப்பட்ட புவியின் காந்தப் புயலினால் புவியின் தாழ் சுற்றுவட்டப் பாதையில் வலம் வந்து கொண்டிருந்த 40 ஸ்ரார்லிங் செய்மதிகள் சேதமடைந்தன.

நாசாவின் சூரிய இயக்கவிசையியல் விண்வெளி ஆய்வுகூடத்தினால் தொடர்ச்சியாக சூரியனில் இடம்பெறும் நிகழ்வுகள் அவதானிக்கப்பட்டு படமாக எடுக்கப்படுகின்றது. கடந்த சில மாதங்களாக சூரியனின் செயற்பாடுகளில் தொடர்ச்சியான அதிகரிப்பு ஏற்பட்டு வரு கின்றது. 2023 மார்ச் 28 இல் சூரியனில் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக எக்ஸ் வகுப்பைச் (X – Class) சேர்ந்த சூரிய தீச்சுவாலை நெருப்புப் பிழம்பாக வெளியே வீசப்பட்டு பரவத் தொடங்கியது. இதனால் அவுஸ்திரேலியா, தென் கிழக்கு ஆபிரிக்காவில் வானொலி அலைகளுக்குத் தடங்கல் ஏற்பட்டது.


2025 யூலையில் ஏறக்குறைய 115 சூரியப் புள்ளிகளைக் கொண்டிருக்கும் சூரிய சக்தியின் உச்சம் எதிர்பார்க்கப்படுகின்றது. மோசமாக இருக்கப் போகும் இந்நிகழ்வினை அவதானிப்பதற்கு 2024 இல் விண்வெளி வானிலை எதிர்வு கூறல் செயற்பாடுகளுக்காக புதியதொரு விண்வெளிக் கலமொன்றினை 'நோவா' அனுப்புவதற்குத் திட்டமிட்டு வருகின்றது. சூரியக் காற்று மாதிரிகள், ஒளிவட்டத் திணிவின் வெளியேற்றம் ஆகிய



வற்றின் செயற்பாடுகளைக் கண்காணித்தல் தொடர்பாக துல்லியமான விபரங்களைப் பெறுவதற்கான கருவிகள் இதில் இணைக்கப்படும். இந்த GOES–U எனப்படும் செய்மதியில் ஒளிவட்ட வரைபுக் கருவி (Coronagraph) உட்பட மூன்று சூரியக் கண்காணிப்புக் கருவிகள் இணைக்கப்படும். இக் கருவிகள் மூலம் ஒளிவட்டத் திணிவு வெளியேற்றங்களின் (CMEs) தடயங்களைக் கண்டறிவதுடன் சூரியன் பற்றிய அவதானிப்புக்களின் தரத்தினையும் மேம்படுத்த முடியும். இதனால் விண்வெளி வானிலை எதிர்வு கூறலை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

**தீப்பிழம்பில் வெப்பப் பொருட்களின் வெளியேற்றம்**

இலங்கை நிலைமை: மார்ச் - ஏப்ரல் காலத்தில் இலங்கையின் மேலாக வடக்கு நோக்கி சூரியன் நகரும் போது உருவாகும் அயன இடை ஒருங்கல் வலயத்தில் (ITCZ) மேற்காவுகைச் செயற்பாடுகள் வழக்கமாக அதிகளவில் இடம்



பெறும். இக்காலத்தில் முகில்களின் உருவாக்கம் வெப்பவியல்ரீதியாகக் கட்டுப்படுத்தப்படும். பிற்பகல் நேரங்களில் முகில்களின் விருத்தி வலிமையடைவதன் காரணமாக ஏப்ரல் மாதத்தில் சிறியளவான தாழமுக்க மையங்கள் அயன இடை ஒருங்கல் வலயத்தில் ஏற்பட்டு மிகக் கடுமையான மழைவீழ்ச்சியை இலங்கையின் பல பகுதிகளில் தொடர்ச்சியற்ற முறையில் ஆங்காங்கே கொடுத்துவருகின்றது. இம்முறை வழக்கத்துக்கு மாறாக மார்ச் மாத இறுதியிலும் ஏப்ரல் மாதத்திலும் இந்தியா உட்பட இலங்கையின் வெப்பநிலை என்றுமில்லாதவாறு உயர்ந்து காணப்படுகின்றது. அத்துடன் மேற்காவுகை மழைவீழ்ச்சியும் செறிவாக இடம்பெறுகின்றது. இதற்குப் பிரதான காரணம் 2023 மார்ச் 28 இல் ஏற்பட்ட சக்தி வாய்ந்த தீச்சுவாலையின் வெளியேற்றமாகும். இதற்கு முன்னர் கடந்த எட்டு மாதங்களாக சூரியனின் செயற்பாடு தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளதுடன் சூரிய வட்டம் 25 க்கு நிலைமாற்றம் பெற்றுள்ளது.

சூரியனின் வெப்ப உச்சம் எதிர் காலத்தில் 115 சூரியப் புள்ளிகளுடன் 2025 யூலையில் இடம்பெறும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இக்காலத்தில் சூரியனிலிருந்து மிக மோசமான வெடிப்புக்கள் ஏற்படலாம். சூரிய வெடிப்பினால் ஏற்பட்ட வெப்ப தீப்பிழம்பின் பரவல் காரணமாக வளிமண்டலத்தின் வெப்பநிலையில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாகவே இம்முறை மேற்காவுகை மழைவீழ்ச்சி மிகச் செறிவாகவும் என்றுமில்லாதவாறு மிகக் கடுமையானதாகவும் இருப்பதற்குக் காரணமாகும். தற்போது நிலவும் அதிகரித்த வெப்பமும் அசௌகரியமான சூழலும் தொடர்ந்து மே மாதம் முற்பகுதி வரை இடம்பெறும். சூரியனிலிருந்து வரும் வெப்பத்தில் சிறிதளவு அதிகரிப்பு ஏற்பட்டாலும் கூட அது புவிக்கு ஆபத்தாக அமைந்துவிடும்.

# இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில் வவுனியா, நுவரேலியா மாணவர்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், மே. 07

அவுஸ்திரேலியாவில் கடந்த 35 வருடங்களுக்கும் மேலாக இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவிகளைப் பெறும் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் மலையகத்தில் நுவரேலியா மாவட்டத்தில் வதியும் வறுமைக்கோட்டின் கீழ் வதியும் தமிழ் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவுகள் அண்மையில் வவுனியாவிலும் நுவரேலியாவிலும் வழங்கப்பட்டன.



வவுனியாவில் சூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் தொடர்பாளர் அமைப்பான நலிவுற்ற அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் அலுவலகத்தில் அண்மையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் தர்மலிங்கம் கணேஷ் தலைமையில் நடந்த இந்நிகழ்வில் நிறுவன இணைப்பாளர் திருமதி.கிருஷாந்தி, நிதி இணைப்பாளர் திருமதி சுகன்யா, முகாமைக்குழு உறுப்பினர்கள் திருமதி தனிஷா, திருஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் 2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டுக்கான நிதிக்கொடுப்பனவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட மாணவர்களும், அவர்களின் தாய்மாரும் பாதுகாவலர்களும் கலந்துகொண்டனர். மாணவர்களுக்கான தகவல் அமர்வும் இடம்பெற்றது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவியைப் பெறும் மாணவர்களின் அரையாண்டு கல்வி உதவிப்பணமும் அவர்களின் வங்கிக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டன.

மலையகத்தில் கல்வி நிதியத்தின் மலையக தொடர்பாளர் அமைப்பான மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் கண்காணிப்பில் உதவி வழங்கப்படும் மாணவர்களுக்கும் அண்மையில் இந்த ஆண்டுக்கான முதல் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட அமைப்பின் தலைவர் அரியமுத்துவின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விலும் உதவி பெறும் மாணவர்களின் தாய்மாரும், ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கும் கடந்த மாதம் நிதியுதவி யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் வழங்கப்பட்டது.

இம்மாவட்டங்களின் மாணவர் கண்காணிப்பு நிறுவனமாக யாழ்ப்பாணம் அரியாலையில் இயங்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையம் இயங்குகிறது.

இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவிலும், வவுனியாவிலும் கிழக்கு மாகாணத்திலும் மலையகத்திலும் மாணவர் ஒன்றுகூடலுக்கான நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

(அ)

# சன நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களுக்குச் செல்லவேண்டாம்!

கொழும்பு, மே. 07

நாட்டில் கோவிட்-19 தொற்று அதிகரித்து வருவதாக ஊடகங்களில் தெரிவிக்கப்படும் அளவுக்கு அதில் உண்மையில்லை என்பதுடன், தொற்றாளர் இனம் காணப்பட்டாலும், அது எச்சரிக்கையான நிலை என்று தெரிவிக்க முடியாது. என்றாலும், கோவிட் தொற்று இன்னும் முழுமையாக உலகிலிருந்து நீங்கவில்லை என்பதால் அதன் பாதிப்பு தொடர்ந்து இருந்து வருவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் சமித கினிகே தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கோவிட் தொற்று, 2019 வருட இறுதியில் உலகளாவிய ரீதியில் பரவிய தொற்றுநோயாகக் காணப்பட்டது. எனினும், இது இன்னும் முற்றாக உலகிலிருந்து இல்லாமல் போகவில்லை.

இந்நிலையில், நாடு என்ற வகையில் கோவிட் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுத்து, இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தோம்.

2022 பெப்ரவரியில் நாளாந்தம் 20 பேர் வரையே தொற்றுக்குள்ளாகி வந்தனர்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை முறையாக மேற்கொண்டதால், அதனை எமக்கு கட்டுப்படுத்த முடிந்தது.

அத்துடன், நாட்டின் மொத்த சனத்தொகையில் 70 சதவீதமானவர்கள் கோவிட்டுக்கான இரண்டு தடுப்பூசிகளையும் போட்டதால், மரணங்களை எமக்கு குறைக்க முடிந்தது. தற்போது வாரத்துக்கு 2 அல்லது 3 கோவிட் மரணங்கள் இடம்பெறும் நிலையே இருக்கிறது.

உலகளாவிய ரீதியில் பார்க்கும் போது, கொவிட் எச்சரிக்கை இன்னும் முற்றாக நீங்கவில்லை. என்றாலும், கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, கோவிட் தொற்றாளர்களை இனம் காண்பது முற்றாக நீங்க வில்லை.

எமது நாட்டிலும் ஒரு சில மாதங்களில் காலநிலை மாற்றத்துக்கேற்ப தொற்றாளர்கள் இனம் காணும் எண்ணிக்கை கூடும் குறையும் வகையில் இருக்கிறது.

கடந்த 2 வாரங்களில் 6,7 பேர்வரை தொற்றாளர்கள் இனம் காணப்பட்டனர். என்றாலும், இது ஆபத்தான நிலை எனத் தெரிவிக்க முடியாது.

மக்கள் தொடர்ந்து சுகாதார வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும். குறிப்பாக, இக்காலப்பகுதியில் இருமல், தடிமன் அதிகரித்துக் காணப்படுகிறது. அதற்காக, கோவிட் என தீர்மானிக்க முடியாது. - சமூக பொறுப்பு என்ற வகையில் இவ்வாறான நோயுடையவர்கள் முகக்கவசம் அணிவதையும் சன நடமாட்டம் அதிகம் இருக்கும் இடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் - என்றார்.






# புதிய பயங்கரவாத சட்டத்தால் மீண்டும் தமிழர்களை உசுப்பேற்றும் ரணில் அரசு

உதேனி சமன்குமார்

பயங்கரவாத தடைச் சட்டத்தை பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் முன்வைப்பதை அரசாங்கம் இரண்டாவது தடவையாகவும் ஒத்திவைத்துள்ளது. இது மிகவும் சாதகமான சூழ்நிலை. சட்ட மூலத்திற்கு எதிராக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் எழுந்துள்ள ஆட்சேபனைகளின் பிரகாரம் சட்ட மூலத்தை முன்வைப்பதற்கான நேரம் இதுவல்ல என நீதித்துறை அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நினைத்துக்கொண்டிருக்கலாம். அப்படி இருந்தும் அரசாங்கம் இதுவரை 133 பெரும்பான்மைப் பலத்துடன் பாராளுமன்றத்தில் ஆடிய ஆட்டங்களை நினைக்கும்போது இந்த அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பின்வாங்கும் என்று நினைத்துப் பார்க்கமுடியாது. பயங்கரவாதத்திற்கு எதிராக வேலி அமைப்பதற்கு உலகில் எந்த ஒரு நபரும் அல்லது அரசும் எதிராக இல்லை. இந்தச் சட்டமூலத்தை முன்வைப்பதன் நோக்கம் பயங்கரவாதத்தை தடுப்பதே என நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். பயங்கரவாத தடைச் சட்டத்தை யாராவது எதிர்த்தால் பயங்கரவாத வேலைகளைச் செய்யத் தயார் என நீதியமைச்சர் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டார்.




பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் அரசாங்கத் தலைவர்கள், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இவ்வாறான முன்னுதாரணச் செயற்பாடு அவசியம் என தெரிவிக்கின்றனர். 1972 இல் குடியரசு அரசமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதில் இருந்து, இலங்கை அரச பாது காப்பு சட்டங்களின் அமைப்பின் கீழ் ஆளப்படுகிறது. 1971 முதல் 2011 வரை அவசரகாலச் சட்டம் நடை முறையில் இருந்தது மற்றும் இரண்டு அல்லது மூன்று வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் மட்டுமே அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டது. 1979 ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கான தற்காலிக சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தை அறிமுகப்படுத்தினார். 1982 இல் ஐக்கிய தேசியக் கட்சியினால் நிரந்தர சட்டமாக்கப்பட்டது.

தென்கிழக்கு ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளில் மார்க்சிஸ்ட் அமைப்புக்களை ஒடுக்க 1960 கள் மற்றும் 1970 களில் கடுமையான அரச பாதுகாப்புச் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அந்த நேரத்தில், உலகின் கிட்டத்தட்ட நூறு நாடுகளில் இராணுவ அரசாங்கம் இருந்தது. கியூபப் புரட்சியால் ஈர்க்கப்பட்ட மார்க்சிஸ்ட் அமைப்புக்கள் இராணுவ அரசுகளின் அடக்குமுறைக் கொள்கைகளுக்கு எதிராகப் போராடின. அந்த நேரத்தில், முதலாளித்துவத்துக்கும் சோசலிசத்துக்கும் இடையே பனிப் போர் இடம்பெற்றபோது, மார்க்சிஸ்டுகளுக்கு எதிராக போராடுவது போரின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது.

மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பதிலாக நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் யோசனை 20 ஆம் நூற்றாண்டின் மத்தியில் நிறுவப்பட்டது. உண்மையில் அரச பாதுகாப்பு என்பது மக்களின் பாதுகாப்பைக் குறிக்கவேண்டும். ஆனால், மக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கும் ஜனநாயக வாய்ப்புக்களை அரசாங்கம் இரத்து செய்துவிட்டு, சர்வாதிகார ஆட்சியை நடத்தினால், நாட்டின் பாதுகாப்பு பற்றி பேசினால், அதில் கடுமையான வேறுபாடு உள்ளது.

20 ஆம் நூற்றாண்டின் மத்தியில், ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளில் கடுமையான சர்வாதிகார ஆட்சிகள் இருந்த வேளையில், தேசியப் பாதுகாப்பின் அடிப்படையில் நாடுகள் ஆளப்படவேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. அந்த மனோபாவத்தில் இருந்து இலங்கை இன்னும் விடுபட வில்லை. 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாத தடைச் சட்டம் 2023 வரை செயலில் உள்ளது. வடக்கில் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் அவசரகாலச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பயங்கரவாதத்திற்கு எதிரான போரில், விடுதலைப் புலிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக வடக்கு சமூகத்தின் மீது கொண்டு வரப்பட்ட கடுமை யான அடக்குமுறைகள் மற்றும் அழுத்தங்களுடனேயே அந்த அமைப்பு படிப்படியாக வளர்ந்தது என்பது மறைக்க முடியாத உண்மையாகும்.



பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது, தென்னிலங்கை மக்கள் மத்தியில் அதற்கு எந்தவித எதிர்ப்பும் இருக்கவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து சர்வதேச அமைப்புக்களும் அதிக கவனம் செலுத்தவில்லை. வடக்கில் ஏராளமான சடலங்கள் குவிந்ததால், தவிர்க்க முடியாத விளைவு ஆயுதம் தாங்கிய அமைப்புக்களுக்கு இராணுவ உதவி அதிகரிக்

## சிங்கள வார ஏடு சாடல்

கப்பட்டது. அரசின் அடக்குமுறைகள் உக்கிரமாக இருந்த காலத்தில் ஈழ அமைப்புக்களுக்கு தென்னிந்தியாவில் பயிற்சி முகாம்கள் ஏற்படுத்தப்பட்டது பலருக்கு நினைவில் இல்லை. மேலும், யசீர் அரபாத்தின் பலஸ்தீன விடுதலை இயக்கம், இஸ்ரேலின் மொசாட், சிரியா, லெபனான் போன்ற நாடுகள் கூட வடக்கில் உள்ள அமைப்புக்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தது பின்னர் தெரியவந்தது.

நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கின் தீர்ப்பின் போது தங்கத்துரை, குட்டிமணி உள்ளிட்ட பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் இருந்தபோது ரெலோ அமைப்பின் தலைவர் மூன்றாவது திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்தவை இவை.

"இன்று கிளிநொச்சி சித்திரவதை நிலையங்களில் தமிழ் இளைஞர்கள் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர். நாளை அம்பாந்தோட்டை சித்திரவதை நிலையங்களில் சிங்கள இளைஞர்கள் சித்திரவதை செய்யப்படுவார்கள். இன்று தமிழ் இளைஞர்களின் மனித உரிமைகள் பற்றி தென்பகுதி மக்கள் பேசாதது போன்று நாளை தென்பகுதி மக்களின் மனித உரிமைகள் பற்றி பேச எவரும் முன்வரமாட்டார்கள்."

மக்களின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பறிக்க முற்பட்டதன் இறுதி விளைவே நாடு 30 வருட யுத்தத்திற்குள் இழுக்கப்பட்டு வடக்கில் ஒரு இலட்சம் இளைஞர்களையும் தெற்கில் அறுபதாயிரம் இளைஞர்களையும் இலங்கை தேசம் இழந்தது. பௌதீக வளங்களின் கணக்கிட முடியாத அழிவு. பயங்கரவாதத் தடைச் சட்டம் அழிவுக்குப் பங்களித்தது, அமைதிக்கு அல்ல. அதுதான் கசப்பான உண்மை.

கடந்த நல்லாட்சி அரசாங்கமும் 2018 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற வரைபைத் தயாரித்தபோதிலும் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. புதிதாக உருவாக்கப்பட்ட சட்ட மூலம் மிகவும் அடக்குமுறையானது. இது குறித்து கருத்து தெரிவிக்கும் மனித உரிமை அமைப்புக்கள், இந்த நேரத்தில் அரசாங்கம் செய்யக்கூடிய சிறந்த காரியம் பயங்கரவாத தடைச் சட்டத்தை திரும்பப் பெறுவதே. பயங்கரவாதத்தை தண்டிக்கும் பிரிவுகளை குற்றவியல் சட்டத்தில் சேர்ப்பதன் மூலம் ஜனநாயகத்திற்கு குந்தகம் ஏற்படாமல் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும் என்கின்றனர்.

அவசர காலச் சட்டம் என்பது பயங்கரவாதத் தடைச் சட்டமா அல்லது பயங்கரவாதத் தடைவ் சட்டமா என்ற குழப்பம் எழுகிறது. 2018 பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட காலத்துடன் ஒப்பிடும்போது நாட்டின் அரசியல் சூழல் எல்லா வகையிலும் மாறிவிட்டது. ஒருபுறம், 2022 இல், நாம் ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டோம். ஆனால், மிக ஆழமாகப் பார்க்கும்போது அது பொருளாதார நெருக்கடி அல்ல. இலங்கையின் ஆட்சி அமைப்பில் நெருக்கடி. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் தமது எதிர்காலம் மறைந்து விடும் என்பது கண்களுக்குத் தெரிந்த போதே இளைஞர்கள் போராட்ட இடத்திற்குள் பிரவேசித்தனர். இன்று இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உண்மையான தீர்வுகளை வழங்காமல் பயங்கரவாத தடைச் சட்டங்களை இயற்றுவதன் மூலம் தீர்வு காணக் கூடிய பிரச்சினையல்ல. ஆனால், அரசாங்கம் அவ்வாறான தொலை நோக்குப் பார்வையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை.

நாடு கடந்த தமிழீழ அரசின் தலைவர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன் இலங்கை இனப்பிரச்னை தொடர்பில் அமெரிக்கா, கனடா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் கருத்துக்கணிப்பு நடத்த தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது கிடைத்த தகவலின்படி மே 18 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கருத்துக் கணிப்பு வெற்றியடைய வேண்டுமாயின் இலங்கை தமிழ் சமூகத்திற்கு நீதி வழங்கவில்லை என்பதை உலகுக்கு அறிவிக்கவேண்டும். அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளை நாம் பரிசீலிக்கும்போது, அவை உருத்திரகுமாரனின் விருப்பத்திற்கு ஏற்றதாக இருப்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசியல் கட்சிகளை ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்து தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

மே மாதம் முதலாம் திகதி மீண்டும் மக்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, இந்த வருடத்திற்குள் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படும் என அறிவித்தார். வரலாறு நெடுகிலும், களத்தில் எந்த வேலைத்திட்டமும் இன்றி, காலத்துக்கு காலம் நாட்டின் தலைவரால் வெளியிடப்படும் இவ்வாறான கருத்துக்களால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

அதனால்தான் இவ்வாறான அறிக்கைகளினால் தமிழ் சமூகம் சந்தேகம் அடைகின்றது. இந்தச் சூழலில்தான் உருத்திரகுமாரன் கருத்துக் கணிப்பு நடத்துகிறார். அவருக்குப் பின்னணியைத் தயார் செய்வது இலங்கை அரசுதான்.

சிறிது காலம் அமைதியாக இருந்த வடக்கு மக்கள் மீது தேவையற்ற தடைகளை சுமத்துவது சமீப காலமாக மீண்டும் அதிகரித்துள்ளது. கச்சதீவு உட்பட வடக்கில் பல இடங்களில் புத்தர் சிலைகளை நிறுவுவதற்கு அரசாங்கத்தின் பாதுகாப்புப் படையினர் உழைத்துள்ளனர். தமிழ் சமூகம் ஒரு இடத்தில் சிவலிங்கத்தை வைத்து பதிலடி கொடுத்தது. யார் இதை செய்ய முயன்றாலும் அது பெரும் அழிவில்தான் முடியும் என்பதை இவற்றைத் தூண்டி விடுபவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

சமூகத்தின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலமும், அரசமைப்புச் சட்டம் உறுதி செய்த ஜனநாயக உரிமைகளை மக்களுக்கு வழங்குவதன் மூலமும் மட்டுமே அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும். மனித சுதந்திரத்தில் கவனம் செலுத்தாமல் இவ்வாறான பயங்கரவாத தடைச்சட்டங்களை கொண்டு வருவதன் மூலம் அதல பாதாளத்தில் வீழ்வது அரசாங்கம் அல்ல நாடும் மக்களும்தான்.

---

# வீரவன்ச மறைக்கும்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூழ்நிலையில் - வேறு எவரினாலும் அல்ல அதே நெருக்கடிக்கு காரணமானவர்களாக இருந்தும் பொறுப்புக்கூற வைக்கப்படாமல் இருக்கும் அரசியல் வாதிகளினாலேயே முன்னெடுக்கப்படுவது கவனிக்கத்தக்கது.

தவறான ஆட்சிமுறை மற்றும் பொருளாதார முகாமைத்துவத்தின் விளைவான நெருக்கடியினால் விரக்தியுற்ற மக்கள் அரசியல் அதிகார வர்க்கத்தின் ஊழல் மோசடிகள், முறைகேடுகளைக் கண்டு சீற்றமடைந்தே வீதிக்கு இறங்கினார்கள். தங்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரத்தில் இருந்த வர்கள் தவறியதைக் கண்ட மக்கள் கொதித் தெழுந்தார்கள்.

மக்களை பிளவுபடுத்தி வைத்திருப்பதற்கு அரசியல்வாதிகள் வழமையாக பயன்படுத்தும் இன, மத, சாதி மற்றும் பால் வேறுபாடுகளுக்கு அப்பால் இளையோரும் முதியோரும் வறியோரும் வசதிபடைத்தோரும் ஒன்றுதிரண்டு நாட்டின் கூட்டு மனச்சாட்சியாக குரலெழுப்பி அரசியல் அதிகார வர்க்கத்தை ஆட்டங் காணச் செய்தார்கள்.

வழமையாக உல்லாசமாக பொழுதுபோக்கும் இடமாக விளங்கிய தலைநகரின் காலிமுகத்திடல் சுதந்திரத்துக்கு பின்னர் முதற்தடவையாக அரசியல் புரட்சியொன்றின் பரிமாணங்களை எடுத்த வரலாற்று முக்கியத்துவ மக்கள் போராட்டக்களமாக மாறியது.

அந்த மக்கள் கிளர்ச்சி பல அம்சங்களில் ஈடு இணையற்றதாக விளங்கியது. ஒருங்கிணைந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டதாகவோ அல்லது அரசியல் சக்திகளினால் வழிநடத்தப்பட்டதாகவோ இல்லாமல் தன்னியல்பான வெகுஜன அணிதிரள்வாக அமைந்த கிளர்ச்சி இலங்கையின் வரலாற்றில் மிகவும் தகுதியற்ற ஒரு ஜனாதிபதியையும் அவரது அரசாங்கத்தையும் பதவியில் இருந்து அகற்றியது. தெற்காசிய நாடொன்றில் மக்கள் கிளர்ச்சி ஜனாதிபதியொருவரை நாட்டை விட்டு வெளியேற வைத்த முதன் முதலான நிகழ்வாகவும் அது அமைந்தது.

தங்களுக்கு சொல்லொணா துன்பங்களைத் தந்த தவறான ஆட்சிமுறைக்கும் படுமோசமான ஊழல் மற்றும் குடும்ப அரசியல் ஆதிக்கத்துக்கும் எதிரான மக்களின் வெறுப்பினதும் சீற்றத்தினதும் வெடிப்பின் விளைவே அந்த மக்கள் கிளர்ச்சி. அது வீரவன்ச மறைப்பதற்கு விரும்புகின்ற கதை. இலங்கையை நோக்கி உலகை திரும்பிப்பார்க்க வைத்த மாபெரும் போராட்டத்தை வெறுமனே வெளிநாட்டுச் சக்திகள் பின்னணியில் இருந்து இயக்கிய ஒன்று என்று கூறும் எந்தவொரு அரசியல்வாதியும் நாட்டின் உண்மையான நிலைவரத்தை புரிந்துகொள்ளவில்லை அல்லது புரிந்துகொண்டும் தீக்கோழி மனோபாவத்தில் இருக்கிறார்கள் என்பதே அர்த்தமாகும்.

## பதவிகளை...

ரெலோ இயக்கத்தின் மறைந்த தலைவர் சிறி சபாரத்தினம் அவர்களின் 37ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் பல கட்சிகள் ஒன்றிணைந்து குத்துவிளக்குச் சின்னத்தில் கூட்டமைப்பை உருவாக்கினார்கள்.

ரெலோ, புளொட் கட்சிகள் என்ன செய்தாலும் இலங்கை தமிழரசுக் கட்சியை விட்டுவெளியே போகமாட்டார்கள் என்று தமிழரசு கட்சியினர் நினைத்தார்கள்.

ஆனால் திடீரென்று தமிழரசுக் கட்சியைவிட்டு வெளியே வந்து குத்து விளக்குச் சின்னத்தில் ஒன்றிணைந்து விட்டார்கள்.

குத்துவிளக்குச் சின்னத்தில் கூட்டமைப்பை ஆரம்பிக்கும்போது பயன்படுத்திய அரசியல் ராஜதந்திரத்தை தமிழர் உரிமைகளை பெறுவதற்கும் பயன்படுத்தவேண்டும்.

குறிப்பாக உங்கள் பதவிகளைத் தக்க வைப்பதற்காக பயன்படுத்தும் இராஜ தந்திரங்களை தமிழ் மக்களின் உரிமைகளை பெறுவதற்கும் பயன்படுத்தவேண்டும் என தமிழ் மக்கள் சார்பில் நான் கோரிக்கை விடுகின்றேன்.

மாகாண சபையை எவ்வாறு காப்பாற்றவேண்டும் என அனைவரும் சிந்திக்க வேண்டும். பௌத்த மயமாக்கல் என்பது ஒரு பிரச்னைக்குரிய விடயம் தான். அதனை நிறுத்த வேண்டும்.

அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான வழிகள் எங்களிடம் இருக்கும் போது அதைத் தவிர்த்து பௌத்த மயமாக்கல் நடக்கின்றது என கத்திக் கொண்டிருக்கின்றோம்.

இருப்பதை வைத்துக்கொண்டு எமக்கு வரும் ஆபத்துக்களை தவிர்த்துக்கொள்ள முடியும் என சிந்திப்பதை விடுத்து வேறு விதத்தில் நாங்கள் கத்திக்கொண்டிருக்கின்றோம்.

எந்த வகையிலும் அந்த விடயங்கள் தமிழ் மக்களுக்கு உதவாது. நடக்கக் கூடிய விடயங்களை நாங்கள் சிந்திக்க வேண்டும்.

ஜனாதிபதி 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவேன் என்று கூறுகின்றார். எனவே ஜனாதிபதி ரணிலின் ஆட்சியின்போது இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒற்றுமைப்படவேண்டும்

புதிய அரசியல் யாப்பு என்பது இப்போதைக்கு சாத்தியமற்ற விடயம்.

எனவே ஏற்கனவே அரசியல் அமைப்பில் இருக்கும் ஒரு விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒற்றுமைப்படவேண்டும்.

மாகாண சபை என்பதுதான் எமது தீர்வுக்குரிய ஒரு துரும்பு. பௌத்த மயமாக்கல் மற்றும் தமிழரின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு மாகாண சபை உறுதுணையாக இருக்குமாக இருந்தால் அதனைப் பாதுகாப்பதற்கு கட்சிகள் இணைந்து ஒற்றுமையாக முயற்சிக்க வேண்டும்.

எனவே மாகாண சபைத் தேர்தலில் முக்கியமான கட்சிகள் இணைந்து எவ்வாறு வாக்கைப் பெற்று மாகாண சபையை கைப்பற்றலாம் எனச் சிந்திக்க வேண்டும்.

நாங்கள் ஒற்றுமைப்படவேண்டிய தேவை என்ன ?அந்த ஒற்றுமைக்கான முயற்சியில் ஈடுபடுவதுதான் இப்போது உள்ள சவால் - என்றார். (அ-03)

## உயர்நீதிமன்றை...

நேற்று வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு வந்த வீரசேகர, அங்கு நின்றவர்களிடம் இதனை குறிப்பிட்டார்.

சரத் வீரசேகர மற்றும் சிங்கள மக்கள் குழுவினர் நேற்று வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப் பகுதிக்கு வந்திருந்தனர்.

அவர்கள் மலையுச்சிக்கும் சென்று பார்வையிட்டனர்.

நேற்று ஆலயத்தில் பொங்கல் வழிபாடு நடைபெற்றது. சரத் வீரசேகர குழுவினரும் ஆலயத்தின் பொங்கலை வாங்கி உண்டனர்.

பின்னர், வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரத்தில் உயர்நீதிமன்றத்தை நாடப் போவதாக சரத் வீரசேகர, அங்கு நின்றவர்களிடம் கூறினார்.

இதேவேளை, நேற்று அங்கு கடுமையான மழை பெய்ததால், ஆலயத்தின் கீழ்ப்பகுதியில் 20 அடி தற்காலிக தகர கொட்டகையொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதனை அகற்றுமாறு நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

அத்துடன், ஆலயத்தின் அடிப்பகுதியில் சிறிய தகர கொட்டகையமைத்து இளைஞன் ஒருவர் குளிர்பானம் உள்ளிட்ட சில பொருட்களை விற்று வந்தார். அந்த கொட்டகையையும் அகற்றுமாறு பொலிஸ் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

அத்துடன், ஆலயத்துக்கு உழவு இயந்திரத்தில் வர முடியாது என்றும் குறிப்பிட்டார்.

வவுனியா வடக்கு, ஒலுமடு ஆதிசிவன் ஆலயத்தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களை மீள பிரதிஷ்டை செய்ய வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், கடந்த 28 ஆம் திகதி ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நான்கு...

செய்யும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதி ஒருவர் பதவியேற்றதும் ஆளுநர்கள் பதவி விலகுவது சம்பிரதாயம் என்றும் அது பிரதமர் வெளியேறிய பின்னர் அமைச்சரவை கலைவதைப் போன்றதாகுமெனவும் ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

எனினும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர் மேற்படி சம்பிரதாயத்தின்படி ஆளுநர்கள் பதவி விலகாததால் அவர்கள் சுயேச்சையாக பதவி விலகும் வரை ஜனாதிபதி சில காலம் காத்திருந்ததாகவும் ஜனாதிபதி செயலக பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட ஆளுநர்கள் பதவி விலகிய பின்னர் புதிய ஆளுநர்களை நியமிக்க ஜனாதிபதி நாடு திரும்பியதும் நடவடிக்கை மேற்கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## கந்தரோடையில்...

எதிராக இன்று ஞாயிற்றுக்கிழமை கந்தரோடையில் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் தமிழ்த் தேசியப் பேரவையானது, பல அமைப்புகளுடன் இணைந்து இன்று முற்பகல் 10 மணிக்கு கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

சிங்கள பௌத்த பேரினாவாத அரசின் பூரண அனுசரணையுடன் தமிழ்த் தேசத்தின் இருப்பை அழித்து வரலாற்றைத் திரிபுபடுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் கட்டமைக்கப்பட்ட மரபுரிமைசார் இனவழிப்புச் செயற்பாட்டிற்கு எதிரான இப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய உணர்வாளர்களை கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் வாழ்வுரிமை மையம் மற்றும் கந்தரோடை சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவை இப்போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# கடல் மார்க்கமாக வெளிநாடு செல்ல முயன்ற 6 பேர் கைது!

கொழும்பு, மே. 07

சட்டவிரோதமான முறை யில் கடல் மார்க்கமாக வெளி நாட்டிற்கு செல்ல முற்பட்ட 06 பேர் மன்னாரில் வைத்து கடற் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்க ளில் 2 பெண்களும் உள்ளடங்கு கின்றனர்.

சட்டவிரோதமாக இந்தியா வுக்குச் செல்லவிருந்த 05 பேரும் மன்னார் பள்ளிமுனை பகுதியிலிருந்து நேற்று முன் தினம் பகல் கைது செய்யப் பட்டு, மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டனர்.

குறித்த 5 பேரும் வவுனியாவை சேர்ந்த ஒரே குடும்பத்தவர்கள் என்பதுடன் அவர்களில் 07 மற்றும் 14 வயதான சிறுவர் களும் 16 வயதான சிறுமியும் 38 வயதான ஆண் ஒருவரும் 37 வயதான பெண்ணொருவரும் உள்ளடங்குகின்றனர்.

ஐவரையும் இந்தியாவுக்கு படகு மூலம் அழைத்துச் செல்லவிருந்த பட கோட்டி மன்னாரைச் சேர்ந்தவர் என பொலிஸார் கூறினர்.

குறித்த படகு கடற்படையினரால் கைப் பற்றப்பட்டுள்ளதுடன் படகிலிருந்த எரிபொருள் உள்ளிட்ட ஏனைய பொருட் கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ)

## பிரித்தானிய...

பக்கிங்காம் அரண்மனையில் இருந்து வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயம் வரை முடிசூட்டு விழாவின் ஊர்வலம் இடம்பெற்றது.

மன்னர் மூன்றாம் சார்ள்ஸும், அவரது மனைவி கமீலாவும் 6 குதிரை கள் பூட்டப்பட்ட சாரட் வண்டியில் இராணுவ வீரர்கள் புடை சூழ ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டனர்.

வீதியோரம் கொடியுடன் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அவர்களுக்கு தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

மன்னர் சார்ள்ஸ் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தைச் சென்றடைந்ததும் முறைப்படி மன்னர் முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றன.

700 ஆண்டுகள் பழமையான சிம்மாசனத்தின் பின்நின்று கொண்டு கேண்டர்பரி ஆர்ச் பிஷப் மன்னர் சார்ள்ஸை அங்கீகரித்து அறிவிப்பு வெளியிட்டார்.

இந்த அறிவிப்பை தொடர்ந்து பொதுமக்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

இராணுவ இசைக் கருவிகள் இசைக்கப்பட்டன.

அதன்பின், மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் சட்டத்தையும், இங்கிலாந்து தேவாலயத்தையும் காப்பதாக உறுதி மொழி எடுத்துக்கொண்டார். (அ)

## பொதுஜன...

காட்டப்பட்டமையை அடுத்தே, இந்த எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவுடன் இணைத்து அவரின் படம் காட்டப்படுகின்றமையானது, கட்சியின் செல்வாக்கை குறைத்து விடும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் படம் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைத்து பதாகையில் விளம்பரப்படுத்தப்பட்டு வந்தது.

எனினும் கோட்டாபய, கடந்த ஆண்டு ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியதை தொடர்ந்து அவரின் படம் நீக்கப்பட்டது.

இதேவேளை, அண்மைக்காலமாக பசில் ராஜபக்ஷவை அரசியலில் மீண்டும் முன்னணிக்கு கொண்டு வரும் முயற்சிகளில் பொதுஜன பெரமுன வின் சிலர் செயற்பட்டு வருகின்றமை தொடர்பிலும் கட்சிக்குள் எதிர்ப்புக் கள் வலுப்பெற்று வருகின்றன. (அ)

## கடன்...

இந்த தகவலை ஜப்பானிய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் இருதரப்புக் கடன் வழங்குநர்களுக்கான ஒருங்கிணைந்த கடன் மறுசீரமைப்புத் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகியவை செயல் முறையின் ஆரம்பத்தை அறிவித்துள்ளன.

இந்த நிலையில் எதிர்கால கடன் நெருக்கடிகளைத் தடுக்க கடன் தரவு வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தை மேம்படுத்துவது அவசியம் என்று ஜப்பானிய அமைச்சர் சுனிச்சி சுசுக்கி தெரிவித்தார். (அ)

## அமைச்சரின்...

இலங்கையில் நெல் பயிரிடுவதற்கு யூரியா மற்றும் எம்.ஓ.பி வழங்குவதற்கு ரஷ்ய நிறுவனம் ஒன்றின் ஊடாக தூதுவர் அங்கு சென்றார். குறைந்த விலையில் வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

இந்நிலையில், ரஷ்ய அரசின் வேலைத்திட்டம் குறித்து தூதுவர் விவாதித்துக் கொண்டிருந்தபோது, அமைச்சர் அமர்ந்திருந்த கதிரைக்குப் பின்னால் அலுமாரியில் இருந்த படத்தை பார்த்து, அந்த படத்தில் இருப் பது யார் என்று கேட்டார். அந்த அலு மாரியின் இடது பக்கத்தில் படம் இருந்தது.

எந்த படத்தைப் பற்றி கேட்கிறீர்கள் என்று தூதுவரிடம் அமைச்சர் கேட்டார். மஞ்சள் நிற ஆடை அணிந்த பெண் ஒருவரின் படம் என்று தூதுவர் கூறினார்.

அவரது கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அட... அதுதான் நம் நாட்டில் உள்ள அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜூலி சுங்-என்றார்.

அமைச்சர் எதிர்பார்க்காத ஒரு கேள்வியை ரஷ்யத் தூதுவர் கேட்டார். ஏன் அந்த படத்தை அங்கே வைத்திருக்கிறீர்கள் என்று தூதுவர் கேட்டார்.

தூதுவரை சங்கடப்படுத்தாத வகையில் அமைச்சர் பதிலை அளித்தார். "அவருடையது மட்டுமல்ல. உங்கள் படமும் என்னிடம் உள்ளது. அதுதான் பதில். அந்தப் படம் நாற்காலியில் தொங்கிக் கொண்டிருக்கிறது" என்று வலது பக்கத்தில் இருந்த தூதுவரின் படத்தை அவருக்குக் காட்டினார் அமைச்சர்.

உரக்கச் சிரித்த தூதுவர் கைதட்டி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். "அமெரிக்க அரசாங்கம் கடந்த காலத்தில் எங்களுக்கு நிறைய உதவியது. குறிப்பாக அமெரிக்க உதவி அமைப்பின் கீழ், தூதுவரும் அதற்காக கடுமையாக உழைத்தார். அப்போது எடுக்கப்பட்ட படம் இங்கு வைக்கப்பட்டுள்ளது" என்று அமெரிக்க தூதுவரின் படம் தொடர்பான கதையை அமைச்சர் கூறினார்.

கடந்த பருவத்தில் நெல் செய்கைக்கு அமெரிக்க அரசாங்கம் வழங்கிய உரமானியம் மற்றும் பொருளாதார பிரச்னைகளை தீர்க்க அமெரிக்க உதவியின் கீழ் வழங்கப்பட்ட உதவிகளை பாராட்டிய அமைச்சர், அமெரிக்காவுக்கு தனது நன்றியை தெரிவித்ததுடன், தூதுவர் சற்று புன்னகையுடன் அமைச்சருக்கு கற்பனை செய்ய முடியாத அறிவுரையை வழங்கினார்.

"முடிந்தால் அவளை ஒழித்து விடு. பல பிரச்னைகள் தீர்க்கப்படும்" என்பதே தூதுவரின் ஆலோசனை.

இராஜதந்திர உறவுகளைப் பேணும் இலங்கையின் கொள்கை குறித்து ரஷ்ய தூதுவரிடம் அமைச்சர் பின்வருமாறு கூறினார்.

"நாம் ஒரு நடுநிலை நாடு. எல்லோருடனும் நன்றாகப் பழகுங்கள். நீங்கள் எங்களுக்கும் அதேதான். அவளும் அதேதான். மற்ற நாடுகளும் அப்படித்தான். நாங்கள் அனைவரையும் ஒரே மாதிரியாக நடத்துகிறோம்" என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# கீரிச் சம்பா தட்டுப்பாடு

கொழும்பு, மே. 07

சந்தையில் கீரிச் சம்பாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆலை உரிமையாளர்கள் அரசின் கட்டுப்பாட்டு விலையை மீறி கீரிச் சம்பா விற்பனை செய்வதால் விலை 25 முதல் 30 ரூபாய் வரை உயர்ந்துள்ளதாகவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# சிறி சபாரத்தினத்தின் நினைவு நேற்று காலை கோண்டாவிலில்



யாழ்ப்பாணம், மே. 07

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின்(ரெலோ) முன்னாள் தலைவர் சிறி சபாரத்தினத்தின் 37ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

கோண்டாவில், அன்னங்கை பகுதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது ஈகச்சுடர் ஏற்றப்பட்டு சிறி சபாரத்தினத்தின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. ரெலோவின் பேச்சாளர் கு.சுரேந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான சபா.குகதாஸ், விந்தன் கனகரட்ணம், பிரசன்னா இந்திரகுமார் வலி.கிழக்கு முன்னாள் தவிசாளர் தி.நிரோஷ் உள்ளிட்ட ரெலோவின் உறுப்பினர்கள், மூத்த போராளிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# இலங்கையிலிருந்து மேலும் 100 பேர் தமிழகத்தில் தஞ்சம்



சென்னை, மே. 07

இலங்கையில் இருந்து நேற்று அதிகாலை படகு மூலம் பயணித்த 10 பேர் தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து படகு மூலம் புறப்பட்டவர்களே இவ்வாறு தமிழகத்தின் இராமேஸ்வரத்தை அண்டிய தீடையில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

இலங்கை - இந்திய இடையே உள்ள தீடைகளில் இந்தியாவின் ஆளுகையில் உள்ள 3ஆவது தீடையில் இவர்கள் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேலும் ஒரு படகில் தமிழகம் நோக்கிப் பயணிக்க முற்பட்ட 6 பேர் மன்னாரில் கடற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# பஸிலின் தலையீடு மீண்டும் அதிகரிப்பு

## பெரமுனவுக்குள் கருத்து முரண்பாடு



கொழும்பு, மே. 07

**சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் கட்சியின் அடுத்த தலைவராக முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை கொண்டு வருவதற்கு தயாராகி வரும் நிலையில், கட்சிக்குள் கடும் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.**

பொதுஜன பெரமுனவின் மே தின கூட்டத்தில் பஸில் ராஜபக்ஷவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டமை குறித்து அந்தக் கட்சிக்குள் கேள்வி எழுந்துள்ளது.

பொதுஜன பெரமுன மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை அழிக்கும் நடவடிக்கையாக இது உள்ளதாகச் சிலர் குற்றம் சுமத்துவதாகவும், ஒரு சில சிரேஷ்ட எம்.பிக்கள் கூட பஸில் ராஜபக்ஷவுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் எனவும் அறிய முடிகிறது.

பஸில் ராஜபக்ஷவின் தலையீட்டினால் குறிப்பிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் செயல்பாடுகளில் இருந்து விலகியுள்ளதாகவும், தலைமை மாற்றம் ஏற்பட்டால் அது கட்சியில் பிளவை ஏற்படுத்தும் என்ற கருத்துக்களை அவர்கள் கூறியுள்ளதாகவும் அறிய முடிகிறது. (அ)

# அரியாலையில் விபத்து; இளம் குடும்பஸ்தர் பலி!

யாழ்ப்பாணம், மே. 07

யாழ்ப்பாணம், அரியாலை பூம்புகார் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளதோடு அவரது மனைவி படுகாயமடைந்தார்.

நேற்று முன் தினம் மாலை மோட்டார் சைக்கிளும், ஹைஏஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய அற்புதசிங்கம் சுதர்சன் என்பவர் உயிரிழந்தார். அவரது மனைவி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கதிர்காமம் பாதயாத்திரை சந்நிதியிலிருந்து ஆரம்பம்!



யாழ்ப்பாணம், மே. 07

இந்துக்களின் பாரம்பரிய கதிர்காமத்திற்கான பாத யாத்திரை வழமைபோல இம்முறையும் யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஜெயா வேல்சாமி தலைமையில் நேற்று சனிக்கிழமை விசேட பூசையுடன் ஆரம்பமாகியது.

காலை 7.30 மணியளவில் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து விசேட பூசையுடன் அரோஹரா கோஷம் விண்ணைப் பிளக்க ஆரம்பமானது. யாத்திரீகர்களின் உறவினர்களும் வந்து ஆரத் தழுவி கண்ணீர் மல்க வழியனுப்பி வைத்தனர்.

பாதயாத்திரை தொடர்பான பதாகைகள் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலய வளாகத்தில் கட்டப்பட்டிருந்தன.

கதிர்காமத்தில் கன்னிக்கால் நட்ட நேற்றைய தினம் இப் பாதயாத்திரை ஆரம்பமானது.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை ஆகிய 7 மாவட்டங்களையும் இணைத்து 55நாட்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815கிலோமீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப் புனித பாதயாத்திரை இலங்கையின் மிக மிகநீண்ட தூர கதிர்காம பாத யாத்திரையாகக் கருதப்படுகின்றது.

ஆனால் இம்முறை கதிர்காமம் ஆடிவேல்விழா உற்சவ காலம் ஒரு மாத காலம் முன்கூட்டியே அறிவித்ததால் பாதயாத்திரை காலத்தை 43 நாட்களாக சுருக்க வேண்டி நேரிட்டது.

கடந்த 23வருடங்களாக சைவமரபு பாரம்பரியத்துடன் இடம்பெற்றுவரும் இப் பாதயாத்திரை கதிர்காமக் கந்தனாலய கொடியேற்றத் தினத்தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும்.

சந்நதியில் நேற்று காலை நடைபெற்ற விசேட பூசையினைத் தொடர்ந்து மோகன்சுவாமியால் வேலாயுதமானது கதிர்காம பாதயாத்திரைக் குழுத் தலைவர் ஜெயாவேல்சாமியிடம் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

தொடர்ந்து பாதயாத்திரை வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்து பின்னர் அங்கிருந்து ஜெயாவேல்சாமி அணியில் வழமையாக பயணிக்கும் நூறு பக்தர்களுடன் மீண்டும் பாதயாத்திரை இடம் பெறும். (அ-02-03)

# கதிர்காமம் பாதயாத்திரை செல்வோருக்கு ஓம் ரீவி நிறுவனத்தினால் பொதி வழங்கல்

யாழ்ப்பாணம், மே. 07

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து நேற்றுக் காலை கதிர்காம பாத யாத்திரை ஆரம்பமாகியுள்ள நிலையில் பாத யாத்திரை செல்லும் அடியார்களுக்கு ஓம் தொலைக்காட்சி நிறுவனத்தினரால் உணவுப் பண்டங்கள் அடங்கிய பொதி வழங்கப்பட்டது.

கதிர்காமத்துக்கான பாதயாத்திரை வழமைபோல இம்முறையும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஜெயா வேல்சாமி தலைமையில் ஆரம்பமானது.



பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு ஓம் ரீவி நிறுவனத்தினரால் உணவுப் பண்டங்கள், குடிதண்ணீர் போத்தல் அடங்கிய பொதி வழங்கப்பட்டது.

டான், ஓம் தொலைக்காட்சி குழுமத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இளையதம்பி செல்வச்சந்திரன் பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு பொதியை சந்நிதி ஆலய முன்றிலில் வைத்து வழங்கினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.